# தமிழரசு


1-8-1984 75 காசு











மேதகு குடியரசுத் தலைவர் திரு ஜியானி ஜெயில்சிங் அவர்களை, 14-7-'84 அன்று, மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள், மற்றும் அமைச்சர் பெருமக்கள் வரவேற்றனர்.



சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 22-7-'84ல் நடைபெற்ற அரசு அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் கலந்து கொண்டார்.

# காமராஜர் மாவட்டம்

கர்மவீரர் காமராசரின்பிறந்த நாளான 15.7.84 அன்று, அவர் பெயரால் அமைந்திடும் 'காமராசர் மாவட்டம்' அமைப்புப் பணிகளின் தொடக்கவிழா சிறப்புற நடைபெற்றது.

காமராசர் பிறந்த ஊரான விருதுநகரில் உள்ள கே.வி.சாலா உயர்நிலைப்பள்ளிவிளையாட்டுத் திடலில், தியாகி சங்கரலிங்கனார் அரங்கில் இவ்விழா தமிழக அரசின் சார்பில் நிகழ்வுற்றது.

விழாவையொட்டி - விருதுநகர் இது வரை இல்லாத அளவிலே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் பல வண்ணக் கொடிகள் பசுந்தளிர்த் தோரணங்கள், வண்ண விளக்குச் சரங்களாலேயே வகையுற அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவுகள், வாழ்த்துச் சுவரொட்டிகள் காணப்பட்டன.

'சத்துணவளிக்கும் சரித்திர நாயகனே வருக!'... 'குடும்பத்திற்கு ஒரு வீடுதரும் புரட்சித் தலைவரே வருக!'..'முதியோர்க்கும் உணவுதரும் முதல்வரே வருக!'.. 'அண்ணாவின் இதயக் கனியே வருக!'...'தன்னிறைவுத் திட்டம் கண்ட தலைவரே வருக!' -என்பன போன்ற வாசகங்கள் கொண்ட பதாதைகள் பல, விருது நகரெங்கும் வீதிக்கு வீதி கட்டப்பட்டிருந்தன.

மேதகு தமிழ்நாடு ஆளுநர், திரு. எஸ்.எல்.குரானா, மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர்., மாண்புமிகு இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஆர்.வெங்கட்ராமன், ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்த 'காமராசர் மாவட்டம்' அமைப்புப் பணிகள் தொடக்க விழா-காமராசர் பிறந்த நாள் விழா அன்று காலை 9 மணியளவில் விருதுநகர் தனுஷ்கோடி குழுவினரின் நாயன இசையோடு தொடங்கியது.

அதைத் தொடர்ந்து-ஏழைகளின் தோழர், பாட்டாளிகளின் கூட்டாளி, பச்சைத் தமிழர் என்றெல்லாம் புகழப்பெற்ற காமராசரின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களை விளக்கிடும் வில்லுப்பாட்டு இசை நிகழ்ச்சியும் நடை பெற்றது. இதில் பங்கேற்ற சிவகாசி காந்திமதி, இராணி, ஈஸ்வரி குழுவினர் தம் திறமையால் பார்வையாளர்களாலே பெரிதும் கவரப்பட்டனர்.

காமராசரின் வாழ்விலே நடந்த சம்பவங்களை உலகறியச் செய்யும் 'பெருந்தலைவர் காமராசர் வாழ்க்கை வரலாற்றுப் புகைப் படக்கண்காட்சி'யொன்றை, இவ்விழாவை யொட்டி, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ.அரங்கநாயகம் திறந்து வைத்தார்.

செய்தித்துறை துணை இயக்குநர் திரு.வி.டி.வீரப்பன் முன்மொழிய மக்கள் தொடர்பு அலுவலர் திரு. சு.மீ. சண்முகசுந்தரம் வழிமொழிய- மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் தலைமையில் கருத்தரங்கம் தொடங்கியது.


மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.குருமூர்த்தி இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். அப்போது அவர், ''72 ஆண்டுக்காலமாக இருந்துவரும் இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படுவது நிர்வகிப்பை எளிதாக்கி, இப்பகுதி மக்களை ஏற்றம்பெறச் செய்யும் பொருட்டேயாகும்'' என்று குறிப்பிட்டார்.

விழாத் தொடக்கவுரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறைஅமைச்சர் திரு. எச்.வி. ஹண்டே: ''காமராசரைப் போன்ற ஒரு தலைவர் தோன்றியிராவிட்டால் தமிழகம் மட்டுமல்ல; இந்தியாவே பல சங்கடங்களைச் சந்திக்கவேண்டியிருந்திருக்கும். சென்னை மாகாணப் பிரிவினையின் போது, நிஜலிங்கப்பா பிரகாசம் போன்ற டில்லியில் இருந்த தலைவர்களெல்லாம் ஒன்றும் புரியாமல் விழித்தபோது தக்க வழிகளைச் சொல்லிப் பேருதவி புரிந்த பெருமை காமராசருடையது. தமிழகம் தொழில் வளம் மிகுந்ததாக இருக்க அவர் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். இந்தியப் பிரதமர்களாக இருவர் பதவிபெற அவரே மூல காரணமாக இருந்தார். இப்படிப்பட்ட பெருந்தலைவர் காமராசர் பெயரால் இந்த மாவட்டம் அமைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வரை நாடே வாழ்த்து



கிறது'' என்றெல்லாம் கூறிப் பாராட்டினார்.

'மக்கள் நோக்கில் காமராசர்' என்ற பொதுத்தலைப்பில்நடந்த கருத்தரங்கில் - 'செயல்வீரர்' என்ற தலைப்பில் பேசிய திரு. ப.நமசிவாயம் - ''இந்த மாவட்திலே பிறந்த ஒரு வியாபாரி, கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் நாணயத்தையும் அடக்க விலைக்கே விற்றுப் பெருமை கொண்டிருக்கிறார்; அவரே காமராசர். நேருவுக்குப் பிறகு இந்தியா சிதைந்து போகும் என்றெல்லாம் எழுதிய வெள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் வியக்கும்படி இந்தியாவைக் காத்த தனித் திறமையாளரான அவர் பெயரால் மாவட்டம் காணும் தமிழக முதல்வர், வரலாற்றிலே தனி இடம் பெறுகிறார்'' என்றார்.





'ஏழை பங்காளர்' என்ற தலைப்பின்கீழ் பேசிய திரு.செங்கோட்டை ஜனார்த்தனம் -''ஒரு கொள்கையைச் சரியாகப் பரப்ப வேண்டுமானால் முதலில் அதை நாமே கடைப்பிடித்துக் காட்ட வேண்டும் என்று கூறிய, காந்தியடிகளின் வழி நடந்தவர் காமராசர் அவரைத் தந்தையார் காமாட்சி என்று அழைத்தார். தாய் காமராஜ் என்று அழைத்தார்; நாடு கர்மவீரர் என்று அழைத்தது. தன்னலம் கருதாத அந்தத் தனிப் பெரும் தலைவனின் பெயரால், அவர் பிறந்த நாளான இன்று மலர்கிற இந்த மாவட்டம், அவருடைய புகழைக் காக்கும்; இதனை உருவாக்கும் தமிழ்நாடு முதல்வருக்கு மென்மேலும் பெருமை சேர்க்கும்'' என்று தன் உரையில் தெரிவித்தார்.

'நாட்டுப் பற்றில் உயர்ந்தவர்' என்னும் தலைப்பில் பேசுகையில் திருமதி அனந்தநாயகி குறிப்பிட்டதாவது: ''கடைசி வரை திருமணம் கூட செய்து கொள்ளாமல் இந்த நாட்டுக்காக உழைப்பதே தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த தலைவர் காமராஜர். எங்களையெல்லாம் உருவாக்கிய அவர், தமிழகம் தொழில்துறையில் தலை நிமிரத் தட்டுப்பாடில்லாமல் மின்சாரம் வேண்டும்; நீர்ப்பாசனம் வேண்டும் என்று கண்டுபிடித்து அதன் அடிப்படையிலேயே திட்டங்களைத் தீட்டினார். அகில இந்தியாவிலேயே எங்கும் இல்லாதபடி பத்தாவது வரை இலவசப் படிப்புத் தந்து, சீருடை தந்து இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களைக் காத்த அவர் பெயரால் மாவட்டம் அமைவது தமிழினத்திற்கே பெருமை சேர்ப்பதாகும்.''

'பண்பாளர்' என்ற தலைப்பில் திரு. வலம்புரிஜான் எம்.பி.பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''விருதுபட்டி என்றிருந்த இந்த ஊரிலே விழுந்த விதை என்றாலும், விந்தியத்திற்கப்பாலும் தன் விழுதுகளை இறக்கியது. இத்தகைய பெருமை மிக்க காமராசர் பிறந்த இந்த ஊர்தான் பெயரிலேயே விருதைக் கொண்ட விருதுநகர் ஆயிற்று. எனக்கு எதையும் பேசப் பிடிக்காது; செய்யத்தான் பிடிக்கும் என்று அடிக்கடி கூறும் அவர் எதையும் சுருக்கமாகத்தான் பேசுவார். ஆனால் சுருக்கென்று தைக்கும் விதத்தில் பேசும் சூத்திரம் தெரிந்தவராக இருந்தார். அவர் பேச்சில் பாதரசப் பளபளப்போ வசந்தகால வசீகரமோ இருந்ததில்லை; உறுதி இருந்தது. உண்மை இருந்தது. அரசியல் பிரச்னைகளில் சிலபேர் வழுக்கிக் கொண்டே போவதைப் பார்த்து விளக்கெண்ணெய் கூட வெட்கப்படும்; 1931ல் முதன்முதலாக மேடையேறிப் பேசத் தொடங்கிய காமராசரோ, மனதில் பட்டதைப் பளீரெனச் சொல்லி விடும் பக்குவம் பெற்றிருந்தார். அவர் பெயரால் எடுக்கப்படுகிற இந்த விழா, கறுப்பு மலருக்கு ஒரு சிவப்பு ரோஜா சிறப்புற எடுக்கும் விழா!''



கருத்தரங்கின் முடிவாக, 'அரசியல் அறிஞர்' என்ற தலைப்பின் கீழ் திரு. ஆலடி அருணா எம்.பி. பேசியதாவது:

''தனக்கென வாழாத் தன்னிகரற்ற தலைவராம் காமராசர் பெயரிலே தனி மாவட்டம் அமைத்துப் பெருமை கொள்கிறது தமிழக அரசு. அவர் பெயரால் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் கண்ட பெருமையும் இந்த அரசுக்கு உண்டு. காட்சிக்கு எளியவராயிருந்த காமராசர், அரசியல் மேதை மூதறிஞர் என்றெல்லாம் பாராட்டப்பட்ட ராஜாஜியையே பல பிரச்னைகளில் வெற்றி கண்டவரென்றால், இது ஒன்றேபோதும் அவரது அரசியல் மேதையை அவனிக்கு உணர்த்த. ஜனநாயக சோஷலிசத்தில் பெரும் பற்றுக் கொண்டிருந்த அவர், தமிழ்நாட்டிலே மட்டுமல்ல; இந்தியாவிலே தனி மனித ஆதிக்கம் ஏற்பட்டு விடக் கூடாதென்பதில் கவன



மாக இருந்தார். ஜனநாயகத்தைக் காத்தார். அவர் பெயரால் இன்று மலரும் இந்த மாவட்டம் எல்லா வளமும் பெற வாழ்த்துகிறேன்.''

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் தமது தலைமை உரையிலே தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு:

''ஆளும் கட்சியைச் சேர்ந்தோர், எதிர்க்கட்சித் தலைவருக்கு விழா எடுப்பதென்பது, இந்த ஆட்சிக்கு முன்பு இருந்ததில்லை. இன்றைய அரசின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இன்று மலரும் இந்தப் புதிய மாவட்டத்திற்கு பெருந்தலைவர் காமராசர் பெயரை வைக்கிறாரென்றால், இது இந்த அரசின் நாகரிகத்தை, அரசியல் பண்பாட்டைக் காட்டுவதாகும். ஒன்பதாண்டுக் காலம் தமிழக முதல்வராக இருந்த காமராசர் அவர்கள், ஏழைக்குக் கல்விக்கண் திறந்த ஏந்தலாக வாழ்ந்தார். காமராசரின் அத்தகைய நினைவுகளை - கனவுகளைச் செயல்படுத்தும் விதத்திலேதான், நடைமுறைப்படுத்தும் விதத்திலேதான் இன்றைய தமிழக முதல்வர் அவர்களும் ஆட்சி நடத்தி வருகிறார் என்பதை உலகறியும். தமிழ்ச்சமுதாயம் ஏற்றம் பெறத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்த காமராசரின் புகழ் இந்த மாவட்டம் அமைவதன் மூலம் இன்னும் வளரும்-வலுப்பெறும்.''

—இவ்வாறு மாண்புமிகு கல்வியமைச்சர் பேசினார்.

காலை நிகழ்ச்சிகளின் முடிவில் செய்தித்துறை இயக்குநர் திரு, சி. என். கிருஷ்ணபாரதி இ. ஆ. ப. நன்றி கூறினார்.

**மாலை நிகழ்ச்சிகள்:**

காமராசர் மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழாவின் மாலை நேர நிகழ்ச்சிகள் **15.7.84** மாலை **3** மணியளவில் தொடங்கின.

சுப்பையா நாடார் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து ஊர்க்காவல் படையினர், என். சி. சி., சாரணர் மாணவ, மாணவியர் பங்கேற்ற மாபெரும் ஊர்வலமொன்று மாலை நிகழ்ச்சிகளின் முதல் கட்டமாகத் தொடங்கியது. கரக ஆட்டம் சிலம்பாட்டம் அலங்கார வண்டிகளெல்லாம் உடையதாகச் சீருடை அணிந்த சின்ன அரும்புகள் பல்லாயிரவர் நடத்திய அந்தச் சிங்கார ஊர்வலம் 4 மணியளவில், கே. வி. சாலா உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலில் அமைந்திருந்த தியாகி சங்கரலிங்கனார் அரங்கு வந்து சேர்ந்தது.

அதன் பின், கலைமாமணி திரு. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவினர் நாயன இசை மழை பொழியலாயிற்று.



7 மணியளவில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் வரவேற்புரையோடு புதிய மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழா - காமராசர் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

முதலாவதாகப் புதிய மாவட்ட அமைப்புப் பணிகள் குறித்த விவர அறிக்கையைத் தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம் இ. ஆ. ப. படித்தார்.

''மிகப் பெரிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தை எப்படிப் பிரிப்பது, என்ன பெயர் வைப்பது என்று நாங்களெல்லாம் குழம்பிக்கொண்டிருந்த நேரத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்தான் இதை மூன்று



மாவட்டங்களாகப் பிரிக்கலாம் என்றும், காமராசர், ராமநாதபுரம், பசும்பொன்முத்துராமலிங்கம் பெயர்களை இந்த மாவட்டங்களுக்குப் பெயராக வைக்கலாமென்றும் ஆலோசனை கூறியுதவினார். இன்று இந்த மாவட்டம் அமைவதன் மூலம் இப்பகுதி மக்கள் தங்கள் குறைகளை-கோரிக்கைகளை - தேவைகளைத் தெரிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவரைத் தேடி வெகுதூரம் மதுரைக்குச் செல்லவேண்டிய தொல்லை அடியோடு நீக்கப்படுகிறது ''என்று மாண்புமிகு உணவமைச்சர் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார். ''பச்சைத் தமிழர் என்று தந்தை பெரியாரால் போற்றப்பட்ட, கல்லூரி சென்று படிக்காவிட்டாலும், மக்களை-மக்கள் பிரச்னைகளை மிக நன்றாகப் படித்திருப்பவர் காமராசர் என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட காமராசரின் பெயரை அவர் பிறந்த இம்மாவட்டத்திற்கு வைப்பது மிகப்பொருத்தமானது'' என்றும் அவர் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

பின்னர்-மேதகு தமிழக ஆளுநருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ். குருமூர்த்தி இ. ஆ. பவும், சிறப்பு வருவாய் ஆணையர் திரு ஏ. பத்மநாபன் இ. ஆ. ப. மாண்புமிகு தமிழக முதல்வருக்கும், மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கு மாவட்டத் தனி அலுவலர் திரு எல். என். விஜயராகவன், இ. ஆ. ப. வும் விழாக்குழு சார்பில் மாலைகள் அணிவித்தனர். மாவட்டப் பிரிவினை நினைவுப் பரிசுகள் வழங்கினர்.

விழாத் தலைமையேற்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. திரு.எஸ்.எல். குரானா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்தியாவின் மிகப் பெரிய தலைவர்களில் ஒருவரான காமராசரின் பெயரால் இந்த மாவட்டம் அமைவது வரவேற்கத்தக்கது. எளிமையும் பெருமையும் உடைய காமராசர் இந்த விருது நகரிலே பிறந்தாலும், சென்னையில் வளர்ந்து, டில்லிவரை சென்று தன் புகழை நிறுவியவர். அவர் சிறந்த தேசபக்தராகத் திகழ்ந்தார். காந்தியாரின் மென்மையும் படேலின் உறுதியும் நேருவின் திறமையும் அவருக்கிருந்தது.

"தொழில் வளம் மிக்கதாகத் தமிழகத்தை மாற்றிக் காட்டிய காமராசர் பெயரால் இந்த மாவட்டத்தை அமைத்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன்




அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

"பெரிய மாவட்டங்களை இப்படிப் பிரித்து சிறிய மாவட்டங்களை உருவாக்குவதன் மூலம் எளிதில் மக்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்; நிர்வாகச் சிக்கல்களும் நீங்கும். மிகப் பின் தங்கிய இந்த மாவட்டத்தின் வளர்ச்சிப்பணிகள் ஓங்கும். குறைபாடுகள் நீங்கும். அதற்காக இந்த அரசு பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்கிற நம்பிக்கை எனக்குண்டு."

விழா மேடையில், கர்மவீரர் காமராசர் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் பேசுகையில் — "மிகச் சிறந்த பல பண்புகளைப் பெற்றிருந்தகாமராசரோடு முப்பதாண்டுக் காலத்திற்கு மேலாக நெருங்கிப் பழகியவன் நான். அவர் இந்த நாட்டுக்குச் செய்த தொண்டுசரித்திரத்திலே பொறிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த மாவட்டத்தைப் பிரிக்க அவர் முதல்வராயிருந்த காலத்திலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. என்றாலும் முற்றுப்பெறவில்லை. காமராசரின் எண்ணங்களை - திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

அடுத்து காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் எம்.எல்.ஏ "இராமராஜ்யம் அமையவேண்டும் என்று காந்தியார் விரும்பினார். அதைச் செயல்படுத்த காமசாரர் முயன்றார். இன்று அந்த முயற்சி சிறப்புறச் செயற்படுத்தப்பட்டு வருவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன்" என்றார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உரையாற்றிய திரு.எஸ்.ஏ.பெருமாள்-"இந்த மாவட்டப் பிரிவினை மூலம் நமது நீண்ட காலக்கனவு நிறைவேறி வருகிறது. எல்லாவிதச் சலுகைகளை



யும் பெற அரசு மேற்கொள்ளும் நற்காரியங்களுக்கு எங்கள் கட்சி துணை நிற்கும்" என்று குறிப்பிட்டார்.

முற்போக்கு முஸ்லிம் லீக் கட்சி சார்பில் திரு.செங்கம் ஜப்பார், கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி சார்பில் திரு. பிரான்சிஸ் ரயான், திராவிடர் கழகம் சார்பில் திருவாரூர் திரு. தங்கராசு, சுதந்திர போராட்ட வீரர்கள் சார்பில்திரு தனுஷ்கோடி ராஜா, காமராஜ் காங்கிரஸ்சார்பில் திரு. கே. பாரமலை எம்.எல்.ஏ.,இந்தியதேசியக் காங்கிரஸ் கட்சி சார்பில் திரு. பழநி யாண்டி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் பொதுச்செயலர் திரு. ப.உ. சண்முகம் ஆகியோர், காமராசர் மாவட்டம் துவக்குவதை வரவேற்று வாழ்த்திப் பேசினார்கள்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் எம்.எம்.ஏ., பேசுகையில்-"மறைந்த சரித்திர நாயகனின் பெயர் என்றும் மறையாதிருக்க வேண்டும் என்கிற கருத்திலே இந்தக் காமராசர் மாவட்டத்தை அமைத்துள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எங்கள் மாவட்டத்தின் சார்பிலும், கட்சியின் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த மாணவர் தனிப்பயிற்சித் திட்டம் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். பெருந்தலைவர் காமராசர் மட்டும் இன்று இருந்திருந்தால், ஏழை எளியவர்க்கு உதவும் இந்த மகத்தான திட்டத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்திருப்பார்!" என்றார்.

மாண்புமிகு சட்டமேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. பேசியதாவது:

"பெருந்தலைவர் காமராசர், தொண்டராக இருந்து தலைவராகி, தலைவர்க்கெல்லாம் தலைவரானவர். அதேபோல் விருதுப்பட்டி என்ற இந்த ஊர், விருது நகராகி, இப்போது காமராசர் மாவட்டமாக உயர்வடைந்திருக்கிறது. காமராசர் சந்நிதானத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களும் வந்திருக்கிறார்கள். இதிலே ஒன்றுபடாதவர் தமிழராக இருக்க முடியுமா?

"ராமநாதபுரத்தை இரு



மாவட்டங்களாகப் பிரிக்க எடுத்த முயற்சியில் காமராசர் தோற்று விட்டதாக இங்கே ஆர்.வி.பேசுகையில் குறிப்பிட்டார். அவராலேயே முடியாததைச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வரைப் பாராட்டுகிறேன். சரித்திரப் பிரசித்திபெற்ற இந்நிகழ்ச்சியில் பங்கேற்றதை என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன்''.

காமராசர் மாவட்டம் அமைப்புப் பணிகளைத் தொடங்கி வைத்தும் மாணவர் தனிப்பயிற்சித் திட்டத்தைத் துவக்கிவைத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் விழாப் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது

''ஆட்சிப் பொறுப்பிலிருந்தாலும் சரி; கட்சித் தலைமை ஏற்றிருந்தாலும் சரி; எந்த ஒரு மனிதனும் தனிப்பட்ட வகையில் நிர்வாகம் பண்ணிவிட முடியாது. மக்கள் கூட்டம், அறிஞர் ஆதரவு, இளைஞர் எழுச்சி அத்தனையும் ஒன்றுபட்டால்தான் நாம் வெற்றி காணமுடியும். பெருந்தலைவர் காமராசர் வெற்றி அந்த வகையிலேதான் அமைந்தது.

''மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், இராமநாதபுரம் மாவட்டப் பிரதிநிதிகள் என்னை வந்து பார்த்து இந்த மாவட்டம் பிரிக்கப்படவேண்டியது பற்றி வலியுறுத்தினார்கள்; பொறுமையாக இருங்கள் என்றேன், இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது.

''ஒருவர் இருக்கும்போது கருத்துக் கூறுவது வேறு; அவர் மறைந்த பிறகு அவரைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது வேறு. பெருந்தலைவர் காமராசர் மீது நான் பெருமதிப்பு வைத்திருந்தேன்; அவரும் என்னிடம் அன்பு காட்டினார். அவரைப்பற்றி நான் எப்போதாவது தவறாகப் பேசியிருந்தால், இங்கே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

''காமராசர் பெயரால் புது மாவட்டம் கண்டதற்காக இங்கே எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள்; பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்பதைப் போன்றதே அது என்பதை உணர்கிறேன்.

''ஏழைகள் படிக்க வேண்டும் முன்னேற வேண்டும் என்றெல்லாம் கருதியவர் காமராசர்; ஆதலாலேயே அவர் பிறந்த இந்த நல்ல நாளில் மாணவர் தனிபயிற்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். தேர்வில் தோல்வி கண்ட மாணவர்கள் டுடோரியல் கல்லூரி சென்றால் அங்கே ஏராளமாகப் பணம் வாங்கப்படுகிறது. அதனால் அப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பு ஏழை மாணவர்கள் இந்த மையத்தில் மீண்டும் படித்துத் தேர்ச்சி பெறலாம். இப்படி ஆயிரம் மையங்கள் திறக்கப்படும்; ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 4,500 செலவிடப்படும்.

''காமராசர் இன்றிருந்தால் இத்திட்டத்தை வரவேற்று ஆனந்தக் கண்ணீர் வடிப்பார் என்று இங்கே தெரிவித்தார்கள். இதுவே எனக்குப் போதுமானது. இன்று புதிதாக மலரும் காமராசர் மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் மிகவேகமாக நடைபெறவிருக்கின்றன.''

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில், வருகை தந்தோர்க்கு நன்றி தெரித்து மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் — ''இந்தப் புதிய மாவட்ட அமைப்பு விழாவில் 22 கட்சியைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டு பங்கேற்றுள்ளனர். அவர்களுக்கெல்லாம் நன்றி. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இருவரது உள்ளமும் ஒருசேர அமையப்பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களை இந்த நற்பணிக்காக நாடே பாராட்டிப் பெருமை கொள்கிறது; வாழ்த்தி மகிழ்கிறது'' என்று குறிப்பிட்டார்.

விழா மேடையில் காமராசரின் தமக்கையார் திருமதி நாகம்மையார் கவுரவிக்கப்பட்டார். அரசு அவருக்கு உதவிப்பணமாக மாதம் ஆயிரம் ரூபாய் அளிக்குமென அறிவிக்கப்பட்டது.

விழா நிகழ்ச்சிகளின் பின், நடனமணி சென்னை சித்ரா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**இல. இராசேந்திரன்**

## பூத்து மணக்கும் சிவகங்கை

யோகி சுத்தானந்த பாரதியார்



மங்கள மான சிவகங்கை — இந்த
மாநிலம் போற்றும் சிவகங்கை
சிங்க மறக்குலத் தேவர் புரக்கச்
சிறந்து விளங்கும் சிவகங்கை!

புலவர் போற்றும் சிவகங்கை — யோக
புங்கவர் வாழ்த்தும் சிவகங்கை
கலை மணக்கும் சிவகங்கை — நல்ல
கல்வி செழித்த சிவகங்கை!

வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகையை
வகுத்த வள்ளுவக் கோட்டமிதே
கையிற் கனியென யோகவிஞ் ஞானத்தைக்
காத்தறி வூட்டும் சிவகங்கை! — அருள்
பூத்து மணக்கும் சிவகங்கை!

விசும்புயர் நேதாஜி வீரப் புகழினை
வீறிட்ட வீர மறவர் மணி
பசும்பொன் முத்துராம லிங்கமா வட்டமெனப்
பார்புகழ் ஓங்கிட வாழியவே! — சிவகங்கை
பைந்தமிழ் ஊற்றென வாழியவே!

[17-7-'84-ல் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் அமைப்பு விழாவில் பாடியது.]

# இராமநாதபுரம் மாவட்டம்

ஜூலை 16 ஆம் நாள் இராமநாதபுரம் நகரம் விழாக் கோலம் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் தோரணங்கள்! பதாதைகள்! மக்களின் அகமும் முகமும் மலர்ச்சி பெற்றிருந்தன. புதையல் கிடைத்தது போன்ற மகிழ்வு அவர்களிடம் நிரம்பியிருந்தது. தலைநகரம் தங்களுக்குக்கிடைத்து விட்டதை எண்ணிப் பெருமகிழ்வு கொண்ட மக்கள் - சேதுபதி அரங்கில் நடைபெற்ற மாவட்ட அமைப்பு விழாவுக்கு வெள்ளமெனத் திரண்டு சென்றனர்.

அவர்களது ஆர்வத்தை, கொல்லங்குடி கருப்பாயி அம்மாளின் நாட்டுப் பாடல் முழக்கம் எதிரொலித்தது.

அதன் பின்னர் நடந்த இராமநாதபுரம் நடராசன் குழுவினரின் நாயன இசை நிகழ்ச்சி ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கியது.

குறிப்பிட்டதாவது:

“தென்பாண்டி நாட்டில்இராமநாதபுரம் புகழ் பூத்த பகுதியாகத் திகழ்ந்திருக்கிறது -திகழ்ந்து வருகிறது. வீரமும் விவேகமும் இந்த மண்ணில் பொங்கிப் பெருகியுள்ளன”.

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு முன்னாள் நீதிபதி திரு மு.மு. இஸ்மாயில் அவர்கள் தெரிவித்தார்:

“இராமநாதபுர மாவட்டம் தேசிய ஒருமைப்பாட்டில் சிறந்த மாவட்டம் ஆகும். சேதுபதி மன்னராக இருந்த இந்தப் பகுதியில் சீதக்காதி என்னும் முஸ்லீம் பிரமுகர் அவருக்கு நண்பராக அமைச்சராக - ஆலோசகராக இருந்திருக்கிறார்.”

‘தமிழ் வளர்த்த சேதுபதி’ என்னும் தலைப்பில் உரையாற்

‘வள்ளல் சீதக்காதி’ என்னும் பொருளில் உரையாற்றிய டாக்டர் அப்துல்லா குறிப்பிட்டதாவது :

“சேது நாட்டில் 7 ஆண்டுப் பஞ்சம் ஏற்பட்டபோது வீட்டில் உள்ள நெல்லை எல்லாம் அள்ளித் தந்தார் வள்ளல் சீதக்காதி. செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி என்று புகழ் பெற்றார். தனக்கென வாழாதவர் அவர்.”

‘கலை வளர்த்த முகவை’ என்னும் தலைப்பில் உரையாற்ற வந்த புலவர் கல்யாண சுந்தரம், ‘தலைமை நகர் தந்த தனிநாயம்- தமிழ்நாட்டு’ அமைச்சர்களின் முதல் நாயகம்’ என்று மாண்புமிகு முதல்வரைப் பாராட்டும் பாடலுடன் தொடங்கி, மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சி அலையை உருவாக்கிவிட்டார்.

“சேதுபதி மன்னர்கள் நாடகக்

தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை து. நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

“வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் இந்தப் பகுதி மக்கள் எல்லையில்லா மகிழ்ச்சிஅடைகின்றனர்.”

தொல்பொருள் ஆய்வுத்துறையினர் உருவாக்கியிருந்த கண்காட்சியை மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்தார். அவர்

றிய திரு சோம. லெ. குறிப்பிட்டார் :

“சேதுபதிகள் தமிழ் வளர்த்தவர்கள் - தமிழை வளர்ப்பதில் சேதுபதிகளின் மனைவிகளுக்கும் பங்கு உண்டு. மதுரையில் 4 ஆம் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கிய பாண்டித் துரைத் தேவர், சேதுபதி குடும்பத்தைச் சேர்ந்தவர்.

“கவி பாரதி மதுரையில் வேலை பார்த்த பள்ளி, சேதுபதி மன்னர்களின் பள்ளி என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்ப் புலவர்களுக்கு சமஸ்தானம் அளித்தனர்சேதுபதி மன்னர்கள்”

கலையை வளர்த்தனர். மற்போர்க் கலையை வளர்த்தனர். இசைக் கலையை வளர்த்தனர்” என்று குறிப்பிட்டார் அவர்.

அடுத்து, புலவர் முஸ்தபா உரையாற்றுகையில், “இந்தப் பகுதி தேசிய உணர்வு மிக்கவர்கள் வாழ்ந்த பகுதியாகும். இங்கு புதிய புதிய தொழிற்சாலைகள் ஆயிரம் ஆயிரம் பெருக வேண்டும். அதற்கு அரசு துணை இருக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

அடுத்து, ‘வீரம் விளைந்த நிலம்’ என்னும் பொருளில் உரையாற்றிய திரு ந.ரா. முருகவேள்,



''இயல்பாகவே வீரம் செறிந்த நாடு இது. அதனால்தான் இது மறவர் நாடு எனப் பெயர் பெற்றது'' என்று தெரிவித்தார்.

அடுத்துப் பேசிய திரு முனியாண்டி, 'இந்த மாவட்டம் மனித குலத்தின் சொர்க்கமாகத் திகழும் என்பது உறுதி' எனக் குறிப்பிட்டார்.

பிற்பகலில் ஊர்க்காவல் படை, என். சி. சி., சாரணர் படை, கிராமியக் கலைஞர்கள், பொது மக்கள் பங்கேற்ற ஊர்வலம் அன்ட்ரூஸ் பெண்கள் உயர் நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டு, நீதிமன்றத் திடலை அடைந்தது. மக்கள் எழுச்சியுடன் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

பிற்பகல் 5 மணியளவில் தொடங்கப் பெற்ற ஷேக் சின்ன மௌலானா குழுவினரின் நாயன இசை, பொது மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியை நிறைத்தது.

அதன் பின், இராமநாதபுர மாவட்டம் அமைப்புப் பணிகள் தொடக்கவிழா தொடங்கியது. அமைப்புக் குறித்த அறிக்கையை திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. படித்தார்.

''இந்நாள், வரலாற்றில் ஒரு பொன்னாள்'' என்று குறிப்பிட்ட அவர் - இராமநாதபுர மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் பற்றிய புதிய திட்டங்களை எடுத்துரைத்தார்.

வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார் :

''இராமநாதபுர மாவட்டத்து மக்கள் தங்களுக்கெனத் தலைநகரம் ஒன்று இல்லாமல் பல்லாண்டுக் காலமாகத் தொல்லைகளை அனுபவித்து வந்திருக்கிறார்கள். புதிய மாவட்டப் பிரிவினைகளின் வாயிலாக இந்தத் தொல்லைகள் நீங்குகின்றன.''

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இன்று முதல் இராமநாதபுர மாவட்டம் வலிவு பெறுகிறது. இதன் மூலம் மாவட்டம் விரிவாக வளர - பரவலாக வளர- வளமாக வளர - வசதி ஏற்படுகிறது. மாவட்டங்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இனி விறுவிறுப்பாகவும் - சுறுசுறுப்பாகவும் நடைபெறும்.




''1910-ஆம் ஆண்டுக்கு முன்னர் இராமநாதபுரம் மாவட்டம் இல்லை. மதுரை மாவட்டம் உண்டு; நெல்லை மாவட்டம் உண்டு; அவற்றில் இருந்து எடுத்த பகுதிகளைக் சேர்த்து உற்பத்தி செய்யப்பட்டதுதான் இராமநாதபுர மாவட்டம். அன்று வசதி கருதி இராமநாதபுர மாவட்டம் உருவாகியது. இன்றும் வசதி கருதி அது மூன்றாகப் பிரிக்கப்படுகிறது.

''மாவட்டங்கள் பிரிக்கப்பட்டால் ரத்த ஆறு ஓடும். பிண மலை குவியும்-பீரங்கி வெடிக்கும்-துப்பாக்கி பேசும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. அது போன்ற பிரச்சினைகள் ஏற்படாதபடி - ஒரு வம்புமில்லாமல் புரட்சித் தலைவர் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இராமநாதபுர மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரித்துள்ளார்.

''இராமநாதபுரத்தை சேதுபதிகள் பலர் ஆண்டிருக்கின்றனர். 1859 முதல் 1903-க்கு இடைப்பட்ட காலத்தில் ஆண்டவர் பாஸ்கர சேதுபதி ஆவார். அவர் தான் விவேகாநந்தரை அமெரிக்காவுக்கு சமயப் பிரச்சாரம் செய்வதற்கு அனுப்பி வைத்தார். அது குறித்து விவேகாநந்தரே குறிப்பிட்டிருக்கிறார்.

''சேதுபதி மன்னர்கள், தமிழை வளர்த்தனர்; இசைக் கலையை வளர்த்தனர்; நாட்டியக்கலையை வளர்த்தனர்; வீரத்துக்கு மதிப்பளித்தனர். புலவர்களை ஆதரித்தனர்.''



அடுத்து உரையாற்றிய திரு ஆர். மார்க்கபந்து பேசுகையில் ''இத்தனை காலம் இரவல் தலைநகரைக் கொண்டிருந்த இந்த மாவட்டத்திற்கு இப்போதுதான் சுதந்திரம் கிடைத்திருக்கிறது- பின் தங்கிய சமுதாயத்திற்கு நன்மை செய்யக் கருதித்தான் இந்த மாவட்டப் பிரிவினைகள் நடைபெற்றிருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு செய்குதம்பி உரையாற்றுகையில், ''31 லட்சம் மக்கள் இந்த மாவட்ட அமைப்பினால் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று தெரிவித்தார்.

பின்னர், பாஸ்கர சேதுபதியின் திருவுருவப்படத்தை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. திறந்து வைத்தார்.

இராமநாதபுர மாவட்டத்தின் பல்வேறு திட்டப்பணிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். தொடங்கிவைத்தார்.

மாவட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 25 ஆயிரம் ரூபாய் நிதியை, சேதுபதி மன்னர் பரம்பரையைச் சேர்ந்த இந்திரா தேவி நாச்சியார், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார்.

சீதக்காதி அறக் கட்டளையின் சார்பில் மாவட்ட வளர்ச்சிப் பணிக்காக 25 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார் திரு ரஹ்மான்.

பின்னர், லெனின் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கூத்தகுடி திரு எஸ். சண்முகம் உரையாற்றுகையில், குறிப்பிட்டதாவது:

''டாக்டர் என்ற பட்டம் பெற்றதற்கு ஏற்ப, நமது முதல்வர் அவர்கள் மாவட்டப் பிரிவினையை எந்த விதமான வேதனையும் இல்லாமல் முடித்து வைத்திருக்கிறார். வெள்ளையர் ஆட்சியில் 37 ஆண்டும், நம்மவர் ஆட்சியில் 37 ஆண்டும் கடந்த பிறகு இன்று இந்த மாவட்டம் தலைநகரைப் பெற்றிருக்கிறது.''

அடுத்து, இந்தியக் குடியரசுக் கட்சியைச் சார்ந்த திரு ஆ. சக்திதாசன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''மூன்று மாவட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியிருப்பதன் வாயிலாக வேலை வாய்ப்புகள் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது''

அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் திரு எம். எஸ். கே. சத்தியேந்திரன் உரையாற்றும்போது குறிப்பிட்டார்:

வாய்மையே வெல்லும்

# நான்காவது தமிழ்நாடு சம்பள ஆணைக்குழு

'கூவம் இல்லம்', ஆடம்ஸ் சாலை, சென்னை-2.

## அறிவிப்பு

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நான்காவது தமிழ்நாடு சம்பள ஆணைக்குழு சென்னை-2, ஆடம்ஸ் சாலையிலுள்ள 'கூவம் இல்லத்தில்' இயங்கி வருகிறது. துறைத் தலைவர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சங்கங்களுக்கும் தனித்தனியாக வினாத் தொகுப்புகள் அனுப்பப் பட்டு விட்டன. பொதுமக்களும், இவ்வினாத் தொகுப்புகள் கிடைக்கப்பெறாத பணியாளர் சங்கங்களும் எழுத்து மூலமாக, நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். சம்பள ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு பொதுமக்களும் ஆலோசனைகள் ஏதேனும் இருப்பின் அனுப்பிவைக்கும்படி வேண்டப் படுகின்றனர். வினாத் தொகுப்பிற்கான பதிலை ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு, 1984 ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சம்பள ஆணைக்குழு முன் நேர்முக சாட்சியம் அளிக்க விரும்பும், பொதுமக்கள், பணியாளர் சங்கங்கள் தங்களுடைய பெயர்களை 1984 ஆகஸ்ட் திங்கள் 10-நாள் அல்லது அதற்குமுன், சம்பள ஆணைக்குழு அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம். பதிவு செய்துகொள்ளப் படுபவர் மட்டுமே பின்பு அறிவிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட நாளில் நேர்முக விசாரணைக்கு அழைக்கப்படுவர்.

எம்.ஏ. கௌரிசங்கர்
உறுப்பினர்-செயலாளர்

DIPR 35092 84 ASP




''1910-ல் இராமநாதபுர மாவட்டம் அமைந்தது என்று குறிப்பிட்டனர். 74 ஆண்டு கழித்து இன்று அலுவலகம் கிடைத்துள்ளது. என்றோ நடந் திருக்க வேண்டும்! இன்று நடந் தது குறித்து மகிழ்ச்சி; நன்றி''

அடுத்து, கிறிஸ்துவ ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு கிளமண்ட் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''மாவட்ட வளர்ச்சிக் குழுவின ரும் ஆட்சியாளரும் இந்த மாவட்ட வளர்ச்சி குறித்துக் கூறிய கருத் துக்கள் உடனடியாக நிறை வேற்றப்பட முடியாவிட்டாலும், ஒரு கெடு நிச்சயித்து அதற்கு வழி வகை காண வேண்டும்''.

அடுத்து உரையாற்றிய திரு க. சுப்பு குறிப்பிட்டார்:

''பெயர் அளவில் மாவட்ட மாக இருந்தது, இன்றுதான் முழு மாவட்டமாக வடிவம் பெற்றுள்ளது. எல்லாரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பிரச்சினைக் குத் தீர்வு காணப்பட்டுள்ளது; எல்லார் சார்பிலும் நன்றி''.

பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில், திரு எஸ். ஆண்டித் தேவர், எம். எல். ஏ. உரை யாற்றுகையில், ''புதிய மாவட்டங்களின் அமைப்புகளி னால் நிதி ஆதாரம் பெருகும்; நிர்வாகம் சீராக இருக்கும்; நேரடி யாக இருக்கும்'' என்று தெரி வித்தார்.

அடுத்து சட்டமன்ற உறுப் பினர் திரு டி. இராமசாமி உரை யாற்றுகையில் குறிப்பிட்டார்:

''1967-ல் அண்ணாவின் ஆட்சி யிலேயே இந்தப் பிரச்சினை தலை காட்டியது. 1973-ல் அது விசுவ ரூபம் எடுத்தது. 1977-ல் பிரச்சனை வந்தது. சம்பந்தப் பட்டவர்களிடம் 40 மணி நேரம் பேசினார் புரட்சித் தலை வர். 'அமைதியாக இருங்கள்; காலம் வரும்' என்று அன்று சொன்னார். இன்று அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி ஏற் பட்டுவிட்டது.''

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)



# நுழைவுத் தேர்வு அவசியமே...!

**மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**

**திரு எம். ஆர். கோவேந்தன்**

நுழைவுத் தேர்வைப்பற்றி பல்வகையான கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. நுழைவுத்தேர்வு முறையைத் தீவிரமாக எதிர்ப்பவர்களின் வாதத்தைச் சீர்தூக்கிப் பார்த்தால் அவர்களின் கருத்துக்களில் சிறிதளவும் நியாயம் இல்லை என்பதும், தனிப்பட்ட நபர்களின் அரசியல் ஆதாயத்திற்காக அவை சொல்லப்படுகின்றன என்பதும் நன்கு விளங்கும்.

நுழைவுத் தேர்வு முறையை எதிர்ப்பவர்களில் பெரும்பாலோர் இம்முறை பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மாணவர்களை வெகுவாகப் பாதிக்கும் என்ற தவறான கருத்தை மக்கள் மத்தியில் பரப்ப முயன்று வருகிறார்கள். அத்தகைய பொய்ப்பிரச்சாரத்திற்குச் சரியான விளக்கம் அளிக்கவேண்டியது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் என்ற முறையில் எனது கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், நலிந்த, பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மக்களுக்குச் சலுகைகள், வேலை வாய்ப்புகள், கல்வி வசதி ஆகியவை அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பல நல்லதிட்டங்களைச் சிந்தித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

ஏழை, எளிய, கிராமப்புற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காக வருமான உச்ச வரம்பை ரூ. 9 ஆயிரம் ஆக நிர்ணயித்து அரசாணை கொண்டுவந்தபோது சிலர் அதையும் எதிர்த்தார்கள்.

கருணாநிதி அவர்கள் இதைப்பற்றிக் கூறும்போது ரூ. 8999க்கும் ரூ.9001க்கும் இடையில் இரண்டு ரூபாய்தான் வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அதனால் இந்த உச்சவரம்பை எதிர்ப்பதாகச் சொல்லுகிறார். வரம்பு என்று வைத்தால் ஒவ்வொரு ரூபாயையும் சணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒரு அடிப்படை உண்மை. அதை அவர் நினைத்துப் பார்க்கவில்லை போலும்! வரம்பை மீறியே பழக்கப்பட்டவர்கள் இந்த வரம்பையும் நினைத்து பயப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கிராமப்புறத்து மக்களுக்காக ரூ.220 கோடியில் தன்னிறைவுத் திட்டம், ரூ. 133 கோடியில் சத்துணவுத் திட்டம் நிறைவேற்றியதோடல்லாமல், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 31 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தியவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள்.

இதைத்தவிர பிற்பட்டோர் நலத்துறையைப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையாக மாற்றம் செய்து, அதற்கென்று தனியாக ஒரு அமைச்சரையும் நியமித்தார்கள். பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்ற இளம் வழக்கறிஞர்களுக்குப் பயிற்சி கொடுப்பது, வங்கித் தேர்வுகளை நல்லமுறையில் எழுதி வெற்றிபெறப் பயிற்சி வளர்ச்சியிலும் நல்வாழ்விலும் டாக்டர் புரட்சித்தலைவர் கொண்டுள்ள தீவிர அக்கறையைக் காட்டும்.

இந்த ஆண்டு நுழைவுத் தேர்வு முறை கொண்டுவரப்பட்டதற்கான காரணத்தைச் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும்:

நேர்முகத் தேர்வு முறையில் ஏற்பட்ட சில தவறுகளால் ஆண்டுதோறும் பலரும் புகார்கள் கூறவும், நீதி மன்றம் செல்லவும் நேரிட்டது. முந்தைய தி மு.க. ஆட்சிக்காலத்தில் நேர்முகத் தேர்வுக்கு வராதவர்களுக்குக் கூட மருத்துவக் கல்லூரியில் இடம் கொடுப்பது, வேண்டியவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கொடுப்பது, வேண்டாதவர்களின் மதிப்பெண்களைக் குறைப்பது போன்ற முறைகேடுகளையெல்லாம் அறிந்திருக்கும் மக்கள் தற்போது எழுப்பிடும் குற்றச்சாட்டுகளை வைத்துக் கழக அரசையும் தவறாகக் கருதிவிடக் கூடாது என்கின்ற நிலைமையில் கல்வியாளர்கள், நிபுணர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து விவாதித்த பின்னர்தான் இந்த நுழைவுத் தேர்வு முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

பல்வேறு கல்வி நிறுவனங்களிலும், மற்ற மாநிலங்களிலும், மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பொதுவாக மூன்று முறைகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1. நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுப்பது.

2. பிளஸ் டூ மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது.

3. நுழைவுத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுப்பது.

**நுழைவுத் தேர்வு முறை பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மக்களைப் பாதிக்குமா?**

நுழைவுத் தேர்வால் பிற்படுத்தப்பட்டவர்களும், கிராமப்புற மாணவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுகின்ற எவரும் எந்த வகையில் ஏற்படும் என்று விளக்கவில்லை.

''இப்போது பாதிப்பு தெரியாது 20 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தெரியும்'' என்று கூறுபவர்கள் அதற்கான காரணத்தைக் கூறவில்லை. ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவீத இட ஒதுக்கீடும் தாழ்த்தப்பட்டோருக்கான 18 சதவீத ஒதுக்கீடும் இப்போதும் அவர்களுக்குத் தான் கிடைக்கும். இதைத்தவிர பொதுப் போட்டிக்காக (ஓப்பன் காம்பெட்டிஷன்) உள்ள 32 சதவீதத்திலும் அவர்கள் கணிசமான அளவில் வெற்றி பெற வாய்ப்புள்ளது.

பிற்படுத்தப்பட்டவர்களிலேயே வசதியும் வாய்ப்பும் உள்ள ஒரு சிலர் தொடர்ந்து இச்சலுகையைப் பெற்று வருவது நுழைவுத் தேர்வின் மூலம் நிறுத்தப்பட்டுவிடும் என்பது தான் உண்மை.

நுழைவுத் தேர்வு பற்றி மாணவர் கழகம் சமீபத்தில் நடத்திய ஆய்விலும் 100க்கு99 கிராமப்புற மாணவர்கள் இதை வரவேற்றுள்ளனர் என்ற செய்தி உண்மை நிலையை விளக்கும்.

நேர்முகத் தேர்வு முறையில்தான் கிராமத்திலிருந்து வரும் மாணவர்கள் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எழுத்துத் தேர்வுகளையே எழுதிப் பழக்கப்பட்டுள்ள, கூச்ச சுபாவமுடைய கிராமப்புற மாணவர்கள், நேர்முகத் தேர்வில் சரிவர பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்கள். அதேசமயம் நகர்ப்புற மாணவர்கள் நல்ல முறையில் பதில் கூறி விடுவார்கள். எனவே, ''நுழைவுத் தேர்வு'' முறைதான் கிராமப்புற மாணவர்களுக்கு அதிக அளவில் வாய்ப்பளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**இந்த முறை திடீரென புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ளதா?**

இந்த முறை புதிதானது அல்ல. ஏற்கெனவே சென்ற ஆண்டுவரை கர்நாடகத்தில் இருந்து வந்தது. அதை எதிர்த்து கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, நுழைவுத்தேர்வு வைத்தது சரியே என்று தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், காசி இந்துப் பல்கலைக் கழகம், அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனம், ஐ.ஐ.டி., வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி, டில்லி, மணிபால், பாண்டிச்சேரி, ஜிப்மர் மருத்துவக்கல்லூரி ஆகிய இடங்களிலும் நுழைவுத் தேர்வு முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

**மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு எழுத்துத் தேர்வு எழுதி வெற்றி பெறும் மாணவர்களுக்கு மீண்டும் ஒரு எழுத்துத்தேர்வு அவசியமா?**

மேல்நிலைப் பள்ளிகளில் குறிப்பிட்ட பாடங்களில் மட்டும்தான் தேர்வு நடத்தப்படுகிறது. ஆனால் நுழைவுத்தேர்வு முறையில், மாணவனின் பொது அறிவு, அவன் படிக்க விரும்பும் துறையைப் பற்றிய அறிவு முதலியவை சோதிக்கப்படுகின்றன.

மேலும் பள்ளித் தேர்வுகளில் விடைத்தாட்களைப் பலர் திருத்துவதால் மதிப்பெண்கள் வித்தியாசப்பட வாய்ப்புள்ளது. ஆனால் நுழைவுத் தேர்வில் விடைகள் கம்ப்யூட்டர் மூலம் மதிப்பிடப்படுவதால் கம்ப்யூட்டர் தவறு நடப்பதற்கு இடமில்லை.

உலகம் முழுவதிலும், பல துறைகளிலும், கம்ப்யூட்டர் பயன்படுத்தப்பட்டு சிறப்பான வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் கம்ப்யூட்டரையே நம்ப முடியாது என்று கூறும் இவர்களுடைய கருத்து விந்தையானது.

நேர்முகத் தேர்வில் ஒருவர் செய்யும் மதிப்பீட்டிற்கும் மற்றொருவர் செய்யும் மதிப்பீட்டிற்கும் மதிப்பெண்களில் 50 முதல் 80 சதவிதம் வரை வேறுபாடு இருந்து வருவதாக நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பணம், செல்வாக்கு, அதிகாரம் ஆகியவை நேர்முகத்தேர்வில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதாகக் குறை கூறுகிறார்கள். ஆனால் நுழைவுத் தேர்வு மூலம் கம்ப்யூட்டர் மூலம் மதிப்பீடு செய்து உண்மையிலேயே திறமைமிக்க மாணவர்களைத் தேர்வு செய்ய முடியும்.

''நேரடித் தேர்வில் ஊழல் நடந்துவிட்டது'' என்று பொய்க் குற்றச்சாட்டு கூறி மக்களைத் திசைதிருப்பி ஆதாயம் தேடுவதற்கு நுழைவுத் தேர்வு முறையில் வாய்ப்பில்லை என்பதால் குறிப்பிட்ட சிலர் இதை எதிர்க்கிறார்கள். உண்மையில் பிற்படுத்தப்பட்ட கிராமப்புறத்து மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கும் இந்த நுழைவுத் தேர்வு முறையை அரசு கைவிடாது.

இம்முறையில் பிற்படுத்தப்பட்ட மற்றும் கிராமப்புறத்து மாணவர்கள் அதிக அளவில் பயனடைவார்கள் என்பதாலும், ஏழை பணக்காரன் வித்தியாசமின்றி மாணவர்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படும் என்பதாலும் கிராமப்புற மாணவர்களுக்குப் பாதிப்பில்லாமல் தேர்வு நடத்தப்படவிருக்கிறது என்பதாலும் மக்கள் இம்முறையை முழுமனதோடு வரவேற்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.



# கோவை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

**நா. ஆதிமூலம், இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**கோயம்புத்தூர்**

**வே**ளாண்மையைப் பெருக்குவதற்கு, விதைகள், உரம், பூச்சிக் கொல்லி மருந்து வழங்குவதற்கும், வேளாண்மை விளக்கப் பண்ணைகள் வைப்பதற்கும் 1984-85வது ஆண்டிற்கு ரூ. 27,35,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

தோட்டக்கலையை வளர்ப்பதற்குக் கோவை மாவட்டத்திற்கு ரூ.7.017 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள்:**

கோவை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகளை நிறைவேற்ற ரூ.168 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. '84 ஏப்ரல் திங்களில் ரூ. 12.57 லட்சம் மானியம் வழங்கப்பட்டு இருக்கிறது.

நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டத்திற்காகப் பொள்ளாச்சி பொதுப்பணித்துறைக்கு ரூ.1.42 லட்சமும், உடுமலைப்பேட்டை பொதுப்பணித்துறைக்கு ரூ. 45 லட்சமும், பரம்பிக்குளம் ஆளியாறு பொள்ளாச்சி பொதுப் பணித்துறைக்கு ரூ. 120.31 லட்சமும், பரம்பிக்குளம், ஆளியாறு, திருப்பூர் பொதுப்பணித்துறைக்கு ரூ. 100.74 லட்சமும், தாராபுரத்திற்கு ரூ. 50 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

காடுகளைப் பாதுகாக்கவும், காட்டுப் பகுதிகளில் மரங்களை வளர்க்கவும், தேக்கு, சந்தன மரம், காகிதக்கூழ் தயாரிக்கப் பயன்படும் மரங்கள் ஆகியவற்றை வளர்ப்பதற்காகவும் கோவை வனக்கோட்டத்திற்கு ரூ. 7.98 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**சமூக நலக் காடுகள்:**

சமூகநலக் காடுகளைவளர்த்து சமுநாயச் சொத்தைப் பெருக்கவும்,அதன்மூலம் எரி சக்திக்கான விறகுகளைப் பெருக்கவும், சமூக நலக் காடுகள் வளர்ச்சித் திட்டம் வனத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. இதற்காகக் கோவை மாவட்டத்திற்கு ரூ. 15.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**ஊரக வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கீடு:**

கிராமப்புறங்களில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு கோயம்புத்தூர் கோட்டத்திற்கு ரூ. 30.58 லட்சமும், பொள்ளாச்சிக் கோட்டத்திற்கு ரூ. 21.68 லட்சமும், பல்லடம் கோட்டத்திற்கு ரூ. 22.21 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**மின் இணைப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு:**

கடைகளுக்கு, வீடுகளுக்கு, பம்ப் செட்டுகளுக்கு மின்இணைப்புத் தருவதற்காக உடுமலைப்பேட்டைக் கோட்டத்திற்கு ரூ.30 லட்சமும், நெகமம் கோட்டத்திற்கு ரூ. 25 லட்சமும், பொள்ளாச்சிக் கோட்டத்திற்கு ரூ.25 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**குடிநீர் வழங்க:**

நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகக் கோவை சிறப்புக் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 124.53 லட்சமும், கோவை நகர்ப்புற குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 40.65 லட்சமும், கோவை ஊரகக் குடிநீர் திட்டத்திற்கு ரூ. 98.02 லட்சமும், உடுமலைப்பேட்டை ஊரகக் குடிநீர்த்திட்டத்திற்கு ரூ. 149.587 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**சிறுசேமிப்பு வசூல் பணிகள்:**

கோவை மாவட்டத்தில்நடப்பு ஆண்டில் சிறுசேமிப்பு ரூ. 685 லட்சம் வசூலிக்க தமிழக அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏப்ரல் '84 திங்களில் ரூ. 139.68 லட்சம் மொத்தம்



வசூலாகியிருக்கிறது. இதில் நிகர வசூல் ரூ. 34.63 லட்சம். கோவை மாவட்டத்தில் 147 நிலையான முகவர்களும், 278 பெண் முகவர்களும் சிறுசேமிப்பு வசூல் செய்கின்ற முகவர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

**உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள்:**

உடல் ஊனமுற்றவர்களுக்கு நடப்பு ஆண்டில் கோவை மாவட்டத்தில் மூன்று சக்கர வண்டிகள் 20 வழங்கப் பட இருக்கின்றன.

**பிற்படுத்தப்பட்டோர் மேம்பாடு:**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் கோவை மாவட்டத்தில் மாணவ, மாணவியர்களுக்கு 1984-85வது நிதியாண்டில் உபகாரச் சம்பளம் வழங்க ரூ. 35,57,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சீருடை வழங்குவதற்காக ரூ.46,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டு மனை வழங்குவதற்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சீர்பரம்பரை இனத்தவருக்கு விவசாயக் கிணறுவெட்ட கடன் வழங்க ரூ.40,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**கிராமப்புறங்களில் பொதுக்கழிப்பிடங்கள்:**

1982-83 நிதியாண்டில் ரூ. 30.587 லட்சம் செலவில் 213 வருவாய்க் கிராமங்களில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 1983-84 நிதியாண்டில் ரூ. 30.587 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 214 வருவாய்க் கிராமங்களில் பொதுக்கழிப்பிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, 167 வருவாய்க் கிராமங்களில் பொதுக்கழிப்பிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு உள்ளன. எஞ்சியுள்ள 47 வருவாய்க் கிராமங்களில் பொதுக்கழிப்பிடங்கள் கட்டிமுடிக்கப்பட இருக்கின்றன. நடப்பு ஆண்டில் விட்டுப்போன 31வருவாய்க் கிராமங்களில் புதிய பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.


**பட்டினிச் சாவைத் தடுக்க**

பட்டினிச் சாவைத் தடுப்பதற்காகத் தலா ரூ. 100 வீதம் 120 பேர்களுக்கு மொத்தம் ரூ.12000 வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**பாரதப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டப் பணிகள்:**

கோவை மாவட்டத்தில் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதி





தாக 5857.50 எக்டேர் பரப்பிற்குப் பாசனம் வழங்கவும், 43,340 டன் பயிறு வித்துக்கள் உற்பத்தி செய்யவும், 92,000 டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்யவும், 12,000 குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி உதவி செய்யவும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 15 லட்சம் உழைப்பு தினங்களைப் பெருக்கவும், 825 ஏக்கர் உபரி நிலத்தைப் பட்டா செய்து தரவும், 6957 ஆதிதிராவிடர்களுக்கு நிதி உதவி செய்யவும், 29 குடிநீர் வசதியற்ற கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கவும், 3850 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கவும், 1650 வீடுகள் கிராமப்புறங்களில் கட்டித்தரவும், 1100 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு செய்து தரவும், 40,89,000 மரங்களை நடவும், 550 எரிசாணவாயு அடுப்புக்கள் அமைத்துத்தரவும், 37,400 பேருக்கு குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்யவும், 6 வயதிலிருந்து 14 வயதுக்குட்பட்ட 12067 பேருக்கும், 30,360 முதியவர்களுக்கும் கல்வி வசதி தரவும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சாண எரிவாயுக்கலன் அமைக்கும் திட்டம் :**

கோவை மாவட்டத்தில் 1500 சாணஎரிவாயுக்கலன்கள்அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 121 கலன்கள் கட்டிமுடிக்கப்பட்டன. 483 கலன்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**சரடிமடையில் ஆரம்பச்சுகாதார நிலையம் :**

சரடிமடையில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காக ரூ.10,000 நிதியினைத் தொண்டமுத்தூர் ஊராட்சி ஒன்றியம் செலுத்தியுள்ளது. இக் கட்டடத்தை எழுப்புவதற்கு 5 ஏக்கர் நிலத்தையும் ஒதுக்கீடு செய்வதாகத் தெரிவித்துள்ளது.

**ஆதிதிராவிட நலத்துறைப்பணி**

20 ஆதிதிராவிட நலப்பணிகள் நடத்துவதற்கு ரூ. 6,82,500, மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதற்காக ரூ. 2,09,000, உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக ரூ. 16,95,000, 7 மாணவியர் விடுதிகள், 13 மாணவர் விடுதிகள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்காக ரூ. 14,57,000, சமுதாய நலக்கூடங்கள் கட்டுவதற்காக ரூ. 57,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டப்பணிகள் :**

1982-83 நிதியாண்டில் 10 பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 230 வேலைகள் ரூ. 36,60,000 செலவிலும், 1983-84 நிதியாண்டில் 19 பேரூராட்சிகளில் 412 வேலைகள் ரூ. 36- லட்சம் செலவிலும், நிறைவேற்றி முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் எஞ்சியுள்ள 27 பேரூராட்சிகளில் தலா ரூ. 2.92 லட்சம் செலவில் தன்னிறைவுத் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 143 குடிநீர் விநியோகப் பணிகள் 21,22,150- செலவிலும், 54 பாலங்கள் அமைக்கின்ற பணிரூ. 8,99,000 செலவிலும் 283 வடிகால் கட்டுகின்ற பணி ரூ.41,33,450 செலவிலும், 11ஆதிதிராவிட காலனி குடியிருப்புக்குப் பாதையமைக்கின்ற பணி ரூ. 1,43,000 செலவிலும் ஆக மொத்தம் 577 பணிகள் ரூ. 81 லட்சம் செலவிலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

# உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குங்கள்

## தேசீய சேமிப்புப் பத்திரம்

6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்



ஒவ்வொரு
ரூ.100/-ம்
ரூ.201-50
ஆக
பெருகுகிறது


உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது.
இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும்.
முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!

தொடர்பு கொள்க :
இயக்குநர்,
**சிறு சேமிப்புத் துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.

DIPR-509/83-EP

மாணவர் பக்கம்



# 'பனி மனிதன்' உண்டா?

இமயமலையில் 'பனி மனிதன்' இருப்பதாகக் கூறுகிறார்களே அது உண்மையா? 'இல்லை!' என்கிறார் மலை ஆராய்ச்சி நிபுணர் ஒருவர். அவர் பெயர் வாதிம் ரானோவ், இவர் சோவியத் மலை ஆராய்ச்சி நிபுணர். அவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் ''பனி மனிதன்'' என்று ஒன்றுமே இல்லை என்று நிரூபிக்கத் தாம் தயாராக இருப்பதாகக் கூறினார்.

''எவரெஸ்ட்'' சிகரத்தை எட்டிய ஹிலேரி குழுவினர் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து, பனிக் கட்டியில் பதிந்த மற்றப் பிராணிகளின் அடிச் சுவடுகள் மீது வெயில் படும்பொழுது, அவை 'பனி மனிதன்' அடிச் சுவடுகள் எனப்படுபவை போன்ற வடிவத்தைப் பெறுகின்றன என்பது தெரிந்தது. இமயமலையிலும் சரி, அதை அடுத்துள்ள பாமிர் மலையிலும் சரி, பனி மனிதனின் எலும்புக் கூடோ, அல்லது தனிப்பட்ட எலும்புகளோ கூடக் கண்டெடுக்கப்படவில்லை. எந்தப் பிராணியும் தன் போன்ற இனக் கூட்டத்துடன் சேர்ந்துதான் வாழும் என்று உயிரியலாளர்கள் கூறுகின்றனர். அவ்விதம் பனிமனிதர்கள் வாழும் இடங்களின் அடயாளங்கள் எதுவும் காணப்படவில்லை.

''பனி மனிதனை'' நேரில் கண்டதாகக் குறிப்பிடுவது வெறும் கற்பனையே. மலையேறிகளோ, சுற்றுலாப் பயணிகளோ அல்லது வேட்டைக்காரர்களோ பனி மனிதனைக் கண்டதில்லை. பனி மனிதன் இருப்பதாகக் கூறுவோர், இவை பழைய கற்கால ஆதி மனிதனின் மிச்ச சொச்சங்கள் என்கின்றனர்; இந்த ஊகம் தவறானதாகும்.

''மனித இனம் தான் அடைந்த ஆதாயம் எதையும் கைவிட்டதில்லை, பழைய கற்கால மனிதர்களில் ஒரு பகுதியினர், தங்கள் வாழ்வுக்குத் தேவையான கல் கருவிகள் தயாரிக்கும் முறையைத் திடீரென்று மறந்து விட்டு வன விலங்குகளின் வாழ்க்கை முறைக்குத் திரும்பி விட்டனர் என்பது நம்ப முடியாதது.

''பரிணாம முறைக்கு இது முற்றிலும் மாறுபட்டதாகும். ஒரு கூட்டம் அல்லது சில கூட்டங்கள் இவ்விதம் பின் நோக்கிச் சென்றால், அவை வாழ்க்கைப் போராட்டத்திற்கான முக்கிய சக்தியை இழந்து அழிந்து போயிருக்கும். கற்கால மனிதர்கள் உயிரியல் காரணங்களால் மட்டுமின்றி, சமூக வளர்ச்சியினாலும் நாகரிக மக்களாக மாறினார்கள் என்பதையும் மறந்து விடக் கூடாது''

இவ்வாறு அந்த நிபுணர் கருத்து தெரிவித்துள்ளார்.



## அரும்புகளுக்கு வேண்டுகோள்!

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளே
பண்பினை நாளும் கொள்ளுங்களே
கள்ளமில்லாத உள்ளங்களே-நீங்கள்
கடவுளின் புதிய வடிவங்களே!


நல்லதை நித்தமும் எண்ணுங்களே
நியாயத்தின் பக்கம் நில்லுங்களே
வல்லமை கொண்டு வாழுங்களே-நீங்கள்
வாக்கினில் நேர்மை சேருங்களே!

கற்றதற் கேற்ப உதவுங்களே
கல்வியில் சிறந்து உயருங்களே
வெற்றிப் பாதை நாடுங்களே-உம்மைப்
பெற்றவர் மகிழ்ச்சி பேணுங்களே!

— காஞ்சி கிருஷ்ணமணி



விளையும் பயிர் :



கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூர் புனித யூதாக் கல்லூரியில் பி.எஸ்.சி. பயிலும் மாணவர் எம். ஸாஹிர்ஸா. இவர் கதை, கட்டுரை, கவிதை எழுதுவதில் ஆர்வங் காட்டுகிறார். நாடகங்கள் பலவற்றிலும் நடித்துப் பாராட்டுகள் பெற்றுள்ள இவர் கூட்டங்களிலும் பேசிவருகிறார். ''என்னுடைய பொழுதுபோக்கு, சமூகத் தொண்டு'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் இவர்.



# சகலகலா வல்லவன்

அந்தச் சிறுவனுக்குப் பதின் மூன்று வயதுதான் ஆகிறது!

அவனிடத்தில் எத்தனைத் திறமைகள் வெளிப்படுகின்றன!

ஆம். அவன் ஒரு 'சகலகலா வல்லவன்' ஆக விளங்குகிறான்!

பெற்றவர்களும் மற்றவர்களும் புகழும் பெரும் 'மேதை'யாகத் திகழ்கிறான் அவன்!

அவன் யார்?

அவன்தான் பதின்மூன்று வயதிலேயே மருத்துவ மாணவனாகி விட்ட கோஸ்தியா!

ஆம். அவன் பெயர் கோஸ்தியா. சோவியத் நாட்டைச் சேர்ந்த சிறுவன்.

இதோ அவனைப் பற்றிய 'விந்தை' வரலாறு!

கோஸ்தியா பதின்மூன்று வயதிலேயே மருத்துவ மாணவனாகி விட்டான். 1982 கோடையில் அஜெர்பைஜான் அரசுமருத்துவக் கல்லூரிக்கு நடைபெற்றபுகுமுகத் தேர்வில் அவன் சிறப்பாக வெற்றி பெற்றான்.

கோஸ்தியா ஒன்றரை வயதில் எழுதக் கற்றுக் கொண்டான்; இரண்டு வயதில் படிக்கக் கற்றுக் கொண்டான். மூன்று வயதில் வரலாறு, பூகோளம் முதலியவற்றில் பொது அறிவைப் பெற்றான். அதே வயதில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள அரம்பித்தான்; நான்கு வயதில் கணிதம், உயிரியல், ரசாயனம் முதலியவற்றில் அடிப்படை ஞானத்தைப் பெற்றான்; ஐந்து வயதில் ஒரு செகண்டரிப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தான்; இரண்டே ஆண்டுகளில் நான்காண்டு ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்தான். 12 வயதில் மெட்ரிக்குலேஷன் சான்றிதழைப் பெற்றான்; 13 வயதில் மருத்துவக் கல்லூரி மாணவன் 'கார்டை'ப் பெற்றான்.

தங்கள் மகனைப்பற்றி அவன் பெற்றோர்கள்:

''சின்னஞ் சிறு குழந்தையாக இருக்கும்போதே அவன் அறிவுக் கடலில் மூழ்கி எழுந்துவிட்டான். கோஸ்தியாவின் வெற்றிகளைக் கண்டு இப்போது நாங்கள் ஆச்சரியப்படுவதில்லை. ஆனால் மற்றவர்களால் இதை நம்ப முடியவில்லை.

''கோஸ்தியாவின் நினைவாற்றல் அசாதாரண்மானது. எனினும், பெற்றோர்கள் மட்டும் பயனுள்ள முறையில் உதவினால் எந்தக் குழந்தையுமே தனது வயதுக்கு மீறிய அறிவாற்றலைப் பெற்றிருக்க முடியும் என்பதை எங்கள் சொந்த அனுபவத்திலிருந்து கூற முடியும்.

''உதாரணமாக, கோஸ்தியாவின் தங்கை இரினா இவனைப் போல இயல்பாக அவ்வளவு திறயுடையவள் என்று கூற முடியா விட்டாலும், அவளும் இரண்டு வயதில் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டாள்; மூன்று வயதில் படிக்கத் தெரிந்து கொண்டாள்.

''கோஸ்தியாவுக்கு ஒரு வயது நடக்கும்போது அவனது வியக்கத்தக்க நினைவாற்றலைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இது தற்செயலாகவே நடைபெற்றது. ஒரு நாள் நாங்கள் எங்கள் நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவர்களுடைய ஆறுவயதுபையன் தனது அகர வரிசைக் கட்டைகளைத் தரையெல்லாம் பரப்பிப் போட்டிருந்தான், அவனுடைய தாய் அவனைக் கடிந்து கொண்டாள். உடனேஅவன் உரத்த குரலில் எழுத்தை உச்சரித்தவாறு ஒவ்வொரு கட்டையாக எடுத்துப் பெட்டிக்குள் அடுக்கிக் கொண்டிருந்தான். அப்போது கோஸ்தியாவும் அங்கு இருந்தான்.

மறுநாள் காலையில் கோஸ்தியா விழித்தெழுந்ததுமே, முதல் நாள் இரவுதான் கற்றுக்கொண்ட சில எழுத்துக்களை உச்சரிக்க ஆரம்பித்தான். இதைக் கண்ட நாங்கள் உரிய காலத்திற்கு முன்னதாகவே அவனுக்கு அகர வரிசைக் கட்டைகளை வாங்கி கொடுத்துவிட்டோம்''.

—நன்றி: 'சோவியத்நாடு



# கிருஷ்ணா நதி நீர்த் திட்டப்பணிகள்

ஆர். சடகோபன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கல்பட்டு மாவட்டம்

சென்னை நகர மக்களின் நெடுங்காலப் பிரச்சனையான குடி நீர்ப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொருட்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முயற்சியால் ஆந்திர மாநில அரசும், தமிழ்நாடு அரசும் சேர்ந்து நிறைவேற்றும் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வரும் பணியின் முதல் கட்டப்பணிகள் தொடக்கமாகிவிட்டன. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு கால்வாய் வெட்டும் பணிகள் தொடங்கப் பெற்றுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சென்னை திருப்பதி கொசஸ்தல ஆறுபாலம் சாலையில் பெரிய பாளையத்தை அடுத்து சுமார் 12 கி.மீட்டரில் உள்ள தாமரைக் குப்பம்என்னும் இடத்தில்தான் வியக்கத்தக்க வகையில் மிகப் பெரிய அளவில் கால்வாய் வெட்டும் பணி நடைபெறுகிறது. சென்னை திருப்பதி கொசஸ்தல ஆறு சாலையில் இருந்து 2.2கி.மீ. தூரத்தில் தமிழ்நாடு எல்லை ஆரம்பமாகும் (ஜீரோ பாயிண்ட்) இடத்தில்இருந்து மிகப் பெரிய அளவில் முதல் கட்டப்பணியான கால்வாய் வெட்டும் பணிக்கு, பெரிய புல்டோசர் இயந்திரங்கள் 4 வேலை செய்கின்றன.

கால்வாய் 10 மீட்டர் ஆழமும் மேல் அகலம் 10 மீட்டரும் கீழ் அகலம் $6\frac{1}{2}$ மீட்டரும் இருக்கும். கால்வாயில் $3\frac{1}{2}$ மீட்டர் உயரம் வரை தண்ணீர் வரும். ஆந்திர அரசு நமது மாநில எல்லையில் வினாடிக்கு 1000 கன அடி நீர் தரும். இந்தத் தண்ணர், கால்வாய் மூலம் ஊத்துக்கோட்டை வழியாக ஆரணியாற்றில் சிமெண்ட் கான்கிரீட்டிலான புதை கால்வாய் (Syphon) மூலம் 25 கி.மீ. உள்ள பூண்டி நீர்த் தேக்கத்தில் சேர்க்கப்படும்.

தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி வரை முதல் கட்டமாக, கால்வாய் வெட்டும் வேலை ரூ 12 கோடியில் நடைபெறுகிறது. தினந்தோறும் ஏராளமான ஆட்கள் கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். கால்வாய் அமைப்பதற்காக 220 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

கால்வாய் திறந்த கால்வாயாக இருப்பதால் மண் சரியாமல் இருப்பதற்காக கால்வாயின் இரு பக்கங்களிலும் அடிப்பகுதியிலும் கான்கிரீட் சிமெண்ட் ஸ்லாப்புகள் போடப்படும். இந்த சிமெண்ட் ஸ்லாப்புகள் ஊத்துக்கோட்டையில் 2 இடத்திலும், உதப்பையில் ஒரு இடத்திலும், பூண்டியில் ஒரு இடத்திலும் செய்யப்படுகின்றன.


ஆரணி ஆற்றின் குறுக்கே தண்ணீர் கொண்டு செல்ல சிமெண்ட் கான்கிரீட்டிலான புதைகால்வாய் அமைக்க ரூ. 70 லட்சம் செலவாகும். பூண்டியிலிருந்து செம்பரம்பாக்கத்திற்கு 25.கி.மீ தூரம் கால்வாய் அமைக்க ரூ.11 கோடி செலவிடப்படும்.

இரண்டாவது கட்டமாக பூண்டி நீர்த்தேக்கம் ,செம்பரம்பாக்கம் ஏரி, புழல் ஏரி முதலியவற்றின் கரைகள் 2 அடி உயர்த்தப்படும். இதனால் ஏரிகளில் நீர் மட்டம் 2 அடி உயரும். பூண்டி நீர்த்தேக்கக் கரையை 2 அடி உயர்த்த ரூ. 6 கோடியும் .புழல் ஏரிக்கரையை உயர்த்த ரூ.2கோடியும், செம்பரம்பாக்கம் கரையை உயர்த்த ரூ. 3 கோடியே 30 லட்சமும் செலவிடப்படும்.

ராமன்சேரி என்னும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டி பூண்டி ஏரியில் உள்ள நீர் அங்கு கொண்டு போய் விடப்படும். காலியான பூண்டி ஏரியில் கிருஷ்ணா நதி நீரைத் தேக்கி வைக்கப்படும்.

கொசத்தலைவாயல், திருத்தண்டலம் முதலிய இடங்களில் ரிசர்வாயர் கட்டி நீரைத் தேக்கி, கடைசியாக ரெட்ஹில்ஸ் நீர்த் தேக்கத்தில் சேர்க்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் இதற்கு முன்பு பூண்டி நீர்த்தேக்கத்தைத் தவிர பெரிய திட்ட வேலைகள் செய்ததில்லை. அதனால் கால்வாய் வெட்டும் வேலைக்குச்சேலத்திலிருந்து ஆட்கள் வரவழைக்கப்படுகின்றனர்.





# செங்கையில் செம்மையான பணிகள்...

செங்கல்பட்டு மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அம்மனூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ. 40 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமூக நலக் கூடத்தை 25-4-84 அன்று மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் திறந்து வைத்தார். அவ்வமயம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நலிந்த பிரிவினருக்கு 200 கறவை மாடுகளையும் வழங்கினார்.

லத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள செய்யூரில். தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.70ஆயிரம் மதிப்பீட்டில் 2 அறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் ஒன்றும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 70 ஆயிரம் மதிப்பீட்டில் 2 அறைகள் கொண்ட கூடுதல் பள்ளிக் கட்டடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் திறந்து வைத்தார்.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 336 பேர்களுக்கு ரூ. 2 இலட்சத்து 86 ஆயிரம் மானியத்தில் கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 64 பேர்களுக்கு ரூ. 49 ஆயிரத்து 500 மானியத்தில் உழவு மாடுகள் வழங்கப்பட்டன. 84 பேர்களுக்கு ரூ. 1 லட்சத்து 9 ஆயிரத்து 500 மானியத்தில் ஆடுகள் வழங்கப்பட்டன.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 94 பேர்களுக்கு ரூ. 59 ஆயிரம் மானியத்தில் கடன் வழங்கப்பட்டது. இதில் 73 பேர் ஆதிதிராவிடர்.

மதுராந்தகத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையத்தின் சார்பில் தமிழக ''அக்ரோ உரம் சில்லரை விற்பனை நிலையம்'' துவக்க விழாவும் இதே நாளில் நடைபெற்றது.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் உரவிற்பனையைத் துவக்கி வைத்தார்.

''மிளகாய் அதிக விளைச்சல் உள்ள காலங்களில் விவசாயிகள் குறைந்த விலையில் விற்று நட்டமடையாமலிருக்க அரசே மொத்தமாக விவசாயிகளிடம் மிளகாய் வாங்கி தூளாகச் செய்ய அரசு உத்தேசித்து மிளகாய்த்தூள் ஆலை ஆரம்பிக்க திட்டம் உள்ளது'' என்று தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையத் தலைவர் திரு லியாகத் அலிகான் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

—ஆர். சடகோபன்

## தொழுநோய் நிறுவனங்களுக்கு அரசு உதவிகள்

தொழுநோயினைத் தடுப்பதிலும், குணப்படுத்துவதிலும், ஆக்கப் பூர்வமான சேவைகள் செய்வதில், அதுவும் குறிப்பாகச் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதில் அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தனியார் சேவை நிறுவனங்கள் ஈடுபடுவதை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்த நூற்றாண்டு முடிவதற்குள், தொழுநோயினை ஒழிப்பதற்குரிய நடைமுறையை வகுப்பதற்கு, இந்திய அரசு தொழுநோய் ஒழிப்பதற்கான கணக்கெடுத்தல், அது சம்பந்தப்பட்ட கல்வியினைப் போதித்தல், மருத்துவம் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கான உதவி முறைகளின் விதிகளைத் தளர்த்தியுள்ளது. இதன்படி இப்பணியில் பணிபுரிவோருக்கான ஊதிய உயர்வு அளித்தல், மருந்துகளின் விலை, தொழுநோய் சம்பந்தமான பணிகளுக்கான மற்றச் செலவுகள் ஆகியவைகளுக்காக அளிக்கப்படும் உதவித் தொகை அதிகரிக்கப்படும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கணக்கெடுத்தல், நோய் தொடர்பான கல்வி போதித்தல், மருத்துவ சேவை செய்தல் ஆகிய பணியினை ஏற்று நடத்தவும், தளர்த்தப்பட்ட விதிகளின்படி உதவி பெறவும் விரும்பும் சேவை நிறுவனங்கள் இது குறித்த முழு விவரங்களைப் பெற, சென்னை-600 006ல் உள்ள மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநருக்கு எழுதலாம்.



# மலைவாழ் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி

தமிழ்நாடு அரசு ஆற்றிவரும் அரிய திட்டங்களின் மூலம் நகர்ப்புறத்திற்கு மட்டுமில்லாமல் நாட்டுப்புறத்திற்கும் சாதனைகள் குவிகின்றன. நடுத்தர மக்கள் மட்டுமின்றி ஏழை எளிய மக்களும் பயன்பெறுகின்றனர். ஆதி திராவிட மக்களும் ஏற்றம்பெறும் வகையில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

மக்கள் அரசைத்தேடி வந்து கோரிக்கை வைத்த காலம் மாறி, தமிழ்நாடு அரசே வீடுதேடிச் சென்று வசதிகளையும் வாய்ப்புகளையும் தருகின்ற காலம் வந்துள்ளது. இந்த வகையில்தான் சேலம் மாவட்டம் கல்ராயன் மலையிலுள்ள 18,000 மலைசாதி மக்களுக்குப் பல்வேறு புரட்சிகரமான திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1981ஆம் ஆண்டுமுதல் தோட்டக் கலைத்துறை இங்கே செயல்பட்டு வருகிறது.

### மாபெரும் பழப்பண்ணை

சின்ன கல்ராயன் மலையில் 1000 ஏக்கர் பரப்பளவில் மாபெரும் பழப்டண்ணை தோட்டக் கலைத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1981ஆம் ஆண்டு 400 ஏக்கரில் பழக் கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன. மா, கொய்யா, சப்போட்டா, ஆரஞ்சு, அன்னாசி, எலுமிச்சை மற்றும் இதர பழப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. மீதியுள்ள 600 ஏக்கரில் இன்னும் இரண்டு ஆண்டில் பழப்பயிர்கள் பயிரிடப்பட்டுவிடும். இப்பழப் பண்ணை அமைப்பதற்கு நிலச் சீர்திருத்தம் செய்தல், பயிர்நடவு செய்தல், தண்ணீர் ஊற்றுதல், பயிர்ப் பராமரிப்பு ஆகிய வேலைகளைச் செய்வதற்காக நாள்தோறும் 100 ஆண்களும், 100 பெண்களும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### மாதிரி வாழைப் பண்ணை

வாழைப் பண்ணை 100 ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டு, தற்பொழுது 40 ஏக்கரில் தேன், வாழை, நமரன், பூவன் பச்சை நாடன் ஆகிய வாழை ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஏக்கருக்கு 800 கன்றுகள் வீதம் மொத்தம் 32,000 வாழைக் கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன. ஏக்கர் ஒன்றிற்கு ஆண்டுக்குச் சுமார் ரூ. 4000 இலாபம் கிடைக்கும்.

நோயற்ற, தரமான வாழைக் கன்றுகளை உற்பத்திசெய்து, மலைசாதி மக்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும், பயிரிடுவதற்காக வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மலைசாதி மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதும், வேளாண்மையை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் சீரிய நோக்கமாகும்.

### காய்கறி உற்பத்தித் திட்டம்

50 ஏக்கர் பரப்பளவில் காய்கறி விதை உற்பத்தி செய்யப்

**ம. அரிகிருஷ்ணன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**சேலம்.**

பட்டு வருகிறது. தரமான நோயற்ற விதைகளை அனைத்துப் பகுதி மக்களுக்கும் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்கண்ட திட்டங்களினால், வீணாக உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை உரிய முறையில் பயன்படுத்துதல், மலைசாதி மக்களை விஞ்ஞான முறையில் வேளாண்மையில் ஈடுபடச் செய்தல் ஆகிய நோக்கங்களும் நிறைவேறுகின்றன.

**மாதிரி காபித் தோட்டம் :**

தமிழ்நாட்டில் முதலாவதாக ஏர்க்காடு மலையில் மட்டும்தான் காபி பயிரிடப்பட்டு வந்தது 1982ஆம் ஆண்டு சின்ன கல்ராயன் மலையில் (கருமந்துறை) காபி பயிர்செய்வதற்காக 250 ஏக்கர் நிலத்தைத் தமிழ்நாடு அரசு தோட்டக் கலைத்துறையிடம் ஒப்படைத்தது. கடந்த 8 மாதங்களுக்கு முன்பாக 15 ஏக்கரில் காபி பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. இதில் 27,000 காபிச் செடிகள் நடப்பட்டுள்ளன. சின்ன கல்ராயன் மலையின் உயரம் 900 மீட்டர் ஆகும். இந்த உயரத்தில் உள்ள சீதோஷ்ணநிலை காபிச்செடி நன்கு வளர்வதற்கு ஏற்றதாகும். காபிச்செடி 2500 அடி முதல் 4000 அடி உயரம் வரை நன்கு வளரும். ரொபஸ்டா (Robusta) சென்ராமன் (Senraman) ஆகிய இருவகைக் காபிச் செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. காபிச்செடி வளர, நிழல் தருவதற்காக 10,000 வாழைக்கன்றுகளும், 10,700 கல்யாண முருங்கையும், 2,700 சில்வர்ஓக்கும், 1,300 கமலா ஆரஞ்சும் பயிரிடப்பட்டுள்ளன. மீதியுள்ள 235 ஏக்கரில் காபி பயிரிட நிலச் சீர்திருத்த வேலை நடைபெற்று வருகின்றது. 100 ஆண்களும் 100 பெண்களும் இதன்மூலம் நாள்தோறும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இதில் இரண்டாவது கட்டமாக 25 ஏக்கரில் காபிச் செடி பயிரிடுவதற்கான நடவு வேலையை 18.5.'84 அன்று சேலம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. நா. விவேகானந்தன் தொடங்கி வைத்தார்.

காபிச் செடி நடவு செய்யப்பட்ட 5 ஆண்டுகள் பலன் தருகின்றது. சுமார் 50 ஆண்டுகள் வரை காபிச்செடி பலன் அளிக்கும். 5 அல்லது 6 அடி உயரத்திற்குமேல் இச்செடிகள் வளராதவாறு வெட்டிவிடப்படும். 50 ஆண்டுகளில் இச்செடிகளை அகற்றிவிட்டுப் புதிய செடிகள் பயிரிடப்படும். ஏக்கர் ஒன்றுக்கு 500 கிலோவரை காபிக்கொட்டை கிடைக்கும். இதன் மூலம் ஏக்கருக்கு ரூ.7500 வரை லாபம் அடையலாம்.

**நிதி ஒதுக்கீடு**

மாபெரும் பழப்பண்ணை அமைக்க 3 ஆண்டுகளுக்கு ரூ 45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. காபி பயிரிட, ஆண்டுக்கு ரூ.2.5 இலட்சம் மற்றும் வாழை பயிரிட ஆண்டுக்கு ரூ. 2.5 இலட்சம் வீதம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காய்கறி பயிரிட, ஆண்டுக்கு 1.5 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


**குடிநீர் மற்றும் பாசன நீர்**

தோட்டக் கலைத்துறையில் வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியளிக்க, குடிநீர் வடிகால் வாரியம் ஆழ் துளைக் கிணறு அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. காபிச் செடிக்கு நீர் பாய்ச்சுவதற்காக ரூ. 65,000 செலவில் கிணறு வெட்டப்பட்டு வருகிறது.

**கசிவுநீர்க் குட்டை**

சின்ன கல்ராயன் மலையில் கசிவு நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு மூன்றுமுறை இந்த நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்புகிறது. இந் நீர் மாபெரும் பழப் பண்ணை மற்றும் வாழைப் பண்ணைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு ஆண்டு மழையளவு 847.56 மி.மீட்டர் ஆகும். நீர் பிடிப்புப் பரப்பு 12.90 ஏக்கர்.

சேலம் மாவட்டத்தில் சின்ன கல்ராயன்மலை, பெரிய கல்ராயன்மலை, பச்சைமலை, அரனூத்துமலை, கொல்லிமலை,



ஏர்க்காடு மலை, சேர்வராயன் மலை ஆகிய மலைகளில் மலைச் சாதி மக்கள் வாழ்கின்றனர்.

மலைசாதி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்குவதற்காகவும், இதரப் பணிகளுக்காகவும் வேலை வாய்ப்பு, உற்பத்தி, வருமானம் ஆகியவற்றை அதிகப்படுத்துவதற்காகவும், உணவு இதரப் பண்டங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காகவும் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மலைசாதி மக்களுக்குக் குறுகிய காலக்கடன், மத்தியக் காலக் கடன் இக்கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. பயிர்க் கடன் மற்றும் வீட்டிற்குத் தேவையான கடன்கள் 4 சதவீத வட்டியில் தரப்படுகிறது. பிற மக்களுக்கு 10 சதவிகித வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. மத்திய காலக்கடன் மூலம் கறவை மாடுகள் ஆடுகள் மற்றும் பன்றிகள் வாங்குதல், பட்டுப்பூச்சி வளர்த்தல் ஆகியவற்றிற்கு 50 சதவிகித கடனாகவும், 50 சதவிகிதம் மானியமாகவும் வழங்கி மலைசாதி மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிசெய்யப்படுகிறது.

## நியாய விலைக் கடைகள்

கல்ராயன் மலையில் கடுக்காய் அதிகம் விளைகிறது. மலைசாதி மக்கள் இவற்றை விற்கும்பொழுது இடைத்தரகர்கள் டம் ஏமாறாமல் இருக்க கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 10 இடங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

சின்ன கல்ராயன் மற்றும் பெரிய கல்ராயன் மலைகளில் 31,891.200 ஏக்கர் பரப்பளவிலுள்ள 3532 குடும்பங்கள், பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். இச்சங்கத்திற்குத்தனிநபர்பங்குத் தொகையாக ரூ. 4,35,777, அரசுப் பங்குத்தொகை ரூ. 1,07,750, ஆக 5,43,527 ரூபாய் மொத்தப்பங்குத் தொகையாகும்.

சின்ன கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மணியார் குண்டத்தில் ரூ. 25,000 செலவில் கட்டப்பட்டுள்ள கிராம அங்காடி மற்றும் ரூபாய் 40,000 செலவில் கட்டப்பட்டுள்ள சத்துணவுக் கூடம் ஆகியவற்றை 18.5.84 அன்று மாவட்டத் திட்ட அலுவலர் திரு. கே. பங்க்ரேலஸ் தலைமையில், சேலம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. நா. விவேகானந்தன் திறந்து வைத்தார். ஏர்க்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. திருமன், இந்தியன் வங்கி இயக்குநர் திரு ஆ. பொன்னுதுரை, முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. ப. மூ. சாந்தானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.


## கல்வி மற்றும் மருத்துவ வசதிகள்

கல்ராயன் மலையிலுள்ள மலைசாதி மக்களின் குழந்தைகள் கல்விகற்க ஆரம்பப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. இங்கு 26 பால்வாடிகள் உள்ளன. கிராம மருந்தகம் (Rural Dispensary) அரசு மருத்துவமனை (Govt. Hospital) கால்நடை மருந்தகம் ஆகியன இங்கு நிறுவப்பட்டு, மலைசாதி மக்களுக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் மருத்துவவசதி செய்யப்படடுள்ளது.

## சமுதாய சேவைக்குழு

அமெரிக்க நாட்டு நிதியுதவியின் மூலம் கல்ராயன் மலையில் பணியாற்றி வரும் இக்குழு, 1981ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழு குறிப்பாகப் பெண்களின் மேம்பாட்டிற்காகவும், அவர்களின் பொருளாதார வசதியை உயர்த்துவதற்காகவும் பாடுபட்டுவருகிறது. திரு. வி.வி. ரெட்டி, திட்டஒருங்கிணைப்பாளர் அவர்களின் மேற்பார்வையில் அத்திட்டம் நடைபெறுகிறது. இதில் பகுதிநேர வேலையாக 7 நபர்களுக்கும், நிரந்தரப்பணியாளராக 14 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் சென்னை ஸ்டெல்லா மேரீ கல்லூரியில் நவநிர்மா பாடத்திட்டத்தில் எம்.ஏ. பட்டம் பெற்ற மூன்று பெண்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சமூக நலக் காடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு 1983ஆம் ஆண்டு 500 குடும்பங்களுக்கு 7000 மரக்கன்றுகள் (Seedlings) இக்குழுவினால் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.




1984ல் 6500 மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. தோட்டக்கலைத் துறையிடமிருந்து மா, தென்னை, எலுமிச்சை போன்ற கன்றுகளை மானிய விலையில் வாங்கி மலைசாதிமக்களுக்கு இக்குழு இலவசமாக வழங்கி வருகிறது.

## பட்டு வளர்ப்பு

பட்டு வளர்ப்புக்கு அரசு 75 சதவிகித மானியம் தருகிறது. மீதமுள்ள 25 சதவிகிதத் தொகையைத் தொழில் செய்வோர் முதலீடு செய்ய வேண்டும். சமுதாய வேலைக்குழு மலைசாதி மக்களுக்கு உதவிடும் பொருட்டு அவர்கள் முதலீடு செய்ய வேண்டிய 25 சதவிகிதத் தொகையையும் குழுவே ஏற்றுக்கொண்டு வழங்கிவருகிறது.

மலைசாதி மக்களுக்கு இக்குழு இலவசமாக ஆட்டுக் குட்டிகளை வழங்கி வருகிறது. ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இது போன்ற ஒரு ஆட்டுக் குட்டியைச் சேவைக் குழுவிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கப்பட்ட ஆட்டுக்குட்டி மற்ற மலைசாதியினருக்கு வழங்கப்படும். 1982ஆம் ஆண்டு 150 ஆட்டுக்குட்டிகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

# இமயம் வென்ற இந்தியப் பெண்மணி

உலகிலேயே மிக உயர்ந்த மலையான இமயமலை மீது 1984ஆம் ஆண்டு மே திங்கள் 23ஆம்நாள் இந்தியப் பெண்மணி ஒருவர் ஏறி வெற்றி கண்டார்.

28 வயதான அந்தப் பெண் மணியின் பெயர் பச்சேந்திரிபால் என்பதாகும். உத்தரப்பிரதேச மாநிலத்தில், உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள நகூரி என் னும் கிராமத்தைச் சேர்ந்த இவர், ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா இரும்பு உருக்கு நிறுவனத்தில், நல்வாழ்வுத்துறை, விளையாட்டுப் பிரிவு உதவியாளர் ஆவார்.

அவருடன் டார்ஜிலிங்கைச் சேர்ந்த டோர்ஜலாது (39 வயது) என்பவரும், நேபாள ஷெர்பா ஆங் டோர்ஜீத் என்பவரும் இமய மலையை வெற்றி கொண்டனர்.

இமயமலையின் மொத்தம் 8848 மீட்டர் (29002 அடி) உயர முள்ள 'எவரெஸ்ட்' சிகரத்தின் மீது ஏறிய 5-வது பெண்மணி என்னும் பெருமையைப் பச்சேந் திரிபால் பெறுகிறார். ஆனால், இச்சாதனையைப் புரிந்துள்ள முதலாவது இந்தியப் பெண்மணி இவர்தான்.

1975ஆம் ஆண்டில் ஜங்கோ தாபெய் என்னும் ஜப்பானியப் பெண்மணி இமயத்தில் ஏறினார். அவர்தான் இச்சிகரத்தை அடைந்த முதலாவது பெண்மணி யாவார்.

அதே ஆண்டில் ஒரு சீன மலை யேற்றப் பெண்கள் குழுவுடன் சென்ற புன்டாங் என்னும் திபெத் தியப் பெண்மணி இமயத்தை வெற்றி கண்டார்.

1978ல் வாண்டா ரத்கீவீட்ஸ் என்னும் போலந்து நாட்டுப் பெண்மணியும், 1979ல் ஹான்னலோர் ஸ்மிட்ஸ் என்னும் ஜெர் மானிய பெண்மணியும் இமயத் தின் மீது ஏறினார்கள்.



டோர்ஜிலாது

இப்போது இந்திய வீராங்கனை பச்சேந்திரிபால் இமயத்தை எட்டிப் பிடித்திருக்கிறார். இதுவரை இச்சிகரத்தில் ஏறிய பெண்களிலேயே மிகவும் இளைய பெண்மணி இவர்தான்.

பச்சேந்திரி பாலுடன் இமயத் தில் ஏறிய ஆங்டோர்ஜீத் என் பவர், பிராணவாயு கருவி ஏதும் உடன் கொண்டு செல்லாமல் இந்தச் சாதனையைப் புரிந்திருக் கிறார்.

இமயமலையை எட்டிப்பிடித்த இந்தியக் குழுவினர் மற்றொரு சாதனையையும் நிகழ்த்தி இருக் கின்றனர்.

வழக்கமாக இதுவரை இந்தச் சிகரத்தின்மீது ஏறியுள்ள இந்தி யர்கள் அனைவருமே, அதன் தெற்கு முகத்தில் சற்று உயரத் தில் அமைக்கப்பட்ட முகாமில் இருந்துதான் புறப்பட்டுச் சென் றனர். ஆனால் தெற்கு முகத்தின் கும் கீழே உள்ள ஒரு முகாமி லிருந்து புறப்பட்டு முழு மூச் சுடன் அச்சிகரத்தை எட்டி இருப் பது இதுவே முதல் தடவையா கும்.

இமயமலையில் அதிக அளவில் மலையேற்ற வீரர்களை அனுப் பும் நாடுகளில் இந்தியா 4வது இடத்தை வகித்து வருகிறது. இதுவரை இந்தச் சிகரத்தை எட் டிய இந்திய வீரர்களின் எண் ணிக்கை 13.

26க்கும் அதிகமான வீரர்களை அந்தச் சிகரத்திற்கு அனுப்பி உள்ள நேபாளம் முதலிடத்தில் உள்ளது. அமெரிக்கா (23 பேர்), ஜப்பான் (15 பேர்), இந்தியா (13 பேர்), ரஷ்யா (11 பேர்) ஆகியன முறையே 2வது, 3வது, 4வது, 5வது இடங்களில் உள் ளன.



பச்சேந்திரி பால்

இமயத்தை வென்ற முதல் இந் தியப் பெண்மணியான பச்சேந் திரிபாலுக்கு உத்தரப்பிரதேச முதலமைச்சர் ரூ 50 ஆயிரம் பரிசு அளித்துள்ளார்.

இமயமலையில் ஏறி வெற்றிக் கொடி நாட்டியுள்ள முதல் இந் தியப் பெண் பச்சேந்திரிக்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. கியானி ஜெயில்சிங் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

''தாய்க்குலமே பெருமை படக்கூடிய மகத்தான சாதனை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். உங்க ளுக்கு இந்திய மக்கள் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்'' என்று அதில் அவர் குறிப்பிட்டு உள்ளார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில், ''மலையேற்றத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் என் மனப்பூர்வமான பாராட்டுக்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.




திரு எல். கே. ஜா அவர்களைத் தலைவராகக் கொண்ட வெண்மைப் புரட்சி 2-வது திட்ட மதிப்பீட்டுக் குழு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களை 21-6-84 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தது. மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப., அவர்களும் உடன் உள்ளனர்.

சென்னையில் குடிசை மாற்று வாரிய அலுவலக இணைப்புக் கட்டடமான அறிஞர் அண்ணா பவள விழா கட்டடத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 17-6-84-ல் திறந்து வைத்தார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா, குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் ராணி அம்மையார் ஆகியோர் உடன் உள்ளனர்.





# மக்கள் நலவாழ்வுத் துறையின்

"கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நலவாழ்வு" அளித்தல் என்ற நோக்கத்தைத் தீவிரமாக எய்துவதே அரசின் முக்கிய நோக்கமாகும். இக்கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக, அதிலும் குறிப்பாக கிராம மக்களின் நலனுக்காகப் பல்வேறு சுகாதார நலத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது.

கடந்த நான்காண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு சுகாதார நலத் திட்டங்கள், எய்திய சாதனைகள் ஆகியவை வருமாறு:

**சுகாதாரத் துணை நிலையங்கள்**

எல்லைப் பகுதிகளில் வசிக்கும் கிராம மக்களுக்கு ஆரம்பச் சுகாதாரப் பணியினை வழங்கும் நிறுவனங்களே சுகாதாரத் துணை நிலையங்கள் ஆகும். இவை, சமவெளிகளில் 5,000 மக்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும், பழங்குடியினர் வாழும் பகுதிகள், மலைப் பகுதிகள் ஆகியவற்றில் 3,000 மக்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும் அமைக்கப்படுகின்றன. சுகாதாரத் துணை நிலையங்கள் அமைக்கப்பட்டதில் எய்திய சாதனை வருமாறு:

| | |
|---|---|
| 1-4-1978ஆம் நாளன்றிருந்தவாறு ... | 2964 |
| 1978-79 ... | 377 |
| 1979-80 ... | 19 |
| 1980-81 ... | 30 |
| 1981-82 ... | 442 |
| 1982-83 ... | 754 |
| 1983-84 ... | 323 |
| (1984 ஜனவரி வரை) | |
| ... | 4909 |

நடப்பாண்டு இறுதிக்குள் 5,000 சுகாதாரத் துணை நிலையங்கள் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


**ஆரம்பச் சுகாதார நிலையங்கள்**

தமிழ்நாட்டில் தற்போது செயற்பட்டு வரும் 424 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் (இவை ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின்போது ஏற்படுத்தப்பட்ட முறையான கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களாகும் (383 + 41). கிராம மக்களுக்குச் சிகிச்சை அளித்தல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், உடல்நல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளைப் புரிகின்றன. முறையான ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு - அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் 3 பேர் என்ற வீதத்திலும், கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் 2 பேர் என்ற வீதத்திலும் கிராமப் பகுதிகளில் 1295 அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் பணி புரிகின்றனர்.

# மகத்தான பணிகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

**டாக்டர் எச். வி. ஹண்டே**



பொதுமக்களுக்கு இந்திய மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிப்பதற்காக 186 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆண்டொன்றுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ரூ. 20,000 மதிப்புள்ள மருந்துகள் (ஆங்கில முறை) வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவது என்பது, சுகாதாரப் பணிகளின் கீழ், இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தியின் புதிய 20 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. ஏழாம் திட்டக்கால இறுதிக்குள் 3,000 மக்களுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற வீதத்தில் மொத்தம் 1,409 ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்த மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் மத்திய அரசு ஏற்கெனவே நிர்ணயித்த கோட்பாடாகும்.


424 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 30 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் சமுதாய நல நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. இவை எல்லா வசதிகளுடன் கூடிய பெரிய மருத்துவமனைகளுக்கு நோயாளிகளை அனுப்பி வைக்கும் நிலையங்களாகச் செயல்படுகின்றன. இவற்றில் கூடுதலாக 24 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதுடன் (மொத்தம் 30) மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு மருத்துவச் சிகிச்சை அளித்தல், மருத்துவச் சிகிச்சை, நோய்க்குறியியல் அறுவைச் சிகிச்சை வசதிகள் ஆகியவற்றிற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

**சிறிய சுகாதார நிலையங்கள்**

சமுதாய சுகாதார வழிகாட்டித் திட்டத்திற்குப் பதிலாக, சிறிய சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணியும் நிறைவேற்றப்படுகிறது. ஒத்துழைப்பு அடிப்படையில் கிராம மக்களுக்கு விரிவான சுகாதாரப் பணிகளையும் - மருத்துவப்பணிகளையும் ஆற்ற விரும்பும் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. சிறிய சுகாதார நிலையம் ஒன்றிற்கு ஆண்டுக்கு 18,000 ரூபாய் மொத்த செலவில் ஒவ்வொரு 5,000 மக்களுக்கும் சிறிய சுகாதார நிலையங்களை நடத்த இத்திட்டத்தில் ஊக்கமளிக்கப்படுகிறது. இத்தொகையில் 50 சதவீதத்தை (ரூ. 9,000) மாநில அரசு ஈடு செய்யும். இத்தொகை 27,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதல் செலவை மேற்கொள்ளும் பொருட்டு பயனடைபவர்களிடமிருந்து நன்கொடை பெறுவதன்மூலம் அல்லது நிதி திரட்டுவதன் மூலம், தொண்டு நிறுவனங்கள் நிதி திரட்டவும் அனுமதிக்கப்படுகின்றன. தமிழகத்தில் இதுவரை 251 சிறிய சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன.

**மகப்பேறு — குழந்தை நலப்பணிகள் நோய்த் தடுப்பூசித் திட்டம்**

இம்மாநில மக்கள் தொகையில், குழந்தை பெறும் வயதிலுள்ள மகளிரும், 16 வய



திற்குக் குறைவான குழந்தைகளும் 50 சத விகிதம் பேர் உள்ளனர். மக்கள் தொகையில் பெருமளவு, பாதிக்கப்படும் இப்பிரிவினருக்கு மகப்பேறு - குழந்தை நலப் பணிகளில் அதிக முன்னுரிமை அளிப்பதே அரசின் கொள்கை யாகும். மகப்பேறு-குழந்தை நலப் பணிகளில் மகப்பேற்றிற்கு முன்னரும், மகப்பேற்றின் போதும், மகப்பேற்றிற்குப் பின்னரும் தாய் மார்களுக்குச் சிகிச்சை அளிக்கும் பணிகளும் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்கும் பணி களும் அடங்கும். மேலும் 16 வயதிற்குட் பட்ட குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதை யும் இறப்புச் சதவீதத்தையும் குறைக்க இயலும்வகையில் பாலர் பள்ளி-பள்ளிச் சிறார் நல்வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படுவதும் இதில் அடங்கும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள், சுகா தாரத் துணை நிலையங்கள் (பிற்பட்ட பகுதிக்கான திட்டம்) முக்கிய - துணை நிலை யங்கள், பூவிருந்தவல்லி சுகாதாரப் பிரிவுப் பகுதியில் அரசு தொடங்கிய பிரதான துணை நிலையங்கள், மகப்பேறு நிலையங்கள், மகப் பேறு இல்லங்கள் ஆகியவற்றின் மூலம், கிராமப் பகுதிகளில் மகப்பேறு - குழந்தை நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகர்ப்பகுதிகளில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் இப்பணிகளுக்கான பொறுப்பை ஏற்கின்றன. மாவட்டச் சுகாதார அதி காரிகள், தங்கள் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள பகுதிகளில் மகப்பேறு-குழந்தை நலப்பணிகள் முழுவதற்கும் பொறுப்பேற்கின் றனர்.

நம் மாநிலத்தில் பல்வேறு நகராட்சி களிலும் மூன்று மாநகராட்சிகளிலும் நடத் தப்படும், நகராட்சி மகப்பேறு மருத்துவ மனைகள் 372, மகப்பேறு நிலையங்கள், இல் லங்கள் 128 உள்ளன. நகராட்சிகள் மாநில நிதியிலிருந்து $\frac{1}{4}$ பகுதி மானியத்தைப் பெறு கின்றன.


### முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டம்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், 2 முதல் 4 வயதுவரை



யிலான குழந்தைகளுக்குச் சுகாதார நல வசதிகள் செய்து கொடுப்பதில் பொதுச் சுகாதாரத் துறை தீவிரமாகச் செயல்படு கிறது.

ஆரம்பச் சுகாதார நிலையத்தின் பொதுச் சுகாதாரக் களப் பணியாளர்கள் (ஆடவர், மகளிர்) அல்லது அவர்களுக்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் (ஆடவர், மகளிர்) அல்லது அவர்களுக்கு நிகரான பதவித் தரத்திலுள்ள வர்கள், மாவட்ட சுகாதார அதிகாரிகள், வட் டாரத்துணை இயக்குநர்கள் ஆகியோர் தங்கள் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள சத்துணவு வழங்கும் மையங்களில் முறையாக துப்புரவு, சுகாதாரம் வழங்குபவர்கள் தூய்மையுடன் உள்ளனரா என்றும், கண்டறி யவதற்காகச் சத்துணவு மையங்களுக்குக் குறிப் பிட்ட காலத்திற்கொருமுறை சென்று பார்வை யிடுகின்றனர். மேலும், தங்கள் கள ஆய்வின் போது, குழந்தைகள் சுகாதார மையங்களி லுள்ள குழந்தைகளைப் பரிசோதித்து அவசிய மான சுகாதார சோதனையும் மருத்துவச் சிகிச்சையும் செய்வதற்கு இயலும் வண்ணம் குழந்தைகள் சுகாதார மையங்களையும் குறிப் பிட்ட காலத்திற்கொருமுறை பார்வையிடு கின்றனர்.



## கிராமப்புறக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்குதல்

குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் செயற்பட்டு வருகின்ற மையங்களின் மூலம் கிராமப்புறக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டத்தை அரசு 1982 நவம்பரில் கொண்டு வந்தது. 54 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகின்றனர். ஒவ்வொருவருக்கும் இத் திட்டத்தின்கீழ் . மாதந்தோறும் இலவசமாக 30 கிராம் பற்பொடி வழங்கப்படுகின்றது.

## "டானிடா" திட்டம்

கிராம மக்களின் சுகாதாரக் குடும்ப நலத்தை மேம்படுத்தும் நோக்குடன், டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் புதிய திட்டம் ஒன்று ரூ. 14.40 கோடி செலவில், 1981ஆம் ஆண்டிலிருந்து சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1981-86 முதற்கொண்டு 5 ஆண்டுகளில், துணை நிலையக் கட்டடங்கள் 523, சுகாதார மேற்பார்வையாளர் குடியிருப்பு 285, தொடக்கச் சுகாதார நிலைய மருந்தகக் கட்டடங்கள் 15, தொடக்க சுகாதார நிலையங்களில் மருத்துவ அதிகாரிகளுக்கான குடியிருப்புகள் 36, மகப்பேறு வார்டுகள் 2, அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் 4, குழந்தைகள் சிகிச்சை வார்டு 2 கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.


## கண்புரை நோய் அறுவைச் சிகிச்சை

பார்வைக் கோளாறுகளைத் தடுக்கும் பொருட்டு, அரசு மருத்துவமனைகளிலும் கண்சிகிச்சை முகாம்களிலும் கண்புரை சிகிச்சை நோய் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. கடந்த மூன்றாண்டுகளிலும் 1983-84ஆம் ஆண்டிலும் (1984 ஜனவரி வரையில்) நடத்தப் பெற்ற கண்புரை நோய் அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை வருமாறு :

| | | |
|---|---|---|
| 1980—81 | ... | 52,350 |
| 1981—82 | ... | 78,810 |
| 1982—83 | .. | 79,641 |
| 1983—84 (ஜனவரி வரையில்) | ... | 60,546 |

## விபத்து-அவசரச் சிகிச்சைத் திட்டம்

விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களை விரைவில் எடுத்துச் செல்லவும், உடனடி மருத்துவச் சிகிச்சை அளிக்கவும், 1979-ல் அரசு விபத்து-அவசர சிகிச்சைத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இத்திட்டம் 13 மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.



முதல்கட்டமாக 1979-80ல் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் 1981-82-ல் இரண்டாவது கட்டமாக நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சி மாவட்டங்களிலும், மூன்றாவது கட்டமாக தென்னார்க்காடு, சேலம், மாவட்டங்களிலும், நான்காவது கட்டமாக தருமபுரி, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், ஐந்தாவது கட்டமாக வட ஆர்க்காடு மாவட்டத்திலும் தொடங்கப் பெற்றது.

## தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

தொழு நோய் ஒழிப்புத் திட்டத்தை வெற்றிகரமாய் செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடு முதல் மாநிலமாகும். 1980-ல் 18.06 இலட்சம் பள்ளிச் சிறார் சோதிக்கப்பட்டனர். 0.10 இலட்சம் பேருக்கு நோய் கண்டிருப்பதாக அறியப்பட்டது. 1981-ல் சோதிக்கப்பட்ட 25.27 இலட்சம் பள்ளிச் சிறார்களில் 0.12 இலட்சம் பேருக்கும், 1982-ல் சோதிக்கப்பட்ட 46.78 இலட்சம் சிறார்களில் 0.10 இலட்சம் பேருக்கும் 1983ல் சோதிக்கப்பட்ட 52.09 இலட்சம் சிறார்களில் 0.13 இலட்சம் பேருக்கும் நோய் கண்டிருப்பதாக அறியப்பட்டது.

பெரியவர்களைச் சோதித்ததில் 1980-ல் சோதனை செய்யப்பட்ட 97.6 இலட்சம் பேரில் 29,968 பேருக்கும், 1981-ல் சோதனை செய்யப்பட்ட 105.3 இலட்சம் பேர்களில் 25,475 பேருக்கும், 1982-ல் சோதிக்கப்பட்ட 132.38 இலட்சம் பேரில் 32,886 பேருக்கும், 1983 டிசம்பர் வரை சோதிக்கப்பட்ட 131.07 இலட்சம் பேர்களில் 25,797 பேருக்கும் நோய் கண்டிருப்பதாக ஆய்வு எடுத்துரைக்கிறது.

தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் ஆன செலவு விவரம் வருமாறு:

1980-81-ல் மத்திய அரசு ரூ. 7.95 இலட்சம், 1981-82-ல் ரூ. 8.99 இலட்சம்,



1982-83ல் ரூ. 5.58 இலட்சம், 1983-84ல் ரூ. 8.62 இலட்சம் செலவிட்டுள்ளது. தமிழக அரசு 1981—1984 முடிய, முறையே ரூ. 207 இலட்சம் ரூ. 238.09 இலட்சம் ரூ. 268.28 இலட்சம் ரூ. 298.70 இலட்சம் செலவிட்டுள்ளது.

**காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்**

காசநோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், மூன்றாவது திட்டக் காலத்தில் வகுக்கப்பட்ட காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

காசநோய்க்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் எய்தப்பெற்ற சாதனைகள் வருமாறு :

1980-81ல் 2,39,813 பேரும், 1981-82ல் 2,49,297 பேரும் 1982-83ல் 3,04,845 பேரும், 1983-84ல் 2,99,132 பேரும் மார்பு எக்ஸ் ஊடுகதிர் படம் எடுத்துச் சோதிக்கப்பட்டனர். சளி எடுத்துப் புதிதாகச் சோதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1980-81-ல் 1,57,048; 1981-82-ல் 1,62,038, 1982-83ல் 2,32,100, 1983-84ல், 2,88,917 ஆகும். காச நோய் உள்ளதெனப் புதிதாகக் கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 1980-81ல் 61,118; 1981-82ல் 70,794; 1982-83-ல் 88,820, 1983-84ல் 93437. காச நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டவர்களின் எண்ணிக்கை 1980-81-ல் 13,16,407; 1981-82-ல் 13,38,230, 1982-83ல் 11,98,472; 1983-84ல் 11,86,728 ஆகும்.

நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்புச் சுகாதாரக் கவனிப்புப்பணிகள் வகையில் முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கடந்த நான்காண்டுகளில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

1983-84-ல் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள் ஏனைய மருத்துவமனைகளின் படுக்கை எண்ணிக்கை 513 ஆக உயர்த்தப்பட்டுள்ளது, கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள் நீங்கலாக அரசு மருத்துவ மனைகளில் உள்ள மொத்தப் படுக்கை எண்ணிக்கை தற்போது 14,241 ஆகும். இவை தவிர 712 படுக்கைகள் காசநோய்க்கென்றே காச நோய் மருத்துவமனையிலும் மார்பு நோய்ச் சிகிச்சை மருத்துவ மனைகளிலும் உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு அரசு மருத்துவமனைகளில் பின்வரும் தனித் துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பல்நோய்ச் சிகிச்சைப் பிரிவுகள் | ... | 13 |
| கண் நோயியல் பிரிவு | ... | 16 |
| கண், மூக்கு, தொண்டை | ... | 7 |
| பால்வினை நோயியல் | ... | 9 |
| உணவியல் சிகிச்சைப் பிரிவு | ... | 5 |
| முடநீக்கியல் சிகிச்சைப் பிரிவு | ... | 8 |
| சிசு நோயியல் பிரிவு | ... | 20 |

பொதுமக்களின் பயனுக்காக, கல்லூரி இணைந்த மருத்துவமனைகளிலும் ஏனைய மருத்துவமனைகளிலும் பல்வேறு நவீன கருவிகளை அரசு வழங்கியுள்ளது.

**மருத்துவக் கல்லூரி**

எட்டு மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரி ஒன்று, மருத்துவக் கல்லூரிகள் இணைந்த மருத்துவமனைகள் 19, மூன்று புறநகர் மருத்துவமனைகள், கே. கே. நகரிலுள்ள புதுவாழ்வு செயற்கை உறுப்புகள் பொருத்தும் நிலையம், சென்னை சேத்துப்பட்டு, எலும்புருக்கி மார்பு நோய் மருத்துவ நிலையம், காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனை, கிண்டி ‘கிங்’ நோய்த் தடுப்பு நிறுவனம் ஆகிய நான்கு மருத்துவ நிலையங்களும் சிறு மருத்துவ நிலையங்கள் ஆறு, எட்டு மருந்தகங்கள் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

பல்வேறு துறைகளில் தேவைப்படும் மருத்துவர்களை நியமிக்கும் பொருட்டு, கீழே குறிப்பிட்டுள்ளவாறு புதிய பாட முறையைத் தொடங்கி, தற்போதுள்ள பாடமுறையில் கூடுதல் இடத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.



பட்ட மேற்படிப்பு/பட்டப் படிப்பு

எம். டி. பொது மருத்துவம்.

எம். டி. எலும்புருக்கி மார்பு நோய்,

எம். எஸ். பொது அறுவைச் சிகிச்சை,

எம். டி. மகப்பேறு-மகளிர் நோயியல்.

எம். எஸ். விரைவீக்க இயல்.

எம். டி. எம். இரைப்பை-குடல் நோயியல்

டி. எம். இதய நோயியல்.

டி. ஜி. ஓ.

டி. ஓ.

டிசிஎச்.

**சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை**

சில வகை இருதய நோய்க்கு, திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு அதிகச் செலவு பிடிக்கும் நவீன அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். சென்னை அரசினர் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு இலவசமாக இச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இச் சிகிச்சை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

எனவே, சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சையாளர்களுடன், மார்புப் பகுதிச் சிகிச்சை வசதிகள் தேவையான பணித் துறைக்கு மேலும் 80 படுக்கைகளுக்கு அனுமதியளித்ததன் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

**மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை**

தற்போது திறந்த இருதய அறுவைச் சிகிச்சை நடத்துவதற்கான வசதிகள் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் மட்டுமே இருக்கின்றன. இதுவரையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சைகள் 2043 செய்யப்பட்டுள்ளன. தென் மாவட்டங்களிலுள்ளவர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கான பணியாளர்களுக்கும் சாதனங்களுக்கும் அரசு அனுமதி அளித்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட புதிய மருத்துவச் சிறப்புப் பிரிவுகளில் சில வருமாறு:—

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நரம்பியல் துறை;

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் தீக்காயச் சிகிச்சைப் பிரிவு;

மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் திறந்த இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு;

சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் தலைக்காய சிகிச்சைப் பிரிவு;

சென்னையிலுள்ள குழந்தை நல நிறுவனம், குழந்தை நல மருத்துவமனையில் தடுப்பூசிப் பிரிவு;

சென்னையிலுள்ள குழந்தை நல நிறுவனம் - குழந்தை நல மருத்துவமனையில், குழந்தை இதயநோய் மும்முரச் சிகிச்சைப் பிரிவு.

**குடிசை வாழ் மக்களுக்கு மருத்துவ உதவி**

குடிசைவாழ் மக்களுக்கான மருத்துவ உதவியை மேம்படுத்தும் நோக்கத்துடன், மாநகரிலுள்ள ஒரு மருத்துவக் கல்லூரியும், மாவட்டங்களிலுள்ள ஒரு மருத்துவக்கல்லூரியும் குடிசைகளைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொள்ளவேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியும், மதுரை மருத்துவக் கல்லூரியும் இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மருத்துவக் கல்லூரி மாணவர்கள் குடிசைப்பகுதிகளுக்குச் சென்று இத்திட்டத்தின்கீழ் மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.

**கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளுக்கான சாதனங்கள்**

உடம்பின் உட்புறம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டும் கருவி:

**தலையின் உட்புறத்தைப்படம் பிடித்துக் காட்டும் கருவி**

அரசினர் பொது மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள, தலையின் உட்புறத்தைப் படம் பிடித்துக் காட்டும் கருவி மக்களுக்குப்


பெரிதும் உதவுகிறது. இதுவரையில்சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் 13497 கதிர்வீச்சுப் படங்கள் ( Scans ) எடுக்கப் பட்டுள்ளன.

மாவட்டப்பிரிவிலுள்ள மக்களுக்கு முதல் தரமான சிறந்த மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டு மதுரை, தஞ்சாவூர் மாவட்டங் களிலுள்ள மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகளுக்காக மிகவும் நவீன சாத னங்களுக்கு அனுமதி வழங்கியதுடன், மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனைக்கு ரூ. 103 இலட்சம் செலவில் உடம்பின் உட் புறம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டும் கருவியும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி - மருத்துவமனைக்கு ரூ. 41 இலட்சம் செலவில் தலையின் உட்புறத்தைப் படம் பிடித்துக் காட்டும் கருவியும் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள இதயநோய் இயல் துறைக்கு பரிசோதனை இதயநோய் ஆய்வுக் கூடம் (Catherisation Laboratory) அமைத்தல்.

சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் ரூ. 73.55 இலட்சம் செலவில் இரண்டாவது இதயநோய்ப் பரிசோதனை ஆய்வுக்கூடம் அமைக்க 1983-84-ல் அரசு அனுமதி அளித்துள்ளது. இச்சாதனம் விரை வில் அமைக்கப்படும்.

### பிற நிறுவனங்களுக்கான சாதனங்கள்

மேலே குறிப்பிட்ட, உடம்பின் உட் புறம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டும் கருவிகளுடன், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனை, சென்னை அரசினர் ஸ்டேன்லி மருத்துவமனை, சென்னை கீழ்ப் பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஆகியவற்றிலுள்ள தீவிரச் சிகிச்சைப் பிரிவு களுக்கு 'டிஸ்லைசர்ஸ்' (Dislysers) போன்ற நவீன சாதனங்களும் கோயம்புத்தூர் மருத் துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இதயத் துடிப்பு அளவிடு கருவியும் வாங்கப்பட்டுள்ளன.



மேலும் இக்கால அளவில் சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு 'மருத்துவ யாழ்ல ஸர்' ( Medical Yazhsor ) கருவியும் 'பயோஸ் டேட்டர்' (Bio - Stater) கருவியும் வாங்க அனுமதி அளிக்கப்பட்டது.

### கல்லூரி இணைந்த மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

கல்லூரி இணைந்த மருத்துவ மனை களுக்கு அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 1980-81-ல் 14265 ஆக இருந் தது. 1983-84ல், 15,212 ஆக அதிகரித்துள் ளது.

### மருத்துவப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகம்

அரசு நிறுவனங்களில் பயன்படுத்துவதற் கெனவைக்கப்பட்டிருந்த மருந்துப் பொருட்கள் வெளியில் விற்க சிறிது சிறி தாகத் திருடப்பட்ட பல சம்பவங்களைத் தமிழ்நாடு மருந்துப் பொருட்கள் கட்டுப் பாட்டு நிருவாக நிறுவனம் கண்டுபிடித்துள் ளது. மருந்துப் பொருட்களைச் சிறிது சிறி தாகத் திருடிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு அரசு புதியதொரு நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது; இம்முறையில், அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மருந்து பொருட்கள் குறிப்பிட்டதொரு இலச்சினை கொண்டதாக இருக்க வேண்டும்; மருந்துப் பொருட்கள் சிறிது சிறிதாகத் திருடுபோவதை எளிதில் தடுக்க இது உதவியாக இருக்கும். இம்முறையை மேலும் கண்டிப்புள்ளதாக்க மேற்கொண்டு சட்ட முன் வடிவு ஒன்றினை அரசு அண்மையில் பேரவையில் கொணர்ந் துள்ளது. அது, சம்பந்தப்பட்ட மருந்துப் பொருட்களை உரிய காரணமின்றி வைத் திருப்பதைத் தண்டிக்கத் தக்க குற்றமாக்கு கிறது. இச்சட்ட முன்வடிவின்படி இந்த மருந்துப் பொருட்களைக் கையாளுபவர் களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க மருந்துப்பொருள் ஆய் வாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கக் கருதப் பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் பல்பொடி தர முள்ளதாக இருக்கிறதா என்பதைக் கண் காணிக்கும் பொறுப்பும், மாநில அரசு மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிறு வனத்திடம் விடப்பட்டுள்ளது:

### 1980 முதல் 1984 வரை எய்திய சாதனைகள்

மருந்துப் பொருட்களின் அளவு குறை வது கண்காணிக்கப்பட்டு, பற்றாக்குறையாக உள்ள மருந்துப் பொருட்கள் பொது மக் களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது.

தரமுள்ள மருந்துப் பொருட்கள்மட்டுமே பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யப்படு கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அரசு மருத்துவமனைகள் மூலம் வழங்கப்படும் இந்த மருந்துப் பொருட்கள்

உட்பட, இம்மாநிலத்தில் தயாரித்து வழங்கப்படும் மருந்துப் பொருட்கள் அனைத்தின் தரமும் இடைவிடாது கண்காணித்து வரப்படுகிறது.

மயக்க மருந்துகள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதைச் செவ்வியமுறையில் கட்டுப்படுத்துவதற்கு, மயக்க மருந்துகள் உபயோகப் புலனாய்வுப் பிரிவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.


சிகிச்சை முறையில் பயனற்றவை என்று கண்டறியப்பட்டுள்ள ஒவ்வாத நிர்ணயக் கலவை மருந்துகளும் உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய மருந்துப் பொருட்களும் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன. அவற்றின் தயாரிப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

மருந்துப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகள், கணக்கில்லாத அளவிற்குப் பெருகி வருவதைக் கட்டுப்படுத்தும்பொருட்டு நிறுவனம் ஒன்றுக்கு ஆறு தொழிற்சாலைகள் என்ற அளவில், உரிமம் வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மருந்துப்பொருட்கள் சோதிக்கப்பட போதிய வசதிகள் இல்லையெனில் அவற்றைத் தயாரிக்கப் புதிதாக உரிமங்கள் வழங்கப்படுவதில்லை.

மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாக அலுவலர்களுக்கு 88,000 ரூபாய் விலை மதிப்புள்ள தரமான பார்வைப் புத்தகங்கள் (Reference Books) வழங்கப்பட்டுள்ளன.

## குடும்ப நலத் திட்டம்

தமிழ்நாட்டில், குடும்ப நலத் திட்டம் எவ்வித கட்டாயமும் நிர்ப்பந்தமும் இன்றி தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1981-82-ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சை இலக்கில் 103 சதவீதச் சாதனை புரிந்து இலக்கு தாண்டப்பட்டுள்ளது. 1982-83ஆம் ஆண்டு வரையறுத்த இலக்கு 2.92 இலட்சமாகும். ஆனால், 2.70இலட்சம் அறுவைச் சிகிச்சைகள்தான் நடந்தப்பட்டுள்ளன. 1983-84ஆம் ஆண்டிற்கு 3.99 இலட்சம் என இந்திய அரசு இலக்கு வரையறுத்துள்ளது. இவ்வகையில் 4,96,780 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. லேப்ராஸ்கோப் முறையில் அறுவைச்சிகிச்சை செய்வது மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றுள்ளது. தற்போது மொத்தம் 49 லேப்ராஸ்கோப்புகள் மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ளன. வட்ட மருத்துவமனை





களில் வைக்கும் பொருட்டு 26 லேப்ராஸ் கோப்புகள் வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றைப் பயன்படுத்த போதிய அளவு மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் எய்தியுள்ள சாதனைகள் வருமாறு:

1980-81-ல் 1,38,831 பேரும், 1981-82ல் 1,88,823 பேரும், 1982-83ல் 2,70,719 பேரும்; 1983-84ல் 4,96,780 பேரும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளனர்.

1980-81ல் 32597 பேருக்கும் 1981-82ல் 32991 பேருக்கும் 1982-83ல் 37,261 பேருக்கும், 1983-84-ல் 55,877 பேருக்கும் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு, பல்வேறு வகையிலும், தமிழகத்தின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பணிகள் வளர்ச்சி பெற்றே வருகின்றன. Health is Wealth என்னும் ஆங்கிலப் பழமொழியின் அருமையை அறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு - நல்வாழ்வுப் பணிகளுக்குரிய திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றிப் பெருமை பெற்று வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.



* வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள், அகத்திலே அருவி போல் ஆர்வம், முகத்திலே வீரக்களை, செயலிலே துடிதுடிப்புக் காணப்படும். தலை குனிந்து நிற்பது, பெருமூச்செறிவது, நம்மால் ஆகிற காரியமா? என்று இழுத்துப் பேசுவது ஆகிய முறைகள் அவர்களுக்குப் பிடிக்காதன—அவர்கள் செயலாற்றும்வீரர்கள்.

# மலேரியா பிணி நீக்கும் மாமருந்து!

சின்கோனாத்துறை தமிழ்நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அரசுத்துறை நிறுவனமாகும். இத்துறை மலேரியா நோயினை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் 'கொய்னா சல்பேட்' மற்றும் இதய நோய்களுக்குப் பயன் படுத்தப்படும் 'குண்டின் சல்பேட்' ஆகிய மருந்துப் பொருட்களைப் பெருமளவில் தயாரித்து வருகிறது. அது மட்டுமல்ல, மருந்து மற்றும் வாசனைத் தைலங்களையும் இத்துறை தயாரித்து வருகிறது.

தென் அமெரிக்காவிலுள்ள சர் கிளமண்ட் ஆர். மார்க்கம் என்பவர் சின்கோனாச் செடி விதைகளைக் கொண்டு வந்தார். அந்த விதைகளைச் கொண்டு, 1860ஆம் ஆண்டு இந்தியாவில் நீலகிரி மாவட்டத்தில், தொட்டபெட்டாவில் சின்கோனாப் பயிர் முதன் முதலில் சோதனை அளவில் பயிரிடப்பட்டது. இதைப் பயிரிட்டவர் உதகைத் தாவரப் பூங்காவில் அன்று காப்பாளராக இருந்த திரு மெக் அய்வர் என்பவர். திரு மெக் அய்வரால் துவக்கப்பெற்ற அந்தச் சோதனைப் பயிரிடல், சின்கோனா பயிரிட ஏற்ற கால நிலையுள்ள மற்ற இடங்களிலும் பெருமளவில் விரிவடைந்தது.

தற்போது சின்கோனா பயிரிடப்பட்ட மொத்த பரப்பு 2144.53 எக்டேர்களாகும். துறையின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு மருந்து மற்றும் மணம் தரும் செடிகள் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டது. மருந்து மற்றும் மணம் தரும் செடிகளின் மொத்த பரப்பு 1288.25 எக்டேர்களாகும்.

1980-81 முதல் 1983-84 வரையிலும் 479.50 எக்டேர்களில் சின்கோனாச் செடிகளும் 751.90 எக்டேர்களில் மருந்து மற்றும் மணம் தரும் தைலச் செடிகளும் பயிரிடப்பட்டுள்ளன. 31.450 கிலோ கொய்னாப் பொருட்கள் அரசினர் கொய்னா ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 45,547.7 கிலோ மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் நடுவட்டத்திலுள்ள அரசினர் மருந்து மற்றும் மணம் தரும் தைல ஆலையில் 1980-81 முதல் 1983-84 வரையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது தவிர 1,42,000 லிட்டர்கள் சினிபிரஷும் 6,81,595 கற்பூர வில்லைகளும் மேற்படி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ரூ 71.22 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்கள், வெளிநாட்டுச் சந்தையிலும், உள்நாட்டுச் சந்தையிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதைத்தவிர ரூ. 105.06 லட்சம் மதிப்புள்ள மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள் விற்பனை செய்யப்பட்டன. வெளிநாட்டுச் சந்தையில் கொய்னாப் பொருட்களின் விலை சரிவினாலும், வெளிநாடுகளில் கொய்னாப் பொருட்களின் தேவை குறைந்ததாலும், மேற்படி ஆண்டுகளில் கொய்னாப் பொருட்கள் அதிக அளவு ஏற்றுமதி செய்யவில்லை.


இத்துறையின் சின்கோனா மருந்து மற்றும் மணம் தரும் செடிகள் பயிரிடவும், தொழிலாளர்கள் குடியிருப்பு முதலியன கட்டவும், மத்திய மற்றும் மாநில அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. 1980-81 முதல் 1983-84 வரையில், இத்திட்டங்கள் மூலம் செலவிடப்பட்ட தொகை ரூ. 312.55 இலட்சங்களாகும்.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் மருந்து மற்றும் மணம் தரும் செடிகளுக்கும் மற்றும் சின்கோனாப் பயிரில் வரும் நோய்களைத் தடுக்கவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைந்த இரு திட்டங்கள் அமல்படுத்தி செயல்பட்டு வருகின்றன.

மேலே கூறிய திட்டங்களும் சமுதாயத்தின் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பும், வீட்டு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தற்பொழுது இத்துறையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் 2000க்குமேற்பட்ட தொழிலாளர்களும், 75 பணியாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். மொத்தமாக எடுத்துக் கொண்டால், தற்போது 3000 தொழிலாளர்களுக்கு மேல் இத்துறையில் பணியாற்றுகிறார்கள்.

31-3-83 உடன் முடிவடையும் ஆண்டுவரை இத்துறையிலுள்ள சொத்தின் மதிப்பீடு ரூ. 11,05,40,607.25.

இத்துறையிலுள்ள பழைய வீடுகள் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இல்லை. ஆகவே, இந்தப் பழைய வீடுகளுக்குப் பதிலாகத் தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளைப் படிப்படியாகக் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது. மின்விளக்கு, கழிப்பறை, குடிநீர் முதலிய வசதிகளுடன் இப்புதிய குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. 1980-81 முதல் 1983-84 வரை மேற்கண்ட வசதிகளுடன் கூடிய வீடுகள் கட்ட செலவிடப்பட்ட தொகை ரூ. 39.79 இலட்சமாகும்.



அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் படைத்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டு வந்தோர், நீரில் நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம்போல் மனிதரே! அவர்களால் முடிந்தது, நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று.

தொழிற்துறை இயக்குநரகத்தின்கீழ் இயங்கி வந்த மாநிலப் புவியியல் பிரிவு அதன் தொடக்கத்திலிருந்து தமிழ்நாட்டில் பல கனிம ஆய்வுகளை மேற்கொண்டது.

மாநிலத்தில் பொதுத்துறை மற்றும் தனியார் துறையில் கனிமம் சார்ந்த பல தொழில்கள் அமைவதற்கு மேற்குறித்த கனிம ஆய்வுகள் ஆதாரமாக அமைந்தன. கனிமம் சார்ந்த இரு அரசு நிறுவனங்களான தமிழ்நாடு கனிம நிறுவனமும், தமிழ்நாடு சிராமிக்ஸ் நிறுவனமும் அமைவதற்கும் கனிம ஆய்வுகளே காரணமாக இருந்தன.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், இத்துறை இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் மேற்கொண்ட சுண்ணாம்புக்கல் ஆய்வுகள் மற்றும் மதிப்பீட்டுகளின் பயனாக, பொதுத்துறையில் இரு பெரும் சிமெண்ட் ஆலைகளை அமைத்துள்ளது.

## புவியியல் சுரங்கத்துறை

மாநிலத்தில் கனிம வளர்ச்சிக்காகவும் கனிம சட்ட விதிமுறை குறைகளைக் களைந்து, கனிம வருவாயினை அதிகரிக்கும் நோக்கத்துடன் 14.4.1983 முதல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. 1983-84 ஆண்டுகளில் தனி இயக்குநரகத்திற்கு முன் மண்டல அளவுகளில் இயங்கி வந்த அலுவலகங்கள் ஒரு உதவி இயக்குநரைத் தலைமையாகக் கொண்டு அனைத்து மாவட்டத் தலைமை இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்ககத்தின் பணிகள் இருவகைப்படும்:

1. கனிமப் படிவங்களைக் கண்டறிந்து அவைகள் பற்றி மதிப்பீடு செய்து கனிமம் சார்ந்த தொழில்கள் அமைக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வது.

2. கனிம நிர்வாகம், இப்பணியில் கனிமச் சலுகை மனுக்களைப் பரிசீலிப்பது; மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கு முறையே கனிமம் சார்ந்த பணிகளில் உதவி செய்வது மற்றும் குறித்த முறையில் கன்மம் பயன்பட, அறிவுரை வழங்குவது முதலிய பணிகள் அடங்கும்.

கடந்த நான்காண்டுகளில் இத்துறை மேற்கொண்ட கனிம ஆய்வுகளின் சாதனைகள் வருமாறு:



கோலார் தங்கச் சுரங்கங்களில் காணப்படும் தங்கம் கொண்ட சிஸ்டுவகைப் பாறைகளின் தென் தொடர்ச்சி தமிழகத்தில் காணப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டம், மகாராசக்கடை மற்றும் நாரளபள்ளி காப்புக் காட்டுப் பகுதிகளில் காணப்படும் மேற்குறித்த பாறை வகைகளில் தங்கம் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டன. இப்பணி இந்தியப் புவியியல் ஆய்வுக் கழகத்துடன் இணைந்து ஆற்றிய ஒன்றாகும். இப்பகுதியில் சேகரிக்கப்பட்டு சோதனையிடப்பட்ட மாதிரிகளில் ஒரு டன் பாறையில் 2 கிராம் முதல் 1 கிராம் வரை தங்கம் கிடைக்க வாய்ப்புள்ளது என அறியப்பட்டது. இங்குத் துறப்பணப் பணிகள் மேற்கொள்வதற்கு முன் முறையான புவி பௌதிகம் மற்றும் புவி வேதியல் முறை ஆய்வுகளுக்குத்திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிமெண்டஸ் நிறுவனமும் புவியியல் துறையும் இணைந்து கூட்டாக திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை வட்டத்திலும், மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்திலும் காணப்படும் படிக வகைச் சுண்ணாம்புக் கற்களைத் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பாளையம் அருகில் அமைக்க திட்டமிட்டுள்ள பெரிய சிமெண்ட் ஆலைக்குப் பயன்படுத்த, விரிவான ஆய்வுகள் மேற்கொண்டன. ஆய்வுப் பணியின் ஒவ்வொரு நிலையிலும் சுண்ணாம்புக்கல் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சிமெண்ட் உற்பத்திக்குப் பொருந்தும் தன்மைகள் பற்றிச் சோதனையிடப்பட்டது. இங்கு 33 மில்லியன் டன்கள் சுண்ணாம்புக்கல் இருப்பு உள்ளதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. மாநில அரசு, மதுரை மாவட்டத்தில் பாளையம் அருகில் மூன்றாவது சிமெண்ட் ஆலை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

அரசு வேண்டுகோளிற்கிணங்க, புலியூரில் அமைந்துள்ள திருவாளர்கள் செட்டிநாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் மற்றும் சங்ககிரியில் அமைந்துள்ள இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் இவைகளின் சுரங்கக் குத்தகைப் பகுதிகள் மற்றும் குத்தகையற்ற பகுதிகளில் காணப்படும் சுண்ணாம்புக்கல் இருப்பளவு மறு மதிப்பீடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம் வட்டத்தில் திருவாளர்கள் மதராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்தினரின் சுரங்கக் குத்தகைப் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் சுண்ணாம்புக்



# பிலிப்ஸ்

# தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்.




# ஆனால், பிலிப்ஸ் எனும்போது தரம் பளிச்சிடும்.

தரத்திற்கு உறுதி தருவது இப்பெயர், நீடித்திருக்கும்
பளிச்சிடும் வெளிச்சம் தரும் பல்பினைப் பெறவும்
இப்பெயர் சொன்னால் போதும். உங்கள் பணத்திற்குத்
தகுந்த மதிப்பு தருவதும் இதுவே.

பிலிப்ஸ் பல்புகள். எமது பெயர் கொண்டவை
உமது சோதனையில் வெல்லும்.

PEI-1264

**பிலிப்ஸ் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்**

கல் அமைப்புகள் இத்துறையின ரால் ஆய்வு செய்யப்பட்டு, சுமார் 5 மில்லியன் டன்கள் சிமெண்ட் உற்பத்திக்கேற்ற சுண்ணாம்புக் கல் காணப்படுகிறது என்று உறுதிசெய்யப்பட்டது.

1980-84ஆம் ஆண்டுகளில், இத் துறை கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்திலும் சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி, குளித்தலை வட்டங்களிலும் குறைமணிக்கற் களுக்கான ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிரைசோபெரில் என்றவகை மணிக்கற்களுக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முடி வுற்றது. இங்கு பெக்மடைட் வகைப் பாறைகளில் சிதறிய நிலையில் சிறு கிரைசோபெரில் துண்டுகள் காணப்படுவதால், பொருளாதார முக்கியத்துவம் அற்ற ஒன்றாகும் என முடிவு செய்யப்பட்டது. திருச்சிராப் பள்ளி மற்றும் சேலம் மாவட்டங் களில் ஆய்வுப்பணி மீண்டும் தொடங்கப்பட உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 1979-1981-ஆம் ஆண்டுகளில் ஏற் பட்ட நிலச்சரிவுகள் மனித உயிர் சொத்துக்களுக்குப் பெரும் சேதம் விளைவித்தன. புவியி யல் மற்றும் சுரங்கத்துறை மற் றும் இந்தியப் புவியியல் ஆய்வுக் கழகமும் இந்நிலச் சரிவுகள் பற்றிய விரிவான ஆய்வுகள் மேற் கொண்டு நிலச்சரிவுகள் ஏற்ப டக் காரணங்கள் நிலச்சரிவுகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற் கான சாத்தியக் கூறுகள் பற்றியும் விரிவான அ,ற,க்கை அளித்தன.

இந்தியப் புவியியல் ஆய்வுக் கழகம் மாநிலப் புவியியல் துறை நிலச் சரிவுகள் பற்றி மேற் கொண்ட ஆய்வுகள் பின்னர் நிலச்சரிவுகளால் பொருட்சேதம் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுப்பதில் பெரும் பங்கு வகித் தன எனப் பாராட்டியுள்ளது.

தென்னக இருப்புப்பாதைத் துறையினரின் வேண்டுகோளிற் கிணங்க, கர்நாடக மாநிலத்தில் பாசன் - மங்களூர் இருப்புப் பாதைப் பிரிவில் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட சேதம் ஆராயப்பட்டு, அதைத் தடுப்பதற்கான வழி முறைகள் சுமார் 25 கி.மீ. அள விற்குப் பரிந்துரைக்கப்பட்டன. மேலும் தமிழ்நாட்டில் மேட்டுப் பாளையம், கர்நாடகாவில் சாம் ராசநகரம் பகுதிகளில் இருப்புப் பாதை அமைக்கும் வழிப்பாதை ஆய்வுப்பணியும் மேற்கொள்ளப் பட்டது.

இருப்புப்பாதை வழியில் அமையவிருக்கும் குகை அமைப் புகள் பற்றி விரிவான ஆய்வு செய்யப்பட்டு, பாதுகாப்பு வழி முறைகள் வழங்கப்பட்டன. அவ் வாறே போடிநாயக்கனூர்-கம்பம் அகல இருப்புப்பாதை வழிப் பாதை ஆய்வுப்பணிகளும் மேற் கொள்ளப்பட்டு மேற்குறித்து ஆய்வு அறிக்கை தென்னக இருப் புப் பாதைத் துறையினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.


இரும்பு மற்றும் எஃகுத் தொழி லில் தரம் குறைந்த இரும்புத் தாதுவைப்பயன்படுத்தி'ஸ்பாஞ்ச் இரும்பு' உற்பத்தி செய்தல் தற் போதைய தொழில் நுட்பமாகும். இரும்புத்தாது திட எரிபொரு ளின் மூலம் வேதியல் குறைத்தல் முறையில் உற்பத்திசெய்யப்பட்டு உருண்டைகளாக மாற்றப்படு கின்றன. இத்துறை வடஆர்க் காடு மாவட்டத்தில் திருவண்ணா மலையில் காணப்படும் தரம் குறைந்த மாக்னடைட் குவார்ட் ஸைட் இரும்புத்தாதுவைப் பயன்படுத்தி 'ஸ்பாஞ்ச் இரும்பு' உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகள் பற்றி சோதனைகள் மேற்கொண்டு வருகின்றது.

## கனிம நிர்வாகம்

மாவட்டத் தலைமை இடங் களில் அலுவலகங்கள் அமைக்கப் பட்ட உடன், முறையான சுரங்க ஆய்வுகள் மேற்கொண்டு முறை கேடுகள் சீர் செய்யப்பட்டதால் கனிம நிர்வாகம் முறைப்படுத்தப் பட்டது. இதனால் முறையான அறிவுப்பூர்வமான சுரங்கப் பணிகள் மேற்கொள்ள வழி வகுக்கப்பட்டது.

முறையான கால இடைவெளி களிலும், திடீரெனவும் சோதனைகள் மேற்கொள்ளப் பட்டதால் சட்டத்திற்குப் புறம் பான சுரங்கப் பணிகளும், அனு மதியின்றிக் கனிமங்கள் கொண்டு செல்வதும் பெருமளவில் தடை செய்யப்பட்டு, கனிம வருவாய் கடந்த நான்கு ஆண்டுகளில் மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது. 1979-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த கனிம வருவாய் தற்போது 2.7 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

குறிப்பாக, சிறுவகைக் கனிமச் சுரங்கங்களின் அளவு மற்றும் அவைகளிலிருந்து கனிமங்கள் பெறக்கூடிய அளவு முதலியவை கருத்தில் கொள்ளப்பட்டது. கனிம வருவாயை உயர்த்துவ தற்காக, விற்பனை விலையை நிர்ணயித்து அதன் மூலம் பல சுரங்கங்கள் ஏல விற்பனையின் கீழ்கொண்டு வருவதற்காகக் குறைந்த ஏலத்தொகை நிர்ண யம் செய்யப்பட்டது.



சிறுவகைக் கனிமங்களாலான ஆற்றுமணல், செங்கல், களிமண் சுட்ட கற்கள் மற்றும் சுக்கான் கல் முதலியன சட்டத்திற்குப் புறம்பான முறையில் வெட்டி யெடுத்துக் கொண்டு செல்லும் ஏராளமான நடவடிக்கைகள் கண்டறியப்பட்டன. சட்டப்படி அந்நடவடிக்கைகளின் மேல் அபராதம் விதிக்கப்பட்டநு.

## சிப்காட்டின் சீரிய பணிகள்:

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் பின்தங்கிய பகுதிகளைத் துரித மாகத் தொழில்மயமாக்குவதற் கும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் பரவலாகத் தொழில் வளர்ச்சியை முன் னேறச் செய்தலும், பின்தங்கி யுள்ள பகுதிகள் தொழில் வள மடைய சிறப்பான வசதிகளை அளித்தலும் சிப்காட்டின் குறிக் கோள்களாகும்.

'சிப்காட்' நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும், அதற்குரிய நிதி யுதவிக்கும் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது—

தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல் படுத்துதல்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட் டத்தின்கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி யுதவி அளித்தல்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களின் தொழில் வளர்ச் சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்

டுள்ள இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குதல்.

தொழில் முனைவோர்களுக்குப் பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

கும்மிடிப்பூண்டித் தொழில் இணையத்தில் இதுவரை 47 தொழிற்கூடங்கள் அமைப்பதற்காக 162 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மானாமதுரை தொழில் இணையத்தில் இதுவரை 27 தொழிற்கூடங்கள் அமைப்பதற்காக 66 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டைத் தொழில் இணையத்தில் ஒரு தொழிற்கூடம் அமைப்பதற்கு 52 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டைத் தொழில் இணையத்தில் 6 தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு 30 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடலூர் தொழில் இணையத்தில் 9 தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு இதுவரை 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு மானியம்:**

தமிழக அரசு அறிவித்த இணையற்ற திட்டத்தின்படி, கீழ்க்கண்ட ஐந்து தொழில்கள் தமிழகத்தில் எந்த இடத்தில் தொடங்கப்பட்டாலும் 10சதவீதம் மானியம் அல்லது முறைப்படி அமர்த்தப்படும்தொழிலாளர்ஒருவருக்கு ரூ. 20,000 (இவற்றில் எது குறைவோ அது) விகிதத்தில் ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாமல் சிறப்பு மானியம் பெறத் தகுதி உடையவை ஆகும்.

1. மின் அணுத் தொழில்.

2. மருத்துவப் பொருள் தயாரித்தல் மற்றும் பட்டியலிடப்பட்ட மருந்துகளின் கலவை நிர்ணயம்.

3. மோட்டார் வாகனங்களுக்கான உபகரணங்கள் தயாரித்தல்.

4. வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்குச் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் கருவிகள் தயாரித்தல்.

5. சனல் தயாரித்தல் (ஆறு வட்டங்களில் மட்டும்)

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4 தொழிற்கூடங்களுக்கு ரூ. 14 இலட்சம் மானியம் அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 6 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது.

**தடையில்லா வணிக மண்டலம்:**

தமிழ்நாட்டில் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அருகில் ஒரு தடையில்லா வணிக மண்டலம் அமைக்க மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. இம்மண்டலத்தில் எந்த வசதிகள்-சலுகைகள் அளிக்கலாம் என்று முடிவு செய்ய தமிழக அரசின் தலைமைச் செயலர் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இம்மண்டலம் முதலில் 150 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு இறுதியில் 450 ஏக்கர் பரப்பளவிற்கு விரிவாக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மண்டலம் தாம்பரம் காசநோய் மருத்துவ மனைக்கருகில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தை மேம்பாடு செய்யும் பணியைத் தமிழக அரசு 'சிப்காட்' நிறுவனத்திடம் கொடுத்துள்ளது. சிப்காட் நிறுவனம் இந்தத் தடையில்லா வணிக மண்டலத்தை மேம்பாடு செய்யும் பணியை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. அண்மையில் இம்மண்டலத்தின் பணிகளைக் கவனிக்க மத்திய அரசு வளர்ச்சி ஆணையர் ஒருவரை நியமித்துள்ளது.

**வட்டியில்லா விற்பனை வரிக் கடன்:**

தமிழக அரசு சர்க்கரை, சிமெண்ட், ஜவுளி, தாதுப் பொருள் மற்றும் சுரங்கத் தொழில், காய்ச்சி வடிக்கும் தொழில்கள் ஆகிய ஐந்து வகைத் தொழில்களுக்கும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வசதியை விரிவுபடுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 12 ஜவுளி தொழிற்கூடங்களுக்கு ரூ. 196 இலட்சம் உதவி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 86 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது.


**தமிழக அரசின் மூலதன மானியம்:**

தமிழக அரசு 24 வட்டங்களில் அமைக்கப்படும் சிறு தொழில்களுக்கு 15 சதவீத மானியம் அல்லது ரூ. 15 இலட்சம் (இவற்றில் எது குறைவோ அது) அளிக்கப்படும் என்று அறிவித்தது. அரசு இத்திட்டத்தைச் சிறு தொழில்களுக்கு மட்டும் அல்லாமல் நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கும் வழங்குவதை விரிவுபடுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 25 தொழிற்கூடங்களுக்கு ரூ. 284 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 81 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது.

**தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்**

தமிழக அரசுக்கு முற்றிலும் சொந்தமானது தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் 1974ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 22ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டு, 1975-ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் இயங்கத்தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு உற்பத்தி செய்வதும், உப்பைச்சார்ந்த இரசாயனப் பொருட்கள் தயாரித்தலும், உப்பு சார்ந்த துணைப் பொருள்கள் தயாரித்தலும் ஆகும்.



**மிகவும் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுர மாவட்டத்தில் 5,600 ஏக்கர் பரப்பில் மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டம் அமைந்துள்ளது. தமிழக அரசு மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டத்தினை அமல்படுத்தியதன் முக்கிய நோக்கம், வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதுமான இந்த இடத்தில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதே ஆகும்.**

இந்நிறுவனத்திற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம் எனும் பெயரில் மற்றொரு உப்புத் திட்டமும் உள்ளது. இத்திட்டம் பட்டுக்கோட்டை வட்டம் மரவக்காடு வடகாடு கிராமங்களில் 5,400 ஏக்கராப் பரப்பளவில் உருவாக்குவதற்கு நவம்பர்மாதம் 1978ஆம் ஆண்டு தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் திட்ட மதிப்பீடு ரூ. 120 லட்சம் ஆகும். இத்திட்டம் முன்னேற்றப் பணிகளை 1979ஆம்ஆண்டு தொடங்கியது. இத்திட்டம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உருவாக்கப்பட்டது.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி இலக்கை விஞ்சிய சாதனை.

இந்திய பிரதமரின் இருபதம்சத் திட்டத்தின் மூன்றாவது அம்சத்தின் ஒரு பிரிவாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் இடம் பெற்றுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1983-84ல் 32.9 இலட்சம் பேர் அரசு உதவி பெற்றுள்ளனர்.

உதவி பெற்றோரில் 9,88,323 பேர் ஆதிதிராவிடர் வகுப்பையும், 3,54,796 பேர் பழங்குடியையும் சேர்ந்தவர்கள். பயனுற்ற மகளிர் எண்ணிக்கை 1,87,107 ஆகும்.

மாநில வாரியாக, அரியானா (180 சதவீதம்) முதலிடத்தினையும், குஜராத் (133 சதவீதம்), கேரளம் (130 சதவீதம்), உத்தரப்பிரதேசம் தமிழகம் (123 சதவீதம்), அடுத்த இடங்களையும் (121 சதவீதம்) வகிக்கின்றன.

திட்டத்தின்கீழ் நிதிப் பயன்பாடு ரூ. 345.76 கோடி. இலக்கு நிர்ணயம் ரூ. 407.36 கோடி. திட்டச் செலவினத்தில் தமிழகம் இமாசலப் பிரதேசம், ஆந்திரம், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகியவை இலக்கை விஞ்சியுள்ளன.

—பத்திரிக்கைத் தகவல் அலுவலகம்

### மாரியூர் வாலிநோக்க உப்புக் கூட்டுத் திட்டம்

இராமநாதபுரத்திலிருந்து 45 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் இந்நிறுவனம் 1975-ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்திக்கான முன்னேற்றப் பணிகள் செய்யப்பட்டு 1976ஆம் ஆண்டு உப்பு உற்பத்திக்கான முன்னேற்றப் பணிகளை மட்டுமின்றி, உப்பு உற்பத்தியும் செய்தது. மேம்படுத்த வேண்டிய 5,600 ஏக்கராக்களில் இதுவரை 2,266 ஏக்கராக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உப்புத் திட்டம் 1976-ஆம் ஆண்டு உப்பு உற்பத்தியை தொடங்கியது. 1981ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உப்பைத் தயாரித்து வருகிறது. மேலும் 1984-ஆம் ஆண்டு 60,000 மெட்ரிக் டன் அளவுள்ள தொழிற்சாலைகளுக்கு உகந்த உப்பைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உப்புத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு தூத்துக்குடி ஆல்காலிக் இரசாயன மற்றும் உரத்தொழிற்சாலை, திருவாங்கூர் கொச்சின் கெமிக்கல்ஸ், கோத்தாரி (சென்னை) போன்ற மிகப் பெரிய நிறுவனங்களுக்குச் சிறந்த முறையில் விநியோகம் செய்து வருகிறது. நிறுவனத்திடம் தொழிற்சாலைக்கு ஏற்றதும் மற்றும் உணவிற்கு ஏற்றதுமான உப்பு உள்ளது. டிசம்பர் 1983 முதல் ஏப்ரல் 1984 வரையில் பெய்த அடை மழையின் காரணமாக உப்பின் தேவை அதிகரிக்கப்பட்டு வேதாரண்யம் மற்றும் தூத்துக்குடியைச் சார்ந்துள்ள வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் நிறுவனமிடத்தில் உப்பை வாங்குகிறார்கள். எனவே, காலம் தவறிய பெரும் மழையினால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு அதனால் பொது மக்களுக்கு உப்பு கிடைக்காத நிலையில் பொதுமக்களுக்கு உப்பு கிடைக்க இந்த நிறுவனம் ஒரு உன்னத சேவை செய்கிறது.

இந்நிறுவனம் ஏப்ரல் 1984 மாதத்தில் மட்டும் 8,000 மெட்ரிக் டன் அளவுள்ள உப்பை விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. மேலும் கடந்த நான்கு மாதங்களில் 15,000 மெட்ரிக் டன் மதிப்புள்ள உப்பை விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ரூ. 75 லட்ச ரூபாய் செலவில் வாலிநோக்கத்தில் ஒரு சிறிய துறைமுகத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தொடக்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இத்திட்டம் 1,000 நபர்களுக்குப் பருவகால வேலைவாய்ப்பும், 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளித்து வருகின்றன. இந்நிறுவனம் முழு அளவிற்கு வளர்ச்சி அடையும் பொழுது 1,500 நபர்களுக்குப் பருவகால வேலைவாய்ப்பும், 200 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம்

இத்திட்டம் 1978-ஆம் ஆண்டு 2,800 ஏக்கரா மொத்த பரப்பில் உப்பு உற்பத்தியை முன்னேற்றப் பணிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1982-ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 1,600 ஏக்கர் பரப்பில் உப்பு உற்பத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 200 முதல் 300 வரையிலான நபர்களுக்குப் பருவ கால வேலைவாய்ப்பும் 20 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் அளிக்கிறது.

### புதிய திட்டங்கள்

இந்நிறுவன உப்புத் திட்டத்

தின்கீழ் ஊட்டச் சத்துணவு தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் ஒரு மாதிரி உப்பு உற்பத்தி செய்யும் உப்பளத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்த உப்புத் திட்டத்தின் அருகாமையில் அமைந்துள்ள மெக்னீசியம் உலோகத் திட்டத்திற்குத் தேவையான 36 உப்பு கழிவுநீர் (பிட்டர்ன்ஸ்) விநியோகம் செய்ய ஆராய்ந்து வருகிறது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதையும், விரைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு நிறுவன சட்டத்தின்படி 1949-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இந்நிறுவனம் நிலம், கட்டடம், தளவாடங்கள், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரக்காலக்கடன் காலம் தாழ்த்தித் தொகையினைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்தரவாதம் அளித்தல், பங்குகளை வாங்குதல் போன்றவைகள் மூலம் நிதியுதவி அளிக்கிறது. மேலும் சிறுதொழில்கள், குறுந்தொழில் துறைகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கும் இந்நிறுவனம் சிறப்புத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. குறைந்த வட்டி வீதம், கடனைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட காலக்கெடு, குறைந்த பிணைத் தொகை போன்ற தாராளமாக எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடந்த 1949-ல் இருந்து 1978 வரையான 30 ஆண்டுக்காலத்தில் அளித்த உதவியினைக் காட்டிலும் 1978-83 வரையான கால கட்டத்தில் நிதியுதவி ஒப்புதல், நிதி விநியோகம் ஆகியவை போற்றத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

தொழில் முனைவர்களின் தேவைகள் மாவட்ட அளவிலேயே நிறைவு செய்யப்பட வேண்டி, மண்டல, கிளை அலுவலர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 4 மண்டல அலுவலகங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டு கடனுதவித் தொகை ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் 2.5 லட்சம் வரை அளிக்க அதிகாரம் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, ஆவணங்கள் வைத்து வருதல் மற்றும் கடன் தொகைகளை அளித்தல் சுமார் ரூபாய் 7.5 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், சிறு தொழில் நிறுவனங்கள் கடனுதவியினை எளிதில் பெறவும் மாவட்ட அளவிலேயே துரிதமாகக் கடனுதவி பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தொழில் முனைவோருக்கு ஆலோசனை அளிக்கும் பிரிவு சென்னையிலுள்ள தலைமையகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாகப் பல்வேறு தொழில் துறைகளுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகள், ஊக்குவிப்புத் தொகைகள், மானியங்கள், மற்றும் பல்வேறு வகைப்பட்ட உதவிகள், சலுகைகள் முதலியவற்றை அறிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், தொழில் முனைவோர், குறிப்பாக சிறு தொழில் முனைவோர், தொழில் தொடங்குவதற்குரிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெற்று வருகிறார்கள்.

இந்நிறுவனம் கடந்த சில ஆண்டுகளில் சிறிய தொழில் துறைகளுக்கு மாநிலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் நிதியுதவி அளித்துள்ளது. 1979-80-ஆம் ஆண்டிற்குமுன் இந்நிறுவனம் சிறுதொழில் துறைக்கு அளித்த நிதியுதவி ஒப்புதல் 50 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தது. ஆனால் இத்துறைக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட நிதியுதவி ஒப்புதல் தொகை 85 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்து உள்ளது. 1983-84-ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.53.45 கோடிவரை (தற்காலிகமானது) சிறுதொழில் துறைகளுக்கு நிதியுதவி ஒப்புதல் அளித்துள்ளது. இது, இவ்வாண்டு மொத்த நிதி உதவியில் 91 சதவீதமாகும்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்குப் பெரும் அளவில் உதவி புரியும் நோக்கத்துடன் குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்ட காலக் கெடு, அடிப்படை நிதி உதவி முதலிய பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் 1983-84-ஆம் ஆண்டில் இந்

---

## தொல்லையே தராத தொலைபேசிகள் !


சற்றும் தொல்லை தராத தொலைபேசி இணைப்புகள். அடடா, எங்கே? என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? இதைவிட இனிப்பான செய்தியும் உண்டு. எப்பொழுதாவது, ஏதாவது குறைகள் இருந்தால் சொல்லி அனுப்பலாம். வீடு தேடி வந்து விடுவார் ஒருவர்- உங்களைத் திருப்திப்படுத்துவதே என் நோக்கம்-என்று சொல்லிக் கொண்டு! அவர் வேறு யாரும் இல்லை. அந்த தொலைபேசி நிறுவன உரிமையாளரே!

'ஸல்யூடா மவுண்டன் டெலிஃபோன் கம்பெனி' என்ற அந்த நிறுவனம் அமெரிக்காவில் வட கரோலினா மாநிலத்தில் 'ஸல்யூடா' என்ற மலையடிவாரச் சிற்றூரில் இருக்கிறது. ஊரின் மொத்த மக்கள் தொகையே 12000க்குள் தான். ஆனால் அங்கே சுமார் 1500 தொலைபேசி இணைப்புகளை இந்தச் சிறிய நிறுவனம் வழங்கி நன்கு பேணி வருகிறது. நிறுவனத்தில் உரிமையாளர் உட்பட மொத்த ஊழியர் நால்வரே. அவர்களில் ஒருவர் பகுதி நேர ஊழியர்.

புதிய இணைப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இருப்பனவற்றைச் செம்மையாக இயக்குவது முதலான வேலைகளில் நேரடியாக ஈடுபடுவது உரிமையாளர் எட் லேலண்ட் மற்றும் அவர் மகன் காட்டர். இது ஒரு குடும்ப நிறுவனம் என்பது மட்டுமல்ல, நிறுவனத்தினர் தம் வேலை நேரம் போக எஞ்சிய பொழுதை ஊர் மக்களுடன் ஒரு குடும்பமாக இணைந்து பொது வாழ்வுப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இதையெல்லாம் விட அதிசயம்: கடந்த 48 ஆண்டுகளில் இந்த நிறுவனம் ஒரே ஒரு முறைதான் கட்டணத் தொகையை உயர்த்தியது. அதுவும் அதிகமாக இல்லை.

— அமெரிக்கத் தகவல் நிலையம்



நிறுவனம் பின்தங்கிய பகுதிகளில் உள்ள நிறுவனங்களுக்கு அளித்த நிதியுதவித் தொகை ரூ. 25.05 கோடியாகும் (தற்காலிகமானது). இந்நிறுவனம் நலிந்த பிரிவினருக்கு உதவும் வகையில் தாழ்த்தப்பட்டோர் தொழில் முனைவர்களுக்கு ஒரு சிறப்புச் சலுகைத் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவோருக்குக் குறைந்த வட்டி 10.25 சதவீதமாகவும், ரூ. 25,000 வரையான கடனுக்குப் பங்குத்தொகை 5 சதவீதமாகவும் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான இந்நிறுவனம் 1982-83-ஆம் ஆண்டில் ஒரு சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 1 இலட்சம் வரை நிதியுதவி பெறலாம். ரூ. 25,000 வரையிலான கடனுக்குப் பங்குத் தொகை தேவையில்லை. மேலும், இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படாத தொழில்களாயினும், சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் தொழில் நுணுக்க அனுபவம் - திறன் கொண்டவர்கள்கூட மிகுந்த சலுகையுடன் கூடிய, பங்குத் தொகையுடன் தாங்களாகவே சொந்தத் தொழில் நிறுவனங்கள் நிறுவ வாய்ப்புகள் உள்ளன. இதன்படி தொழில் முனைவோர் தங்களது பங்குத் தொகையினைக் கொண்டுவர வசதி இல்லாத நிலையில் இந்நிறுவனமே அத்தகைய தொழில் முனைவோருக்குச் சுலபக்கடன் (Soft Loan) அதாவது மிகவும் குறைந்த 1 சதவீத வட்டி விகிதத்தில் கடன் அளித்து உதவுகிறது.

**'சிட்கோவின் சிறப்பான பணிகள்':**

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), சிறுதொழில்களை வளர்ப்பதும் அவற்றுக்கு உதவுவதும் என்ற முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டதாக, 1970ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமாக நிறுவப்பட்டு, 1971-ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சிறுதொழில்களை வளர்ப்பதும், அதன்வளர்ச்சிக்குப் பாடுபடுதலும் என்கிற பொறுப்புகளைக் கொண்ட நிறுவனமாக 'சிட்கோ' தன்னுடைய 13 ஆண்டுப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

'சிட்கோ' செயலாற்றிவரும் திட்டங்களாவன :

சிறுதொழில்களுக்கு விற்பனை வசதிகளைச் செய்து தருதல்.

தொழிற்பேட்டையில் மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்குதல், தொழிற்கூடங்களைக் கட்டித்தருதல் ஆகிய அடிப்படை வசதிகளைச் சிறுதொழில்களுக்கு வழங்குதல்.

மத்திய, மாநில மூலதன மானியங்கள வழங்குதல்.

முக்கிய மூலப்பொருட்களைக் கிடைக்குமாறு செய்ய வழிவகை செய்தல்.

வட்டி இல்லாத விற்பனை வரிக்கடன் உதவி வழங்குதல்.

குறைந்த அழுத்த மின் கட்டண மானிய சலுகைகளை வழங்குதல்.

நலிந்த சிறுதொழில்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

'சிட்கோ'வின் முயற்சிகளின் விளைவாக, 'முதலமைச்சர் மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ்' தேவையான பெருமளவு பல்பொடியைத் தயாரிக்க ஏற்பாடு செய்து, அதனை விநியோகிக்கவும் சிட்கோவினால் முடிந்தது. தற்போது, தமிழ்நாடெங்கும் உள்ள 47 சிறுதொழில் அமைப்புகளினால் தரமான பல்பொடி தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. பல்பொடிக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் தயாரிப்பில் 12 அமைப்புகளும், பல்பொடியைப் பாக்கிங் செய்யும் பொருட்கள் தயாரிப்பில் 25 அமைப்புகளும் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளன. இதன் விளைவாக 1500 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

சிட்கோவின் மற்றுமொரு குறிப்பிடத்தகுந்த பணி 'முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ், சேய் நலமையங்களுக்குத் தேவையான கல்வித் துணைக் கருவிகளைத் தொடர்ந்து வழங்கியதாகும். இந்த ஆண்டும் கல்வித் துணைக் கருவிகளாக ரூ. 49.10 இலட்சம் மதிப்புள்ள 8184 செட்டுகளை உற்பத்தி செய்து வழங்க முடிந்தது. இந்த உற்பத்திப் பணியில் 18 சிறுதொழில் அமைப்புகள் பங்கு பெற்றுப் பயனடைந்தன.

சிறுதொழில்களுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளைச் செய்து தரும் திட்டங்களின்கீழ், சிட்கோ சாதனைகள் செய்துள்ளது.

பல ஆண்டுகளாக வாடகை அடிப்படையில் இயங்கி வந்த தொழிற்கூடங்களைத் தவணை முறையில் அதில் தொழில் நடத்துபவர்களுக்கே சொந்தமாக்கித் தர வேண்டும் என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்தத் திட்டத்தில், சிட்கோவினுடைய நிர்வாகத்தின்கீழ் இயங்கி வரும் 33 தொழிற்பேட்டைகளில் உள்ள 783 தொழிற்கூடங்களும் அடங்கும்.

இதனோடு, சிட்கோ இதுகாறும் 1169 தொழிற்கூடங்களை 29 இடங்களில் (13 அரசினர் தொழிற்பேட்டை, 16 சிட்கோ தொழிற்பேட்டை) தவணை முறையில் வழங்கும்

## நீரிழிவு நோய்க்குப் புது மருந்து

நீரிழிவு நோயா? கவலைப் படாதீர்கள். நீரிழிவு நோய் மற்றும் அது தரும் வேறுபல தொல்லைகளிலிருந்து மக்களை விடுவிக்க இருக்கிறது. அமெரிக்காவில் அண்மையில் இதற்கான புதிய மருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதன் பெயர் : க்ளிபிஸைடு (Glipizide).

நியூயார்க் மருத்துவக் கல்லூரி மற்றும் விஸ்கான்ஸன் மருத்துவக் கல்வி நிலையத்தில் உள்ள மருத்துவ அறிஞர்கள் அறிமுகம் செய்யும் க்ளிபிஸைடு நீரிழிவு நோயின் தொடக்க காலத்தில் இரத்த நாளங்கள் சேதப்படுவதைத் தடுக்கிறது.

'நியூ இங்லண்டு ஜர்னல் ஆஃப் மெடிஸின்' என்ற மருத்துவ இயல் இதழில் கண்டுள்ளபடி புதிய மருந்தைப் பயன்படுத்தினால் இரத்த இழப்பு தவிர்க்கப்படுவதோடு சேதப்பட்ட இரத்தக் குழாய்கள் மீண்டும் உறுதியாக வளர்கின்றன என்று மருத்துவ அறிஞர்கள் தம் மூன்றாண்டு ஆராய்ச்சியில் கண்டு தெளிந்துள்ளனர்.

புதிய மருந்தினால் இரத்த நாளங்கள் வலுவடைவதால் பார்வை இழப்பு, மாரடைப்பு, சிறுநீரகம் செயலிழத்தல் முதலான நோய்களும் தடுக்கப்படும்.

பரவலாக மக்களுக்குக் கிடைப்பதற்கு முன்னால் புதிய மருந்து மேலும் சில சோதனைகளுக்கு உட்படுத்தப்பட இருக்கின்றது.

கோடி கோடியாகக் கொட்டிச் செலவிட்டாலும் செய்து காட்ட இயலாத காட்சியன்றோ மலைவளம். அதிலும் தமிழகத்தில் தன்னிகரில்லா வரலாற்றுச் சிறப்பினுக்குஉள்ள சான்றுகளிலே ஒன்றுகொல்லி மலை! முகிலைத் தொட்டிழுத்து முத்தமிடும் குன்றுகள் உள்ளன —அந்தக் குன்றுகளிலே இயற்கை வளம் கொஞ்சி விளையாடுகிறது. எனினும் அது திருமாலுக்கா, அவன் மருமகனுக்கா என்று மல்லுக்கு நிற்கின்றனர் மேதைகள்!



அடிப்படையில் கட்டி உள்ளது. மேலும், 983 மேம்படுத்தப்பட்ட மனைகள் பல்வேறு தொழிற் பேட்டைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்டவைகளைத் தவிர, குறிச்சி (கோயம்புத்தூர்), தூவாக்குடி (திருச்சிராப்பள்ளி), திண்டுக்கல், மாதவரம் ஆகிய இடங்களில் தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆலத்தூரில் உள்ள (திருப்போருக்கு அருகாமையில்) மருந்துகள் தயாரிக்கும் தொழில்களுக்கெனத் தொடங்கப்பட்ட தொழிற்பேட்டையில், 11 தொழிற்கூடங்கள் முதல் கட்டமாக ( First Phase ) கட்டப்பட்டு வருகின்றன. இங்கு 1984 ஜூன் மாதத்திற்கு முன்பு கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிடும். இதைத் தவிர, 13 மேம்படுத்தப்பட்ட மனைகளும் ஒதுக்கீடு செய்யத் தயாராகின்றன. ஆலத்தூரில் தொழில் முனைவோரும் சிட்கோவும் சேர்ந்து இடும் நிதி, ரூ. 500.00 இலட்சம் ஆகும். மொத்தத்தில், 35 தொழிற்கூடங்களும், 40 மேம்படுத்தப்பட்ட மனையும் 3 கட்டங்களாக வழங்கப்பெறும். குறிப்பிட்ட தொழிலின் தொழில் பேட்டை என்ற வகையில், ஏழாவதாக, மருந்து தயாரிப்புக்கென்றே இத்தொழில்பேட்டை இயங்கும்.

1974-75 முதல் 1979-80 வரையான ஆறு ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஒப்புதல் ஆணைகளோடு, ஒப்பிட்டுப் பார்க்கையில் கடந்த நான்கு ஆண்டுகளில் அளித்த ஒப்புதல் ஆணை மூன்று மடங்கு அதிகமாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஆண்டுக்குச்சராசரி 1520 சிறு தொழில்களுக்கு ரூபாய் 581 இலட்சம் பெறுமான ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டன.

மத்திய முதலீட்டு மானியத் தொகையைப் பெறுவதில், தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது.

மாநில முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தில் சிட்கோ ரூபாய் 151.39 இலட்சங்களை வழங்க ஒப்புதல் ஆணை வழங்கியதில், 655 சிறுதொழில்கள் பயனடைந்துள்ளன.

முக்கிய மூலப்பொருட்கள் விநியோகத் திட்டத்தைச் சிட்கோ சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இரும்பு, எஃகு, சுட்ட கரி, தீக்குச்சி, மெழுகு, ஈயம், துத்தநாகம், பாரபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட்டு, பேட்டி ஆசிட்ஸ்போன்ற தொழில்களுக்குத் தேவையான கட்டுப்பாடுள்ள முக்கிய மூலப் பொருட்களைச் சிட்கோ கொள்முதல் செய்து, சிறுதொழில்களுக்கு வழங்குகிறது.

## ‘டிட்கோவின்’ பணிகள்

ஆலங்குளத்தில் சிமெண்ட் ஆலையையும், அரக்கோணத்தில் உருக்கு ஆலையையும் பொதுத் துறையின்கீழ் நடத்தும் நோக்குடன், ‘டிட்கோ’ 1965-ல் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் இந்திய அரசு கூட்டுத்துறைக் கொள்கையை வகுத்தபோது, கூட்டுத் துறையின்கீழ் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தும் பணி, டிட்கோவிடம் கொடுக்கப்பட்டது.

1-4-1977-ல் ஆலங்குளம் ஆலை, அரியலூர் ஆலை ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் டிட்கோவின் கிளை நிறுவனமான டான்செம் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. தமிழ்நாடு ஸ்டீல்ஸ் அரக்கோணம் என்னும் பொதுத்துறை நிறுவனம் டிட்கோவின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது.

1983-ஆம் ஆண்டில், வடார்க்காடு மாவட்டம் காட்பாடிக்கு அருகில், ஆண்டுக்கு 15,000டன் வெடி மருந்துகளைத் தயாரிக்கும் திறன் கொண்டதும் ரூபாய் 20.85 கோடி மதிப்பீட்டுச் செலவிலானதுமான வெடிமருந்துத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்சாக, தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம் என்ற மற்றொரு கிளை நிறுவனம் உருவாக்கப்பட்டது.

வெடிமருந்துத் திட்டத்தின் ஓர் அங்கமாக, அத்தொழிற்சாலை வளாகத்திற்குள், டிட்டோனேட்டர்கள், டிட்டோனேட்டிங் பியூஸஸ், ரூபாய் 16.00 கோடி செலவிலும், அமோனியம் நைட்ரேட் நைட்ரிக் அமிலம் ரூ. 20.50 கோடி செலவிலும் தயாரிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம் எடுத்து வருகிறது.

1983-ல் டிட்கோவில் துணை நிறுவனமாக்கப்பட்ட தமிழ்நாடு கெமிகல் ப்ராடெக்ட்ஸ் லிமிடெட் நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம் கோவிலூரிலுள்ள் தனது தொழிற் பிரிவில் சோடியம் ஹைட்ரோ சல்பைட் திரவ சல்பர் டை ஆக்ஸைடு தயாரிக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ரூ. 5.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் மெக்னீசியம் மெட்டல் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாடு கெமிக்கல் பிராடெக்ட்ஸ் லிமிடெட் தனது பணிகளைப் பலதரப்படுத்தி வருகிறது.

ஆலங்குளத்திலுள்ள தமிழ்நாடு சிமெண்ட் ஆலையை ரூ. 4.07 கோடி செலவில் நவீனப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. மேற்சொன்னவை தவிர ரூபாய் 7.95 கோடி செலவில் மீள் உருளை ஆலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ரூபாய் 9.6 கோடி செலவில் கல்நார் சிமெண்ட் குழாய்த் திட்டமும் டான்செம் நிறுவனத்தார் ஏற்கெனவே நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது 1984-85-ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

டிட்கோ இதுவரை சுமார் 14,000 பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மற்ற தொழில் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படுகையில் மேற்கொண்டும் சுமார் 9000 பேருக்கு டிட்கோ வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அடுத்து உரையாற்றிய காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் திரு குமரி அனந்தன் எம். எல். ஏ, தெரிவித்தார்:

"பாஸ்கர சேதுபதியால் அமெரிக்காவுக்கு அனுப்பப் பட்டவர் விவேகானந்தர். அந்த ஞான சூரியன் திருப்பி வந்த போது வரவேற்க வந்த சேதுபதி 'தங்கள் கால்களைத் தரையில் பதிக்க வேண்டாம். என் தலையில் கால் வையுங்கள்' என்று கேட்டுக் கொண்டாரே, அதனால் அவர் வாழ்ந்த இந்த இடத்தைத் தலைநகரம் என்று சொல்லாமல் வேறு எதைத் தலை நகரம் என்று சொல்வது?

''இது தலை நகரமாக தனி மாவட்டமாக - தலை நிமிர்ந்து நிற்கும் மாவட்டபாக இருக்கும் என்பது உறுதி''

சர் திரு ஒய்.எஸ். எம். யூசுப் அவர்கள் முஸ்லீம் சமுதாயத்திற்குத் தமிழக அரசு ஆற்றிவரும் நன்மைகளைப் பட்டியல் போட்டு தெரிவித்தார். அவர் குறிப்பிட்டார்.

''இஸ்லாமிய மக்களிடையே உள்ள உலமாக்களுக்கு ரூ. 250 பென்சன் வழங்கும் திட்டம் உலகத்தில் எந்த அரசும் கொண்டு வராத திட்டம் ஆகும். இஸ்லாமியர்கள் ஆளும் நாட்டில் கூட இந்த அரிய திட்டம் இல்லை, தமிழகத்தில்தான் உள்ளது. இதனை நிறைவேற்றி வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் ஆவார்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்:

லமைச்சராக இருந்ததுண்டு. இருந்தும்கூட அவராலேயே இம்மாவட்டத்தைப் பிரிக்கமுடியாத நிலை இருந்ததென்றால் அதற்குக் காரணம் அப்போதிருந்தபோட்டியுணர்வுகளும் போராட்ட உணர்வுகளுமேயாகும். அதையெல்லாம் கடந்து இப்போது இங்கே மூன்று மாவட்டங்கள் மலர்கின்றன. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் அதே பெயரிலேயே மாவட்டத் தலை நகராக அமைகிறதென்றால் இதற்கெல்லாம் மூல காரணமான மாண்புமிகு முதல்வர் அவர்களை நெஞ்சார வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சேதுபதிகள் வகையறாவில் முதன் முதலில் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இங்கே படமாகக் காட்சிதரும் பாஸ்கர சேதுபதி.



இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் திரு எம். பழனியாண்டி குறிப்பிட்டார்:

''உலகத்திலேயே ஓர் ஆண்டில் அதிகமான நாட்கள் மீன் கிடைக்கும் பகுதி இராமேஸ்வரம் தீவில் உள்ளது. அந்த இராமேஸ்வரம் தீவு இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளது என்பது சிறப்புக்குரியது. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்று பாடிய தாயுமானவர் வாழ்ந்த பகுதியும் இதுதான்.''

அடுத்து உரையாற்றிய அ.இ. அ.தி.மு.க. பொதுச் செயலர் திரு. ப. உ. சண்முகம் உரையாற்றுகையில், ''தழைக்கட்டும் புதிய மாவட்டம்; ஒழியட்டும் வறுமை; வளரட்டும் தமிழ்'' என்று கூறினார்.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்

''புதிய தொழில்கள் தொடங்க வேண்டும் என்றால் தொழிலே இல்லாத மாவட்டங்கள் வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த் மாவட்டப் பிரிவினைகள் மூலம் பெருந் தொழிலே இல்லாத மாவட்டங்கள் உருவாக வாய்ப்பிருக்கிறது. அதற்காகத்தான் நமது முதல்வர் சிறு சிறு மாவட்டங்களை உருவாக்கி - தென்னகத்திற்கே சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார். மற்ற மாநில முதல்வர்கள் நமது புரட்சித் தலைவரைப் பின்பற்றுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் தெரிவித்தார்:

"இந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரே முத

இந்துமதத்தைப் பற்றிச் சர்வமும் உணர்ந்திருந்த அவர் வ. உ. சி. கப்பல் கம்பெனி துவக்கியபோது ஒரு இலட்ச ரூபாய் பங்கு கொடுத்த சிறந்த தேசிய வாதியும் ஆவார். அவர் பிறந்த மண்ணில் மாவட்டத் தலைநகரம் அமைவதை வரவேற்று வாழ்த்துகிறேன்''.

அடுத்து, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் நன்றியுரை ஆற்றியபோது, ''மாண்புமிகு முதல்வர் அவர்களின் ராஜதந்திர முறையிலே இந்த மாவட்டம் மலர்ந்திருக்கிறது'' என்றார்.

நிகழ்ச்சியின் இறுதியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர்எம்.ஜி. ஆர். அவர்கள் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார் ;

''இராமநாதபுர மாவட்டம்

மூன்றாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் எங்கே தோன்றியது என்பதைக் குறிப்பிட வேண்டியது எனது கடமை.

"முத்துராமலிங்கத் தேவர் பெயரில் மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோதுதான், மாவட்டத்தை 3 ஆகப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

"பிரச்சினை பூதாகாரமாக எழுந்தபோது, முன்பு ஆட்சியில் இருந்தவர்களால் இதைச் சந்திக்க முடியவில்லை. பிரித்தால் என்ன நேருமோ, வாக்குகள் கிடைக்காது போய்விடுமோ என்ற கருத்தால்தான் இத்தனை காலதாமதமாகியது என்பதைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

"நண்பர் ராமசாமி ஒரு குழுவினரை அழைத்து வந்தார். அவர்களில் ஆதிதிராவிடர்கள் இருந்தனர். முக்குலத்தோர் இருந்தனர்; முஸ்லீம் சமுதாயத்தினர் இருந்தனர். அவர்களிடம் நான் கலந்துரையாடினேன். சற்றுப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். இதை, நிருவாக வசதியை மனத்தில் கொண்டு மூன்று பகுதியாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்து எனக்குத் தோன்றியது. என்றாலும் அந்த முடிவை மேற்கொள்ளப் பல மாதங்கள் தேவைப்பட்டன.

ஆதிதிராவிட சமுதாயத்தவர் கோரிக்கையை எழுப்பினர். ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த தில்லையாடி வள்ளியம்மை பெயரால் ஒரு மாவட்டம் அமைய இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் உண்டோ இல்லையோ, இங்கே ஆதிதிராவிட இனப் பெண்மணியின் பெயரால் மாவட்டம் அமையப் போகிறது.

மாவட்டப் பிரிவினைகள் நிருவாக வசதிகளை முன்னிட்டு ஏற்படுகின்றன என்றாலும், மாவட்டம் வளர்ந்தாக வேண்டும். கல்வி, தொழில் ஆகியவை சிறந்தோங்க வேண்டும் என்ற அடிப்படையிலும்தான் உருவாக்கப்படுகின்றன.

மாவட்டப் பிரிவினை ஒரு ஜாதிக்காக அல்ல - ஒரு கட்சியினருக்காக அல்ல—ஒரு இனத்தவருக்காக அல்ல— மக்களுக்காக! எத்தனை ஆண்டுக் கனவு இப்போது நிறைவேறுகிறது!


முன்பு தன்னிறைவுத் திட்டம் துவக்கிச் சில காரியங்களை நாங்கள் ஆற்றி வந்தோம். சில காலத்திற்குள் வெளியேற்றப்பட்டோம்.

மறுபடி தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகளை ஆற்றி வருகிறோம். அதிகாரிகளும் எங்களுக்கு நல்ல வகையில் மனப்பூர்வமாக ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அதன் காரணமாக சுலபமாகப் பணி செய்ய முடிகிறது.

எந்தத் திட்டம் மக்களுக்கு நன்மை அளிக்குமோ அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற நாங்கள் முற்பட்டு வருகிறோம்.

சேது சமுத்திரத் திட்டம் குறித்து இங்கே சொல்லப்பட்டது. அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

துணை ஜனாதிபதியாக தமிழகத்தைச் சேர்ந்தவர் வர வேண்டும் என்று சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டார்கள். காலம் கனிந்து வரும் சூழ்நிலை உள்ளது. இது குறித்து நாளையே இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறேன். அவர் இது குறித்துச் சிந்திப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.



மாவட்ட அமைப்புகளுக்காக விழாக்கள் நடத்தப்படுவது-மக்களுக்குப் பல உண்மைகள் உணர்த்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான்! மாவட்டத்தை சிறந்த மாவட்டமாக மாற்ற, இளைஞர்கள் உதவி செய்ய வேண்டும்.

தமிழகம் கேரளத்தைப்போல் படித்தவர்கள் அதிகம் உள்ள மாநிலமாக உருவாகும் நிலை ஏற்பட வேண்டும். அதற்கு என்னால் முடிந்ததை எல்லாம் செய்வேன்-உங்கள் ஆதரவு இருக்குமானால்!"

இராமநாதபுரம் மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழாவின் இறுதி நிகழ்ச்சியாக செல்வி சுவர்ணமுகி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்டத்திற்கு தலைநகரம் கிடைத்ததால் முகவைச் சீமை மக்கள் தலை நிமிர்ந்து காணப்படுகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது!

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**தமிழ்ப்பித்தன்**

## பாஸ்கர சேதுபதி

பாஸ்கர சேதுபதி உடல் நலிவுற்று, மரணப் படுக்கையில் படுத்திருந்த நேரம். அப்போது கூட அவரது கலை உணர்வு மங்கவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த முத்தையா பாகவதர் என்பவரை வரவழைத்து, மோகனத்தில் பாடும்படி கேட்டுக்கொண்டார்.


அவர்பாடினார். அவர் பாடப்பாட, இசை, மன்னரின் செவியைத்தொடத்தொட, கானத்தோடு கானமாக, கண்ணை மூடினார் பாஸ்கர சேதுபதி.

## கோவையிலும் இராமநாதபுரம்

மற்றப் பாளையத்து மன்னர்கள் தமது நாட்டுக்குப் படை வீரர்கள் தேவைப்பட்டால் சேதுபதி மன்னர்களிடம் தெரிவிப்பார்களாம் சேதுபதி மன்னர்கள் உடனே படை வீரர்களை அனுப்பி வைப்பார்களாம். ஒரு முறை கொங்கு மன்னர்களுக்குப் படை வீரர்களை அனுப்பி வைத்தார் சேதுபதி. அந்தப் படையினர் கோவையில் சென்று தங்கிய பகுதி இன்றும் இராமநாதபுரம் என்ற பெயரில் வழங்கப்படுகிறது.



# பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்



இராமநாதபுரம் மாவட்டமானது; காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டதல்லவா? அவற்றில் மூன்றாவதான பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் அமைப்புப் பணிகள் தொடக்க விழா, 17.7.'84 செவ்வாய்க் கிழமையன்று சிவகங்கையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

சிவகங்கை கோட்டாட்சித் தலைவர் அலுவலகத் திடலில் அமைந்திருந்த மருதுபாண்டியர் அரங்கத்தில் அன்று காலை 9 மணியளவில், காளையார் கோயில் டி என் ராஜரத்தினம் குழுவினரின் நாதசுர இசையோடு விழா தொடங்கியது. அதைத் தொடர்ந்து கவிஞர் திரு சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் புகைப் படங்கள் கொண்ட கண் காட்சியை கவியோகி சுந்தானந்த பாரதியார் திறந்து வைத்தார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.கே.எம்.ராஜு முன்மொழிய, திரு. எம்.நடராசன் வழிமொழிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் விழாத் தலைமையேற்றார். அவர் தமது தலைமை உரையில் -''சிவகங்கைச் சீமைக்கெனத் தனித்தனி இயல்புகள், வழிவழிப் பெருமைகள் ஏராளம் உண்டு. உக்கிரப் பெருவழுதி காலத்திய பழங் கோயிலொன்று இங்குள்ளது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்தனித் தத்துவத்தைப் பாடிய கணியன் பூங்குன்றனார் பிறந்த அல்லூர் இந்த மாவட்டத்தைச் சேர்ந்ததுதான். ஒக்கூர் மாசாத்தியார், நட்புக்கு இலக்கணம் வகுத்த பிசிராந்தையார், விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளாகத் திகழ்ந்த மருதுபாண்டியர் போன்றோரைப் பெற்றுப் பெருமை கொண்டதும் இம்மாவட்டமே. முருகப் பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்டு ஆன்மிகத்தில் பெரும் சடுபாடுடைய வீரத்திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பெயரால் அமைகிற இந்த மாவட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக வளரவும், வளமெலாம் பெறவும் வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டார்.


மாண்புமிகு ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. திருச்சி சௌந்தரராசன் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தப் பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது இன்று. அதற்கு இந்த மாபெரும் கூட்டமே காட்சி. கந்தர் சஷ்டியிலே பிறந்த தேவரால் இந்த மண் பெருமை பெற்றது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பிறந்தது இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பசும்பூண் என்ற ஊரில் என்பார்கள். அந்தப் பசும்பூணே பசும்பொன் ஆகியிருக்கவேண்டும் அங்கே பிறந்த முத்துராமலிங்கத் தேவர் தமிழிலும் ஆன்மிகத்திலும் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும் ஆற்றல் படைத்தவராக இருந்தார். ஒரு காலத்தில், காங்கிரஸ் கட்சியில் வெற்றிக்கெல்லாம் அவர் காரணமாக இருந்தார். சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் ஆணித்தரமாக வாதங்களை எடுத்து வைத்தார். அந்தப் பெருமகனார் வாழ்ந்த காலத்திலே நாம் வாழ்ந்தோம்; இது நமக்குப் பெருமை. அவர் பெயரால் மாவட்டம் அமைத்துப் பெருமை கொள்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலான தமிழக அரசு.''

நிகழ்ச்சித் தொகுப்பு :
**'இந்திரன்'**



கவியோகி சுத்தானந்தபாரதியார் பேசுகையில், ''சிறுவயது முதற் கொண்டே எளிய வாழ்க்கையும் பெருகிய சிந்தையும் கொண்டிருந்தார் முத்துராமலிங்கத்தேவர். முதல் சுதந்திரப் போராட்டம் முதலில் இந்த மண்ணிலேதான் துவங்கியது. வீரப் பெண்மணி வேலுநாச்சியார், பகைவரை வெற்றிகண்டு தனிக் கொடி ஏற்றிய கோட்டை இப்போதும் இங்கிருக்கிறது. அதில் இராணுவக் கல்லூரி ஏற்படுத்தலாம். முத்துராமலிங்கத் தேவர் இப்போதிருந்தால், நிச்சயம் நம் முதல்வர் புரட்சித்தலைவர் பக்கம்தான் இருப்பார். அவர் பெயரால் ஒரு தனி மாவட்டம் அமைவதை நான் மனமார வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டார்.



இதைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில்-பேராசிரியர் டாக்டர் ப.இராமன், டாக்டர் சு.ப. அண்ணாமலை, செல்வி கு.மங்கையர்க்கரசி, கவிஞர் மீரா ஆகியோர் பங்கேற்றனர். அவர்கள் முறையே, வீரத்திருமகன் தேவர், தேவர்கண்ட ஆன்மீகம் மாவீரர் மருதுபாண்டியர், 'செந்தமிழ் வளர்க்கும் சிவகங்கைச்சீமை' ஆகிய தலைப்புகளின் கீழே அரிய உரை நிகழ்த்தினர்; பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மலர்வதைவரவேற்று வாழ்த்துரைத்தனர்.

திரு. 'சோமலெ' பேசுகையில் —'இம் மாவட்டத்திலுள்ள தமிழர்கள் இலங்கைத் தமிழர்க்கும் இந்தியத் தமிழர்க்கும் பாலமாக உள்ளனர்; கடல்கடந்து வாழும் தமிழர்கள் அதிகம் உள்ள மாவட்டம் இது. இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாலேதான் சீன மொழியிலும் பர்மிய மொழியிலும் திருக்குறள் வெளியிடப்பட்டது. விவேகத்திலும் வீரத்திலும் சிறந்ததாகப் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் திகழும் என்றார்''.

காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றபின், மாவட்டத் திட்ட அலுவலர் திரு. அலாவுதீன்,இ.ஆ.ப. நன்றி கூறினார்.

**மாலை நிகழ்ச்சிகள்:**

அன்று மாலை 3 மணியளவில், ராஜா மேல்நிலைப் பள்ளியிலிருந்து மிகப்பெரும் ஊர்வலமொன்று புறப்பட்டது. மாணவ மாணவியரும், பொது மக்களும், நாட்டுப் புறக் கலை நிகழ்ச்சிக் குழுவினரும் பங்கேற்ற இந்த ஊர்வலம் 5 மணியளவில் மருது பாண்டியர் அரங்கம் வந்து சேர்ந்தது.

திரு. ஏ.கே.சி. நடராஜன் குழுவினர் கிளாரினெட் இசையோடு நிகழ்ச்சிகள் தொடங்கின.


செய்தி, மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு. ஆர்.கே.கிருஷ்ணமூர்த்தி முன்மொழிய, மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு. ஏ.பன்னீர் செல்வம் வழிமொழிய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் திரு கா. காளிமுத்து விழாத் தலைமை ஏற்றார்.


பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட அமைப்புப் பணிகள் குறித்த அறிக்கையைத் தமிழக அரசு தலைமைச் செயலர் திரு கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப. படித்தார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எஸ்.டி.சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து விழாவில் பங்கேற்ற அனைத்துக் கட்சித்தலைவர்களுக்கும் விழாக் குழுவின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் திரு கா. காளிமுத்து தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:

''புதிதாக மூன்று மாவட்டங்கள் மலர்கின்றன; எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றீர்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் விருதுநகர் விருது பெறுகிறது; சிவகங்கை சிறப்புக் கங்கையா





கிறது; இராமநாதபுரம் இழந்த புகழை மீண்டும் பெறுகிறது. மூவேந்தர்களுக்குப் பிறகு தனிக் கொடி போட்டு ஆண்டது சேதுபதி பரம்பரையும் சிவகங்கைப் பரம்பரையும்தான். தமிழிலக்கியத்திலே மட்டுமல்ல; ஆங்கிலப் புலமையும் பெற்றிருந்தவர் முத்துராமலிங்கத் தேவர்; ஒரு சமயம் மூன்று மணிநேரம் அவர் பேசிய ஆங்கிலத்தைப் பார்த்து, சர்.சி.பி.ராமசாமி ஐயரே வியந்து பாராட்டியதுண்டு. இப்படி விவேகத்தாலும் வீரத்தாலும் இணையற்றுத் திகழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரால் அமையும் இநத மாவட்டம் அரசின் அரவணைப்பில், வியத்தகு வளர்ச்சியை விரைவிலே காணும்.!''



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் உரைக்குப் பின், முற்போக்கு முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திரு செங்கம் ஜப்பார் பேசுகையில்-''தான் பிறந்த ஐந்தாறு மாதத்திலேயே தாயைப் பறிகொடுத்த பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாலூட்டி வளர்த்தவர் ஒரு முஸ்லீம் தாய் என்பதைத் தெரிவிப்பதிலே பெருமையடைகிறேன். அவர் பெயரால் மாவட்டம் காணும் மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்து மகிழ்கிறேன்'' என்றார்.

அவரையடுத்து - அம்பேத்கார் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த, திரு நெல்லை சொல்லழகன், இந்தியக் குடியரசுக் கட்சி சார்பாகத் திரு சக்திதாசன், திராவிடர் கழகத் தலைவர் திரு.திருவாரூர் தங்கராசு, கிறிஸ்துவ ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு.கிளமண்ட், விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்பில் திரு. தனுஷ்கோடி ராஜா, திரு.



மார்க்க பந்து, திரு.கூத்தக்குடி சண்முகம், திரு.செய்குத்தம்பி. திரு.உ.சுப்பிரமணியம். தொழிற் சங்கத் தலைவர் திரு.குசுப்பு, ஜனதா கட்சித் தலைவர் திரு. பி.முகமது இஸ்மாயில் எம்.எல்.ஏ., திரு.எம்.பழனியாண்டி, காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் எம்.எல்.ஏ. ஆகியோர் மலர்நத பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்குத் தமது வாழ்த்துரைகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு.ஆர்.வி.சுவாமிநாதன் பேசும்போது ''இந்த மாவட்டத்தைப் பிரிக்க நீண்ட காலத்திற்கு முன்பே முயற்சி எடுக்கப்பட்டதென்றாலும், அதை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்'' என்றார்.

சிறு சேமிப்புத்திட்டத் துணைத் தலைவர், இலட்சிய நடிகர் திரு. எஸ்.எஸ். இராசேந்திரன், எம்.எல்.ஏ. பேசுகையில் தனக்கு ராஜேந்திர பாண்டியன் என்று பெயரிட்டவரே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்தான் என்றுகூறி, அவரது சிறப்பியல்புகளை விளக்கினார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்



புதிய மாவட்ட அமைப்புப் பணி விழா ஏற்பாடுகள் வருவாய் நிருவாக ஆணையர் திரு ஏ.பத்மநாபன், இ.ஆ.ப. தலைமையில் சிறப்பாகச் செய்யப் பட்டிருந்ததைப் பாராட்டும் வகையில், அவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சாவூர்த் தட்டைப் பரிசளித்தார்.

வேற்றுக் கழகப் பொதுச் செயலாளர் திரு. ப.உ.சண்முகம் ஆகியோரும் புதிய மாவட்டம் பற்றிப் புகழ்ந்துரைத்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, தியாகி திரு.எஸ். என்.சோமையாஜுலு பேசினார். தேவரோடு நெருக்கமான நட்புக் கொண்டிருந்த அவர் முத்துராமலிங்கத் தேவரின் தெய்வ வழிபாடு, அரசியல் ஈடுபாடு, பார்வர்டு பிளாக் கட்சியின் தோற்றம், எளிமையாய் வாழ்ந்து அவர் கண்ட முன்னேற்றம் ஆகியவைபற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றி எல்லோரது நெஞ்சத்தையும் தொட்டார்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட அமைப்புப் பணிகளுக்கான அடிக்கற்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்துவைத்தார்.

மாவட்டப் பொதுமக்களின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு திரு.உ.சுப்பிரமணியம் நினைவுச் சின்னம் வழங்க, தவத்திரு குன்றக்குடி அடிகளார் மூலமும் சிவகங்கை நகர மக்கள் சார்பிலும் பொன்னாடைகள் அணிவிக்கப்பட்டன.

''முத்துராமலிங்கத் தேவரும் காமராசரும் அமராவதி சிறையிலே ஒன்றாக இருந்தார்கள். இருவருமே கல்யாணம் செய்து கொள்ளவில்லை'' என்று தொடங்கித் தமது தேன்தமிழ் உரையைத் தெளிவுபட நிகழ்த்தினார், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.

காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்ட நிகழ்ச்சிகளும் சிறப்புற நிகழ அரசு அலுவலர்களை ஊக்குவித்து அயராது உழைத்த - வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் திரு ஏ.பத்மநாபன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.குருமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ண பாரதி ஆகியோருக்கும் -விழாச் சிறப்புக்குப் பெரிதும் பாடுபட்டு அமைதி ஒழுங்கு காத்த காவலர்களுக்காக டி.ஐ.ஜி. திரு வீரராகவனுக்கும், அரங்குகள் அமைய உதவிய பொதுப்பணித் துறைக்



காகத் திரு. மல்லிகார்ஜுனனுக்கும், மின்வசதி செய்துதவிய மின் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் (மேற்கு) திரு.எச்.மகேஸ் வரலால், மேற்பார்வைப் பொறியாளர் (கிழக்கு) திரு.ஏ.கே.அப்துல் ஜப்பார் இருவருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலைநுணுக்கம் அமைந்த தஞ்சாவூர்த்தட்டுக்களைப் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார். ஊர்வலச் சிறப்பிற்குக் காரணமான கல்வித் துறை அதிகாரிகளையும் அவர் பெரிதும் பாராட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது விழாப்பேருரையின் போது குறிப்பிட்டதாவது;



''இப்படிப்பட்ட விழாக்களில் எல்லாக் கட்சிக்காரர்களும் பங்கேற்க வேண்டும்.

''காரைக்குடி அழகப்பா கல்லூரியைப் பல்கலைக் கழகம் ஆக்க வேண்டும் என்று கூறினார்கள். அண்ணா பிறந்த நாளில் இருந்து, டாக்டர் அழகப்பா பல்கலைக் கழகம் துவக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

''விழா நடைபெறுகிற 250 ஏக்கர் கொண்ட இந்த இடம் மருது பாண்டியன் நகர் என்று அழைக்கப்படும். இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், நீதிமன்றம் போன்றவைகள் உருவாக்கப்படும்.

''புதிதாக அமைகிற இந்த மாவட்டத்தின் எல்லையில் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளுவதற்காக பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் திருவுருவச்சிலை வைக்கப்படும். அதனருகே 'மார்பிள்' கல்லில் அவரது வரலாற்றுக் குறிப்புகள் பொறிக்கப்படும். இதேபோல், இராமநாதபுரம் மாவட்டத்தின் எல்லையில் சேதுபதி சிலை வைத்து வரலாறு குறிக்கப்படும். காமராசர் மாவட்ட எல்லையில் அவரது சிலை வைத்து வரலாறு எழுதப்படும்.

''ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க என்பார்கள். அந்த வகையிலேயே இந்தப் புதிய மாவட்டங்கள் மலர்கின்றன. 'பதவி வரும்போது பணிவு வர வேண்டும்' என்றொரு பாடலுக்கு நான் வாயசைத்திருக்கிறேன்... அந்த வகையிலேயே என் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டிருக்கிறேன்.

''குழந்தைகள் படிப்பிலே கவனம் செலுத்தும் எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது; அது நாட்டுக்கு நல்லதல்ல.''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் நன்றி கூறினார்.

விழா முடிந்ததும், கலைமாமணி டாக்டர் சீர்காழி திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதற்குப் பின்னர் கவிஞர் கண்ணதாசன் எழுதித் தயாரித்த 'சிவகங்கைச் சீமை' திரைப்படம் திரையிடப்பட்டது.

# மதுரை மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர்



மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் பல்வேறு பணிகளைத் துவக்கி வைத்தார். அமைப்புக்களைத் திறந்து வைத்தார்.

ஆண்டிப் பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், கடமலைக்குண்டு வெள்ளிமலை 41 கிலோ மீட்டர் நீளச் சாலை அமைக்கும் பணியை மாண்புமிகு முதல்வர் துவக்கி வைத்தார். (18.7.84.)

30 சிறு கிராமங்களை இணைப்பதாக அமையும் இந்தச் சாலை மூலம் பத்தாயிரத்திற்கும் மேலான மக்கள் பயன்பெறுவர். 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இச்சாலை அமையும்.

மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் இந்தப் பணியோடு, ரூ. 8,85,000 மதிப்பீட்டில் உருவான 12 சமுதாயக் கூடங்கள், ரூ. 1,28,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் துவக்கிவைத்தார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி.சந்திரலேகா இ.ஆ.ப., வரவேற்புரையோடு தொடங்கிய இவ்விழாவில் தேசிய நெடுஞ்சாலைத் துறைதலைமைப் பொறியாளர் திரு. சி. இராமநாதன் பெரியகுளம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. அ. இராமதாஸ் இருவரும் அறிக்கை படித்தனர்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு சத்துணவு-நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு ப.குழந்தைவேலு பேசுகையில் ''பிற மாநிலங்களும் மத்திய அரசும் பாராட்டுமளவில் தமிழகத்தில் ஆட்சி நடக்கிறது; புரட்சித் தலைவர் காலமே நமக்கெல்லாம் பொற்காலமாகும்'' என்றார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழு துணைத் தலைவருமான இலட்சிய நடிகர் திரு.எஸ். எஸ்.இராசேந்திரன் ''ஆண்டிப்பட்டி தொகுதி, ஆண்டவனால் கைவிடப்பட்ட தொகுதி என்பார்கள்; அப்படியே இருந்தாலும் அரசினால் இது கைதூக்கிவிடப்பட்ட பகுதியாகும்'' என்று தம் உரையில் குறிப்பிட்டார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஆர்.ஜெயராமன், இரா.முத்தையா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் ஆகியோரைத் தொடர்ந்து பேசுகையில்-''இதற்கு முன்னால் அரசாண்டவர்கள் கைவிட்ட பணிகளையெல்லாம், எடுத்து நிறைவேற்றி முடிக்கும் சக்தி மாண்புமிகு புரட்சித் தலைவருக்கே உண்டு. வரலாறே போற்றும் அவரை யாரோ சில ஏனோதானோக்கள் திட்டுவது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை'' என்றார் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து.

விழாப் பேருரை நிகழ்த்துகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''ஆண்டிபட்டியைத் தாய்ப் பாசத்தோடு கவனித்துவரும் மாவட்ட ஆட்சித் தலைவரை நான் பாராட்டுகிறேன்.

''சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு அடுத்த ஆண்டுமுதல் இலவசச் சீருடை வழங்கப்படும். 1937 முதல் அரசியலில் இருக்கும் என்னைத் தவறாக விமர்சிப்பவர்கள் ஏமாந்துபோவார்கள்.

இராமநாதபுரம் புதுக்கோட்டை மக்களுக்கு குடிநீர்வசதி செய்யக் கேரளாவிடம் தண்ணீர் கேட்டுப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதற்கு ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகலாம். தண்ணீருக்குப் பதில் அரிசி தருவது குறித்தும் பேசிவருகிறோம்.

''படித்த இளைஞர்கள் ஒன்று கூடி ஒரு குழுவாக சாலைபோடுவது போன்ற பணிகளை எடுத்து நடத்த முன்வந்தால் அவர்களுக்கு அரசு உதவத் தயாராக இருக்கிறது. இப்போதெல்லாம் பெண்கள் நன்றாகப் படித்து வருகிறார்கள்; பத்தாண்டுகளில் ஆண்களெல்லாம் கூடி, பெண்களுக்குள்ள உரிமை எங்களுக்கும் வேண்டும் என்று வாதாடும் நிலைமை வந்து விடும்போலிருக்கிறது. எனவே, எல்லோரும் நன்றாகப் படிக்க வேண்டும்''.

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் உரைநிகழ்த்தினார்.

விழா முடிவில் -கண்காணிப்புப் பொறியாளர் (மலைச்சாலைகள்) திரு. ர. சு. ரங்கசாமி சௌரிய சக்ரா நன்றி கூறினார்.

**கூட்டுறவு நூற்பாலை:**

கண்டமனூர் விலக்கு அருகில் ரூ. 714 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தேனி கூட்டுறவு நூற்பாலை மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் சுமார்700 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு.



எஸ். திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொழில் துறைஆணையர் மற்றும் செயலர் திரு. செல்வராஜ் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்.

சிறுசேமிப்புத் திட்ட ஆலோசனைக் குழுத்துணைத் தலைவர், இலட்சிய நடிகர் திரு.எஸ்.எஸ். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் எம்.பி., ஆகியோரைத் தொடர்ந்து- மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் பேசுகையில்- ''ஏழை எளிய மக்களின் நலன் கருதி, தமிழ்நாட்டுக் கிராமங்களின் வளம் கருதியே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்களைத் தீட்டி வருகிறார். எந்த நல்லகாரியத்தைச் செய்தாலும் தடுப்பது, பழிசுமத்துவது என்ற நிலை நீடிக்குமானால் நாட்டில் எந்த நல்லபணிகளுமே நடக்காமல் போய்விடக் கூடும் என்பதை ,அப்படிச் செய்பவர்கள் உணரவேண்டும்'' என்றார்.

நூற்பாலையைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''இந்த ஆலை அறிஞர் அண்ணா கூட்டுறவு நூற்பாலை என அழைக்கப்படும் என்றார்.

மேலும் அவர் பேசுகையில்- ''இந்த நூற்பாலையில் அரசு வைத்துள்ள விகிதாச்சார முறைப்படிதான் ஆட்கள் வேலையில் அமர்த்தப்படுவார்கள்; இந்த வட்டார மக்களுக்கு முன்னுரிமை தரப்படும். கைத்தறி நெசவாளர்கள் அதைக் குலத்தொழிலாகக் கருதி, குழந்தைகளையும் ஈடுபடுத்திவரும் நிலை மாறவேண்டும் ;அவர்கள் நன்கு படிக்க வேண்டும் கட்சி, மதம், சாதிகளுக்கு அப்பாற்பட்ட கல்வி வளர்ச்சிக்கு நாம் முயலவேண்டும்'' என்றார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றி கூறினார்.

**புதிய குடியிருப்பு**

தேனி தொகுதியில் புதிதாக உருவாக்கப்பட்ட 368 குடியிருப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் (19.7.84) திறந்து வைத்தார்.

ரூ.58 இலட்சம் செலவில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடியிருப்புத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர். ராதா தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு வீட்டுவசதிவாரியத் தலைவர் திரு. ஏ. செல்லையாத் தேவர் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எஸ்.முத்துசாமி, சிறுசேமிப்புத் திட்ட



ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர்இலட்சிய நடிகர் திரு. எஸ். எஸ். ஆர். எம்.எல்.ஏ., திரு. வி. ஆர். ஜெயராமன், எம். எல். ஏ., திரு. இரா. முத்தையா எம். எல். ஏ., ஆகியோர் உரையாற்றினர்.

'நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி நகர்' என இந்தக் குடியிருப்புகளுக்குப் பெயரிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சொல்லுவது எளிது. செய்வது கடினம்; வாய்ச்சொல் வீரனாக இருக்க நான் தயாரில்லை; முடியும் என்றால் சொல்வேன்: நினைத்ததை முடித்துக்காட்டுவேன்.

''விவசாயிகளுக்குக் கட்டணமின்றி மின்சாரம் வழங்கமுடியுமா என்பதைப் பற்றி இரவுபகலாகச் சிந்தித்து வருகிறோம். 1977 முதல் 1984 வரை, இந்த அரசு 59,328 வீடுகளைக் கட்டியிருக்கிறது.

''அடுத்த ஆண்டு அண்ணா பிறந்த நாளில் -செப்டம்பர்15ம் நாள் மீண்டும் மது விலக்குஅமல் படுத்தப்படும்''.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர்பேசினார்.

## பெரியார் கால்வாய்

தேனி அருகே உள்ள தாடிச்சேரியில் சமமட்டக் கால்வாய் ஒன்றைத்திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கால்வாய்க்குப் 'பெரியார் கால்வாய்' என்று பெயரிட்டார்.

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு.ஒய்.எஸ். எம்.யூசுப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு வி. ஆர். ஜெயராமன் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா.காளிமுத்து, திரு.இரா.முத்தையா எம். எல்.ஏ. திரு. ஆர்.டி.கோபாலன், எம்.எல்.ஏ., திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் எம்.பி., ஆகியோர் உரையாற்றிய பின்னர், தலைமைப் பொறியாளர் திரு.டி.கே. விசுவநாதன் திட்ட விவர அறிக்கை படித்தார்.

கால்வாயைத் திறந்துவைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தக் கால்வாய் கட்டப்பட்டதன் மூலம் ஏழாயிரம் எட்டாயிரம் டன் அரிசி உற்பத்தி அதிகரிக்கும். அத்துடன், எத்தனையோ பேருக்கு வேலையும் கிடைக்கும்.

''என் மனம் தளராத வரையில், நீங்கள் பதவியில் வைத்திருக்கும் வரையில் நான் உங்களுக்காக உழைப்பவன். நாங்கள் திட்டங்களை ஓட்டுகளுக்காகப் போடுவதில்லை. பின் சந்ததியினரை நினைத்தே போடுகிறோம்'' —இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

—ராஜா


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


# கோ ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைகள் ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கும் அழகோவிய சேலைகள்...



ஏணைக் கவரும் கைத்தறித் துணிகள்
ண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
ளிர் அனைவரும் விரும்பும் அருமை
மை இழையும் ஆடைகள் ஆயிரம்
கைகள்···அழகார்ந்த ரகங்கள்
னைத்தும் உண்டு !

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி









Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676